“

இறை நம்பிக்கை கொண்டோரே!

மது பானமும், சூதாட்டமும், கற்சிலைகளை வழிபடுதலும், அம்புகள் எறிந்து குறி கேட்பதும், ஷைத்தானின் அருவருக்கத்தக்க செயல்களில் உள்ளவையாகும். ஆகவே இவற்றை நீங்கள் தவிர்த்துக் கொள்ளுங்கள். அதனால் நீங்கள் வெற்றியடைவீர்கள்!

(அல்குர்ஆன் 5 : 90)

”


அயோத்தியாவில் புதுப்பிக்கப்படும் மஸ்ஜித்துகள் - 7

பாபரி மஸ்ஜித் – சிதம்பரம் சொல்லும் சிதம்பர ரகசியம் - 10

அயோத்யாவில் அடாவடி - 15

பாபரி மஸ்ஜித் அனைத்து வழக்குகளிலும் தொடர்புடைய ஹாசிம் அன்சாரி மரணம் - 18

எது முதலில் - 20

குடியரசுத் தலைவருக்கு கடிதம் - 24

பரிணாமத்தை மறுதலிக்கும் கண்டுபிடிப்புகள் - 27

மோடி கறுப்புப் பணம் வகை - 32

மதுரை குண்டு வெடிப்பு வழக்குகளும் காவல்துறையும் - 34

காஷ்மீரில் - 50

முஸ்லீம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன? - 52

சட்ட மருத்துவம் - 56



டிசம்பர் - 2016

# வைகறை வெளிச்சம்

ரபியுல்அவ்வல்-1438

ஆசிரியர்

மு. குலாம் முஹம்மது, M.A.,
Journalist & Mass Communication

துணை ஆசிரியர்

கே.எம். இலியாஸ் ரியாஜி, M.A.,

தனி இதழ் : ரூ. 20 /-
ஆண்டுச் சந்தா
உள் நாடு : ரூ. 240 /-
வெளி நாடு : ரூ. 1500 /-
பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
DARUL ISLAM FOUNDATION TRUST
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு 81481 29887



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdication of Chennai courts. Privet circulation to promote the original issue



http:/www.facebook.com/vaigarivelicham

VAIGARAI VELICHAM
52/1, Mannady Street, Room No. 7, Mannady,
Chennai - 600 001. Tel : 81481 29887
Email : darultrust@yahoo.com
Web : www.darulislam.in

# ரிசர்வ் வங்கி அறிவிப்பு.... வங்கிகளில் இஸ்லாமிய சாளரம்....

வட்டி இறைவனால் தடுக்கப்பட்டது என அறிவிக்கப்பட்டது. இதனால் முஸ்லிம்கள் வங்கிகளில் சேரும் வட்டி பணத்தை எடுப்ப தில்லை. அதேபோல் வங்கிகளில் வழங்கப்படும் வட்டியைக் மையமாகக் கொண்டு வங்கிகளில் வைப்புத்தொகையாக ( பணங்களை முதலீடு ) செய்வதில்லை.

இதனால் 5000 கோடி ரூபாய் முஸ்லிம்களின் கணக்குகளில் வங்கிகளில் முடங்கிக் கிடக்கின் றன. இதனை இந்தியாவின் பொருளாதார வளர்ச் சிக்குப் பயன்படுத்திட வேண்டும். அதற்காக இஸ்லாமியப் பிரிவு ஒன்றை வங்கிகளில் ஏற்படுத்திட வேண்டும். அதில் முஸ்லிம்களிடம் முடங்கிக் கிடக்கும் பணங்களைப் அவர்கள் விரும்பும் (“ஹலால்” ஆக) இறைவனால் அனுமதிக்கப்பட்ட தொழில்களில் முதலீடு செய்ய வேண்டும் என்றெல்லாம் திட்டம் கொண்டு வந்தார் முன்னாள் இந்தயிப் பிரதமர் மன்மோகன் சிங். மன்மோகன் சிங்கின் இந்தத் திட்டத்தை இந்துத்துவ வாதிகள் எதிர்த்தார்கள். சுப்ரமணியசாமி வரிந்துக் கட்டிக்கொண்டு இதற் காக உழைத்தார், வழக்குகளைப் போட்டார். தடுத்தார்.

ஆனால் இன்று அவர்களின் ஆட்சியில் மத்திய அரசின் வங்கி என வழங்கப்படும் ரிசர்வ் பேங்க் ஒவ்வொரு வங்கியிலும் ஓர் இஸ்லாமியப் பகுதி ஏற்படுத்தப்படும் என்றும் இதில் இலாபத்தில் அல்லது நஷ்டத்தில் பங்கு என்ற (ஷரீயாவின்) அடிப்படையில் முதலீடு செய்ய ஏற்பாடு செய்யப்படும் என அறிவித்துள்ளது. (செய்தி ஆதாராம் The Hindu Eng. 21.11.2016)

முதலில் மக்கள் அதிகமாகப் பயன்படுத்தும் பொருள்களை உற்பத்தி செய்வதில் முஸ்லிம் முதலீட்டாளர்களின் பணம் முதலீடு செய்யப் படும் என்றும், பின்னர் இதர உற்பத்தி துறை களில் முஸ்லிம்களின் பணம் பயன்படுத்தப்படும் என்றும், அந்த ரிசர்வ் வங்கியின் அறிக்கை குறிப்பிடுகின்றது. இப்படி இஸ்லாமிய நிதி நிர்வாகம் இஸ்லாமிய நிதி முறைமை கொஞ்சம், கொஞ்சமாகப் செயல்படுத்தப்படும் என்றும் அந்த அறிக்கை கூறுகின்றது.

காலப்போக்கில் முழுயைமாக இஸ்லாமிய வங்கி முறையாகிய இலாபம் – அல்லது நஷ்டத்தில் பங்கு என்ற முறை இந்தியாவில் செயலில் கொண்டு வரப்படும் என அந்தக் குறிப்பு கூறுகின்றது.

இது சம்பந்தமாக மத்திய வங்கி ஒரு Technical Analysis report எப்படி செயல்படுத்து வது என்பது பற்றிய உள் நுணுக்கங்களை கொண்ட ஆய்வறிக்கை தயார் செய்து மத்திய நிதி அமைச் சகத்திற்கு அனுப்பியுள்ளது.

பிரஸ் டிரட்ஸ் ஆஃப் இந்தியா என்ற செய்தி நிறுவனம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மத்திய வங்கியிடம் கேட்டபோது கிடைத் தத் தகவல்கள் இவை.... (ஆதாரம் தி இந்து 21.11.2016)

வட்டி இல்லா பொருளாதாரம் அதாவது இஸ்லாமியப் பொருளாதாரம் சுரண்டலும், கறுப்புப் பணமுமில்லாத ஒரு பொருளாதார முறை என்பதை அனைவரும அறிந்து தெரிந்திட வேண்டிய காலம் இது. ஏனெனில் இந்தியா வின் பொருளாதாரம் என்று மில்லாத ஒரு பெரும் நெருக்கடியை எதிர் கொண்டு வருகின்றது. குரங்கின் கையில் பூமாலைச் சிக்கிக் கொண்டது.

இந்திய வரலாற்றில் இந்தியாவை ஒரு பொருளாதார வல்லரசாக மாற்றியவர் அவ்ரங்க ஜேப் அவர்கள் என்பது வரலாறு. அவருடைய ஆட்சிக்காலணுதில் வட்டியில்லா வங்கி முறை செயலிலிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆம், இந்தியாவை பொருளாதார வல்லர சாக மாற்றிட இஸ்லாமிய பொருளாதார வழி காட்டுதல்கள் மட்டுமே ஒரே வழி. இதனை

நமது மத்திய வங்கி "Shariat Finance" ஷரீயத் நிதிமுறை என்றே அழைக்கின்றது. இதுதான் சரியான சொல்லாட்சி. "The Hindu - 21.11.2016"

இஸ்லாத்தின் பொருளாதார வழிகாட்டு தல்களைப்போல் இதர வழிகாட்டுகளும் மனி தனின் இவ்வுலக வாழ்க்கைக்கும் மரணத்திற்குப் பின்னால் வரும் வாழ்க்கையிலும் வெற்றிகளைப் பெற்றுத் தரும். அந்த வாழ்க்கை வழிகாட்டு களையும் அறிந்து, ஆய்ந்து செயல்முறை திட்டங் களை வகுத்துச் செயல்படுத்திட வேண்டும். இதையே நாம் நமது தலையங்களில் வலியுறுத்தி வருகின்றோம்.

இறைவன் 1400 ஆண்டுகளுக்கு முன்பாக இப்படிப் பிரகடனப்படுத்தினான்.

*"இன்றைய தினம் உங்களுக்கு உங்கள் மார்க் கத்தைப்பரிபூரணமாக்கிவிட்டேன். மேலும்நான் உங்கள் மீது என் அருள்கொடையை நிறைவாக்கி விட்டேன். இன்னும் உங்களுக்கு நான் இஸ்லாம் மார்க்கத்தையே தேர்ந்தெடுத்துள்ளேன்" (5:3)*

*"நிச்சயமாக அல்லாஹ் வழி இஸ்லாம். அதுவே நேர்வழி" (2:120)*

### சிலபல ஐயங்கள்

முஸ்லிம்களின் தனித் தன்மைகளை அழித்திட வேண்டும் என்று நீண்ட நெடுங்காலமாக திட்டம் போட்டுச் செயல்பட்டுவரும் சங்க்பரி வார அரசு, ஷரீயத் பொருளாதாரத்தைப் பற்றி பேசுவது எதையோ திசை திருப்பிட என்பதுதான் யதார்த்தம்.

அதேபோல் சம்மந்தமில்லாத ஒரு நேரத்தில் பி.டி.ஐ. செய்தி நிறுவனம் வட்டி இல்லாத வங்கி முறையைப் பற்றி (ஆர்.டி.ஐ.) தகவல் அறியும் உரிமையின் கீழ் தகவல் சேகரிக்க வேண்டிய காரணம் என்ன? அதை இந்துப் பத்திரிகை வெளியிட வேண்டிய காரணம் என்ன?

அதிலும் மோடி பொது சிவில் சட்டத்தை முஸ்லிம்கள் மீது திணிக்க முயற்சி செய்து கொண்டிருக்கும்போது இவையெல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன.

ஏதோ உள்நோக்கம் இருக்கலாம். ஏதாவது ஒரு வகையில் இஸ்லாமிய பொருளாதாரம் இங்கே வரும் என்றால் அதுபல கோடிமக்களை சுரண்டல், ஊழல், ஊதாரித்தனம், பொருளாதார அடிமைத்தனம், கொத்தடிமை முறை ஆகிய வற்றிலிருந்து காப்பாற்றிடும். அதனால் ரிசர்வ் வங்கியின் இந்த முயற்சியை வரவேற்போம். இந்த பொருளாதார அமைப்பின் முழு பலனை யும் அடைய வேண்டும் என்றால் இந்தப் பொரு ளாதார முறையை வழங்கிய இறைவனை ஏற்றிட வேண்டும். அதையும் அவசரமாக ஆலோசிக்க வேண்டும்.

**அல்லாஹ் இவர்களுக்கு நேர்வழியைக் காட்டுவானாக!**

**"மேலும் எவர்கள் நம்முடைய வழியில் முயற்சி செய்கின்றார்களோ! நிச்சயமாக அவர்களை நாம் நம்முடைய நேர் வழியில் செலுத்துவோம். நிச்சயமாக அல்லாஹ் நன்மை செய்வோருடனேயே இருக்கின்றான்." (29:69)**

அஸ்ஸலாமு அலைக்கும் நமது MIMS ன் மருத்துவ விழிப்புணர்வு நிகழ்ச்சி வைகறை வெளிச்சம் என்னும் இஸ்லாமிய பத்திரிக்கையில் இரண்டு பக்க செய்தி யாக இந்த மாத பதிவில் வெளியாகி உள்ளது. நமது மருத்துவ சேவையின் செயல்பாடுகளையும் மருத்துவ முகாமை யும் பற்றி நாம் கூறியதை அடுத்து MIMS சைபற்றி தெரிந்து கொள்ளும் ஆர்வத் தோடு மருத்துவ விழிப்புணர்வு முகாமில் கலந்துகொண்ட எனது நண்பர் சுரங்குடி ஜாஃபர் சாதிக் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு செய்தியை பத்திரிக்கைக்கு செய்தியாக கொண்டுசென்றார்.

இச்செய்தியை பத்திரிக்கைக்கு கொண்டுசென்ற ஜாஃபர்சாதிக் மற்றும் செய்தி ஆசிரியர் அப்துல் ஃபாசித் வெளியிட்ட வைகறை வெளிச்சம் பத்திரிக்கைக்கும் நன்றி ஜஸாக்கல்லாஹ் ஹைர்.

# வேர்கள் வெளியீட்டகத்தின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | சிறையில் எனது நாட்கள் - ஜெய்னப் அல் கஸ்ஸாலி - பக்கம் : 212 | ரூ. 90.00 |
| 2. | ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு - மு. குலாம் முஹம்மது | ரூ. 100.00 |
| 3. | சாதி ஒழிந்தது - டி.எம். மணி, ஐந்தாம் பதிப்பு - பக்கம் 132 | ரூ. 50.00 |
| 4. | End of Casteism T.M. Mani பக்கம் -134 | ரூ. 50.00 |
| 5. | அஹமதாபாத் குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் -48 | ரூ. 10.00 |
| 6. | டெல்லி குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் - 48 | ரூ. 10.00 |
| 7. | நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள், மு. குலாம் முஹம்மத் | ரூ. 25.00 |
| 8. | மால்கம் எக்ஸ் - மு. குலாம் முஹம்மது, பக்கம் -231 | ரூ. 80.00 |
| 9. | தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம், டி.எம். மணி, பக்கம் -31 | ரூ. 20.00 |
| 10. | செந்தமிழ்நாட்டுச் சேரிகள்- டி.எம். மணி, பக்கம்:94 | ரூ. 40.00 |
| 11. | கர்கரேயை கொலை செய்தது யார்? பக்கம் 453 | ரூ. 250.00 |
| 12. | சிந்திப்பீர் செயல்படுவீர், நா. கோதண்டபாணி, பக்கம் 47 | ரூ. 15.00 |
| 13. | ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம், ப. கோபால கிருஷ்ணன், பக்கம்-84 | ரூ. 40.00 |
| 14. | சாதி ஒழிந்தது- ஹிந்தி - டி.எம். மணி, பக்கம் - 148 | ரூ. 50.00 |
| 15. | நாம் பிரிந்து விடவேண்டாம், பேராசிரியர் கா.மு. இல்யாஸ் ரியாஜி, பக்கம்-292 | ரூ. 175.00 |
| 16. | தாலிபானின் பிடியில், மு. குலாம் முஹம்மது, பக்கம் - 202 | ரூ. 90.00 |
| 17. | பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு, மு. குலாம் முஹம்மது பக்கம்-163 | ரூ. 110.00 |
| 18. | பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள், மு. குலாம்மது, பக்கம் -143 | ரூ. 90.00 |
| 19. | இஸ்லாமிய நாகரிகம் - முஸ்தஃபா அல் சிபாய், பக்கம் - 206 | ரூ. 130.00 |
| 20. | கஷ்மீரின் பாதி விதவைகள், மு. குலாம் முஹம்மது, பக்கம் - 140 | ரூ. 70.00 |
| 21. | எது முதலில்? டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவீ, தமிழில் கா.மு. இல்யாஸ் ரியாஜி | ரூ. 50.00 |
| 22. | சாதி ஒழிந்தது - கன்னடம், | ரூ. 50.00 |
| 23. | அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி? டி.எம். உமர் ஃபாரூக் | ரூ. 20.00 |
| 24. | கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்? மு. குலாம் முஹம்மது பக்கம்:48 | ரூ. 30.00 |
| 25. | முஹம்மத் (ஸல்) அவர்கள் ஓர் சகாப்தம், பக்கம் 30 | ரூ. 15.00 |
| 26. | இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும், பக்கம் - 120 | ரூ. 50.00 |
| 27. | இஸ்லாம் வழங்கும் தண்டனைகள் | ரூ. 40.00 |
| 28. | இஸ்லாமும் விஞ்ஞானமும் | ரூ. 70.00 |
| 29. | இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா? | ரூ. 60.00 |
| 30. | இஸ்லாமும் பெண்களும் | ரூ. 70.00 |
| 31. | இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா? | ரூ. 70.00 |
| 32. | தேசப்பிரிவினைக்கு யார் காரணம்? | ரூ. 30.00 |
| 33. | 26/11 -நீதித்துறையும் மயங்கியது ஏன்? | ரூ. 220.00 |
| 34. | ஒரு தலித் போராளியின் வாழ்வும், அவர் காட்டிய வழியும் | ரூ. 20.00 |

**வேர்கள் பதிப்பகம்,** 52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001.

தொடர்ப்புக்கு : 8148129887



# அயோத்தியாவில் புதுப்பிக்கப்படும் மஸ்ஜித்துகள்

ஆயோத்தியாவில் பாபரி மஸ்ஜித் இருந்த இடம் அதைச் சுற்றியுள்ள இடங்கள் இவற்றை பாசிஸ்ட்டுகள் கையிலெடுத்து களி யாட்டம் போட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

அங்கே பாசிஸ்ட்டுகள் ரியல் எஸ்டேட் வியாபாரத்தில் முன்னணியில் நிற்கின்றார்கள். இவர்கள் தீவிரவாதிகள், இவர்களுக்கும் இந்து தர்மங்களுக்கும் எந்தச் சம்மந்தமுமில்லை என்கின்றார்கள். அங்கு கோயில்களை நிர்வகித்து வரும் “மஹந்த் என்ற பூசாரிகள்” அல்லது தர்ம கர்த்தாக்கள்.

நாம் ஏற்கெனவே அங்குள்ள மஹந்த் என்ற பூசாரிகள் எந்த அளவுக்கு “நேர்மையோடும்” “நன்றி உணர்வோடும்” முஸ்லிம்களிடம் நடந்து கொள்கின்றார்கள் என்பதைச் சுட்டிக் காட்டி இருக்கிறோம்.

நாம் நிறுவி நடத்திவந்த பத்திரிகை “விடியல் வெள்ளியில்” இதுபற்றி பல சிறப்புக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளோம். இப்போது “வைகறை வெளிச்சம்” இதழிலும் வெளியிட்டு வருகின்றோம். பின்னர் நாம் வேர்கள் பதிப்பகம் வெளியிட்ட பாபரி மஸ்ஜித் – அடிப்படை தகவல்கள் என்ற நூலிலும் இடம்பெறச் செய்தோம்.

இங்கே மஹந்த்கள் என்ற பூசாரிகளின் நேர்மையையும் நன்றியுணர்வையும் பற்றி அண் மையில் ராஷ்டிரிய்ய ஷஹாரா “ரேடியன்ஸ்” ஆகியவை வெளியிட்ட தகவல்களைத் தருகின்றோம்.

**நன்றியுணர்வு...**

அந்த நன்றியுணர்வு, எதனால்? என்ற வினா வுக்குப் பதில் இன்று அயோத்தியாவிலிருக்கும் பெரும்பாலான கோயில்கள் முஸ்லிம் ஆட்சி யாளர்கள் அன்று தந்த நிலத்தில்தான் இருக் கின்றன. அந்தக் கோயில்களைக் கட்டுவதற்கான நிதியையும் அன்றைய முஸ்லிம் ஆட்சியாளர்கள் தந்திருக்கின்றார்கள். அத்தோடு அவற்றை கால மெல்லாம் பராமரிப்பதற்கான நதி ஏற்பாடு களையும் செய்திருக்கின்றார்கள். இவற்றை பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள் என்ற நூலில் ஒரு அத்தியாயமாக (அத்தியாயம் 12 அயோத்தியில் முஸ்லிம்கள் காட்டியப் பெருந்தன்மை) விரித் துரைத்திருக்கின்றோம். இவையெல்லாம் ஓரிரு நூற்றாண்டுகளுக்கு முன் நடந்தவை. இந்த வரலாற்றை இன்றைய இந்துத்துவ வாதிகள் திருத்தியும், மறைத்தும் வருகின்றார்கள்.

ஆனால் அந்த மஹந்த்கள் என்ற பூசாரி களின் வாரிசுகள் இன்னும் அதாவது பாசிச பாரதத்தின் நடுவண அரசில் அமர்ந்து

ஆட்டம் போட்டுக் கொண்டிருக்கும் போதும் நன்றியுடன் நடந்து கொள்கின்றார்கள் என்றால் அவர்களை மதிக்கும் பொருட்டும் அதற்கு நன்றி சொல்லும் பொருட்டும் அதனை மக்கள் மன்றத்தில் வைப்பதே நியாயம்.


ஹாசிம் அன்சாரி அவர்களும் மஹந்த் கியான்தாசும்

**மஹந்த் கியான் தாஸ்**

ஆட்சியாளர் அவ்ரங்கசீப் அவர்களின் காலத்தில் ஹனுமான் காரிகோயில் என்றொரு கோயில் கட்டப்பட்டு, அந்தக் கோயிலுக்கு ஏராளமான நிலமும் வழங்கப்பட்டது. அந்தக் கோயிலும் அதற்காக வழங்கப்பட்ட நிலமும் இப்போது ஹனுமான் காரிகோயில் அறக் கட்டளைக்குச் சொந்தமாக்கப்பட்டது. இந்த அறக்கட்டளைக்கு மஹந்த் கியான் தாஸ் தலைவராக இருக்கின்றார்.

இந்த அறக்கட்டளைக்குச் சொந்தமான இடத்தில் பண்டுதொட்டே மஸ்ஜித் ஒன்றும் இருந்து வருகின்றது. அதில் அந்த நாள் முதல் ஐவேளை தொழுகையும் நடந்து வந்தது.

ஆனால் 1992– டிசம்பர் ஆறாம் நாள் பாபரி மஸ்ஜித்–ஐ இடித்த காவிகள் இந்தப் பள்ளி வாசலையும் இடித்து விட்டார்கள். அதன்பின் தொழுகையும் நடக்கவில்லை. இப்போது அயோத்தியாவில் வாழ்ந்து கொண்டிருக்கும் முஸ்லிம்கள் அந்தப் பள்ளிவாசலைக் கட்டிட சில முயற்சிகளை மேற்கொண்டார்கள். அதற்கு அந்த மஹந்த் கியான் தாஸ் பூரண சம்மதத்தைத் தெரிவித்ததோடு, பள்ளிவாசலை மீண்டும் எழுப்புவதற்கு தன்னால் ஆன உதவிகளையும் செய்வதாகவும் வாக்களித்துள்ளார்.

ஆக பதவியிலே இருக்கும் சில கரசேவர்கள் அந்த மஸ்ஜிதில் தொழுகை நடத்திட மஹந்த் அவர்களின் ஒப்புதல் - "No objection certificate" வேண்டும் எனக் கேட்டபோது அதையும் அரசாங்கத்திடம் தந்துவிட்டார். (Radiance 30th oct 5th Nove.2016) இதில் கவனிக்க வேண்டியது என்னவெனில் இந்தப் பள்ளிவாசல் Dilapidated Mosque (எ) இடிபாடுகளுக்குள்ளானது அதனால் பயன்பாடற்றது என (Local urban administration) வட்டார புறநகர் நிர்வாகம் அறிவித்திருந்தது. அந்த வகையில் அங்கே ஓர் அறிவிப்புப் பலகையும் தொங்க விட்டிருந்தார்கள். அதையும் வட்டார நிர்வாக அதிகாகளிடம் முறையிட்டு மாற்றிடச் செய்தார் மஹந்த் கியான் தாஸ்.

அயோத்தியாவில் அனைத்தையும் தாண்டி மனிதம் வாழ்ந்து கொண்டிருக்கின்றது என்பதற்கு இஃதோர் எடுத்துக்காட்டு.

மஹந்த் அவர்களின் தன்மைகளை வைத்துப் பார்க்கும்போது இந்துத்துவ வாதிகள் இந்துக் களே அல்ல என்பது புலப்படும். அவர்கள் பாசிஸ்ட்டுகள்.

**ஹனுமான் தில்லா கோயிலும் அதன் நிலத்தில் நிற்கும் மஸ்ஜித்தும்**

நவாப் சிராஜுூ தவ்லா ஆங்கிலேயர்களோடு 1764–ல் மோதினார். இந்தப் போருக்கு பௌஸ்கர் போர் என்று பெயர் (Bottle of Boker). இந்தப் போருக்குப் பின் நவாப் சிராஜுூ தவ்லா பைஜ ராபாத்திலிருந்த தனது தலைநகரை லக்னோ வுக்கு மாற்றினார். அங்கே “ஹனுமான் தில்லா” என்றொரு கோயிலை கட்டிட நிலம் வேண்டும் என சில மஹந்த்களும் சன்னியாசிகளும் பூசாரி களும் வந்து நவாப் சிராஜுூ தவ்லா அவர்களிடம் கேட்டார்கள். நவாப் அவர்கள் அந்த மஹந்த்கள் கேட்ட இடத்தை கேட்ட அளவில் கொடுத் தார்கள்.

இரண்டொரு நாள் கழித்து அந்த மஹந்த்களின் குழு மீண்டும் வந்து இன்னும் கொஞ்சம் இடம் வேண்டும் எனக் கேட்டார்கள். உடனேயே நவாப் அவர்கள் அந்த இடத்தையும் கொடுத்தார்கள். மொத்த 3 பக்க பிகா ( 3 Pucca Biha) இடத்தைக் கொடுத்தார்கள்.

ஆனால் இப்போது கொடுத்த இடத்தில் ஓர் மஸ்ஜித் இருந்தது. அதனால் நவாப் அவர்கள் சில நிபந்தனைகளை விதித்தார்கள். அதில் மஸ்ஜித், மஸ்ஜிதாகவே இருக்கும். அதில் தொழுகையும் நடக்கும் என்பனவும் அடங்கும். அன்று முதல்



இன்றுவரை நவாப் அவர்கள் கொடுத்த இடத்தி லிருக்கும் மஸ்ஜித்—ஐ மஹந்த்களே பராமரித்து வருகின்றார்கள். கரசேவகர்கள் அந்தப் பள்ளி வாசலை சேதப்படுத்தினார்கள், மஹந்த்கள் அதை சீர் செய்து கொடுத்தார்கள். இன்னும் அங்கே தொழுகை நடந்து வருகின்றது.

இந்த மஸ்ஜிதுக்கு சற்று தொலைவில் ஹனுமான் தில்லா என்ற கோயில் ஓர் மணல் மேட்டில் இருக்கின்றது. இதனைக் "அவத்" பகுதியின் முடு நவாப் சியாதத் அலீகான் அவர்கள் தாம் கட்டிக்கொடுத்தார் என்பது குறிப்பிடத் தக்கது. இந்தக் கோயிலும் நவாப் கொடுத்த இடத்தில்தான் இருக்கின்றது.

### குர்பானும் அயோத்தியாவும்

உத்திரப் பிரதேசத்தில் தான் தாத்ரியல் ஒரு முஸ்லிம் தனது குளிர்சாதன பெட்டியில் வைத் திருந்த ஆட்டுக்கறிக்காக கொலை செய்யப்பட் டார். கொலை செய்தவர்கள் அதை மாட்டுக்கறி எனப் பொய் சொன்னார்கள். கொலையை செய்த நம்பர் 1 குற்றவாளி இறந்தபோது அவனுடைய உடலுக்குத் தேசிய கொடியைப் போர்த்தினார் கள். பாசிசத்தை பாதையாகக் கொண்டவர்கள்.

ஆனால் அயோத்தியாவில் வாழும் உண்மை யான இந்துக்களாகிய நாங்கள் அப்படியல்ல என்கின்றார் ராதி ஷியாம் குப்தா. இவர் அயோத் தியா முனிசிப்பாலிட்டியின் தலைவர் (Chairman Ayothya Municipal Board) அவர் கூறுகின்றார் நாங்கள் பாஞ்ச்கோலி என்ற இடத்தை புனித மானதாககருதுகின்றோம். அதனால் பொதுவான இடங்களில் வைத்து குர்பான் கொடுக்க (ஆடு அல்லது மாட்டை அறுக்க) நாங்கள் அனுமதிப்ப தில்லை. ஆனால் முஸ்லிம்கள் தங்கள் வீடுகளில் வைத்து குர்பான் (பக்ரீத் பெருநாளின் போது) கொடுப்பதை நாங்கள் தடுப்பதில்லை. இந்தக் குர்பான் காலக் கட்டத்தில் நகராட்சி மிருகங் களை அறுப்பதற்கு போட்டுள்ள தடையை நீக்கி விடுவோம் என்கின்றார் (நகராட்சி தலைவர்)

ஆனால் இந்த பாஞ்ச்கோலிக்கு அப்பால் உள்ள இடங்களில் முஸ்லிம்கள் பக்ரீத் – ஈதுல் அத்கா—வின்போது தாரளமாக குர்பான் கொடுக்க அனுமதிக்கப்படுகின்றார்கள் என்கின்றார் அயோத்தியா வாழ் முஸ்லிம் ஹாஜி அசத் அஹ்மத்.

இதனை மஹந்த்கள் "ஒவ்வொரு மதத்திற்கும் சில சடங்குகள் இருக்கின்றன. அதை நிறை வேற்றுவதற்கு நாம் தடையாக இருக்கக்கூடாது" என்கின்றனர். இத்தனையுமிருந்தாலும் அயோத் தியாவில் இருந்த 103 மஸ்ஜித்களில் 35 மஸ்ஜித் களில் மட்டுமே இன்று தொழுகை நடக்கின்றது.

**வளரட்டும், பரவட்டும்**
**இந்த மத நல்லிணக்கம்.**



# பாபரி மஸ்ஜித்

## சிதம்பரம் சொல்லும் சிதம்பர ரகசியம்

ஆட்சியில் இருந்தபோது தான் செய்யாவிட்டதை, ஆட்சியில் இல்லாதபோது சொல்வதில் வல்லவர் நமது முன்னாள் மத்திய அமைச்சர் ப. சிதம்பரம்.



தான் மத்திய உள்துறை அமைச்சராக இருந்தபோது காஷ்மீர் மக்களை விரக்தியில் ஆழ்த்தியவர்.

அதாவது தங்கள் மகன்களைத் தங்கள் கண் முன்னாலே இராணுவத்தினர் சுட்டுக் கொலை செய்தார்கள். அதை நாங்கள் கண்ணால் கண்டோம் என மகன்களை இழந்த தாய்மார்கள். இன்னும் கண்ணால் கண்டவர்கள் ஆகியோர் முறையிட்டார்கள் ப. சிதம்பரத்திடம். ஆனால் சிதம்பரம் அந்த இராணுவ அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க முடியாது என்று ஒற்றை வரியில் கூறிவிட்டார்.

மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம் அவர்களிடம் ஏன் அந்த காஷ்மீர் மக்கள் அனுமதி கேட்டார்கள்? நம் நாட்டு சட்டங்கள் அப்படி காஷ்மீர் மக்களுக்கு ஓர் நிபந்தனையை விதித்திருக்கின்றது.

காஷ்மீரில் நம் குடிமக்களைக் கொலை செய்வதும், கற்பழிப்புகளை நிகழ்த்துவதும் நமது இராணுவத்தினர்தாம். இக்கொலைகளையும் கற்பழிப்புகளையும் தினம், தினம் நடத்தும் நமது இராணுவத்தினருக்கு அங்கே, பாதுகாப்புப் படையினர் என்று பெயர். இந்தப்பாதுகாப்புப்படையினர் காஷ்மீரில் செய்யும் படுகொலைகள், கூட்டுக் கற்பழிப்புகள் இவற்றிற்காக அவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கைகள் எடுக்க முடியாது. அவ்வாறு சட்டப்படியான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றால் மத்தியரசிடம் அனுமதி வாங்கிட வேண்டும் எனக் கூறும் சட்டம்தான் "AFSA" Armed Forces Special Powers Act. ஆயுதம் தாங்கிய படைகளின் சிறப்பு அதிகாரச் சட்டம். இந்தச் சட்டத்தை அகற்றிட அந்த மக்கள் போராடி வருகின்றார்கள். இந்த சட்டந்தான் அந்த மக்களை அன்றைய உள்துறை அமைச்சரான ப. சிதம்பரம் அவர்களிடம் கொண்டு

நிறுத்தியது. அனுமதி கேட்டு! அவர் அனுமதி அளித்திருக்க வேண்டும். ஆனால் இதயத்தைக் இரும்பாக்கிக் கொண்டு மறுத்துவிட்டார்.

விரிவான தகவல்களுக்கு பார்க்க "காஷ்மீர் பாதி விதவைகள் என்ற நூல்" "வேர்கள் வெளி யீட்டகம்"

**இர்ஷத் ஜஹான் விவகாரம் ... சிதம்பரம்**

2004–ஆம் ஆண்டு நமது குஜராத் காவல் துறையினர் நான்குபேரை ஓர் பண்ணை வீட்டில் வைத்துக் கொலை செய்தார்கள். அந்த நான்கு பேரில் ஒருவர், இர்ஷத் ஜஹான் என்ற 18 வயது பெண்மணி. மும்பைக்குப் பக்கத்திலுள்ள மும்புரா என்ற இடத்தைச் சார்ந்தவர்.



இந்த நான்கு பேரையும் கொலை செய்த குஜராத் காவல் துறையினர் அவர்கள் பம்பாயி லிருந்து புறப்பட்டு குஜராத் நோக்கி நரேந்திர மோடியைக் கொலை செய்திட சென்று கொண்டிருந்தார்கள், நாங்கள் எங்கள் அதிசய மூளையைப் பயன்படுத்தி அவர்களைத் துரத்திப் பிடித்துக் கொலை செய்தோம் என்றார்கள். அதுவும் என்கவுண்டர் என்றார்கள். நம் நாட்டில் என்கவுண்டர்கள் எல்லாம் படுகொலைதாம்.

அத்தோடு நில்லாமல் கொலை செய்யப் பட்டவர்கள் அனைவரும் "லஷ்கரே தொய்பா" என்ற அமைப்பைச் சார்ந்தவர்கள் என்றும் அறிக்கை விட்டார்கள்.

பின்னர் இந்த என்கவுண்டர் கதை போலி என்று நிரூபனமானது. கொலை செய்யப்பட்ட வர்கள் லஷ்கரே தொய்பா என்ற அமைப்பைச் சார்ந்தவர்கள் என்ற தகவலை மத்திய உளவுத் துறையைச் சார்ந்தவர்கள், குறிப்பாக மத்திய உளவுத்துறைச் சார்ந்த இராஜேந்திரன் என்பவர் தான் இந்தப் பொய்த் தகவலைத் தந்தார் என்பதும் நிரூபிக்கப்பட்டது.

இதில் முக்கிய ஆவணங்களை ப. சிதம்பரம் அவர்கள் உள்துறை அமைச்சராக இருந்தபோது காணமலாக்கினார் என்றொரு குற்றச் சாட்டும் ப.சிதம்பரம் அவர்கள் மீது உண்டு. – (செய்தி.. ஆதாரம் டைம்ஸ் ஆப் இந்தியா 11.3.2016).

இப்போது அவர் பாபரி மஸ்ஜித் இடிப்புப் பற்றி சில தகவல்களைகூறியுள்ளார். அதனை இங்கே இடம் பெறச் செய்கின்றோம்...

இது அவர் மும்பையில் டாட்டா நிறுவனம் ஒன்றில் "நரசிம்மராவ்" பற்றிய ஆற்றிய உரையில் இடம் பெற்றது.

**பாபரி மஸ்ஜித் பற்றிய பேச்சு...**

பாபரி மஸ்ஜித் 1992–ஆம் ஆண்டு டிசம்பர் 6–ஆம் நாள் இடிக்கப்பட்டது. அப்போது நம் நாட்டின் பிரதமராக இருந்தவர் நரசிம்மராவ் என்பவர்தான். அவருடைய நடவடிக்கைகள் பற்றி ப. சிதம்பரம் இப்படிப் பேசினார்.

**it was a "fatal political error" on the part of the Narasimha Rao government not to bring Babri Masjid under the Centre's control despite mounting evidence that it was under threat. The former Finance Minister said he would not brush aside the incident as a mere judgemental error and that as a result of the incident, Prime Minister Rao lost the trust of the rank and file of the party.**

**"A lot of people had warned Narasimha Rao... the mosque was under threat. Our government had issued a statement that under no circumstances would we allow the mosque to be demolished. If necessary, we would station the military, the paramilitary forces," he said during a panel discussion on 'Narasimha Rao: The Forgotten Hero' at the Tata Literature Live festival here. He said the threat to the mosque was not sudden and neither was it a**

spontaneous action on part of 'karsevaks.'

**"Stones were being carried from as far as Rameshwaram and they were travelling by trains. Whole trains were being booked. Everybody knew that lakhs of people would assemble. Threat to Babri Masjid was a real one which had been there from at least 1987-88,"**

**Rao should have moved the paramilitary forces and the Army and should have made it absolutely clear that the Babri Masjid area was under control of the Central government.**

**"But the failure to position the paramilitary and [the failure] to say that the area was under the control of the Central government was a fatal political error, and the consequences since then for the country have been disastrous," he said.**

**"The evidence was piling ß everyday. We all knew that there were programmes being held to bid farewell to the karsevaks. Anyone with a political judgment could have said there was a grave danger to the mosque. Where did the pick axes, hammers come from?"**

**- (Source The Hindu - 21.11.2016)**

சிதம்பரம் அவர்கள் இன்னொரு ஆண்டுக் குப்பின் என்ன சொல்வார் என்பது இறைவனுக் குத்தான் வெளிச்சம். அதனால் தான் அவருடைய ஆங்கில உரையை அப்படியே பதிவு செய்திருக் கின்றோம் ஓர் சாட்சியாக.

### அவரது ஆங்கில உரையின் தமிழாக்கம்...

பாபரி மஸ்ஜித்–ஐ மத்திய அரசின் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்திடாது விட்டது தலையைத் துண்டித்த தவறாகும். அதற்கு பயங் கரமான ஆபத்து இருக்கின்றது எனத் தெரிந்தும், அதனை மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திடாது போனது இமாலய தவறா கும். அதை நான் முடிவெடுப்பதில் ஏற்பட்ட தவறு என்றோ சாதாரண தவறு என்றே அதை புறந்தள்ளி விடமாட்டேன். இந்த நிகழ்வால் பிரதம அமைச்சர் கட்சியிலுள்ள அனைவருடைய நம்பிக்கையை யும் இழந்தார்.

மஸ்ஜித் இடிக்கப்படும் ஆபத்திருக்கின்றது என அநேக மக்கள் நரசிம்மராவை எச்சரித்தார் கள். நமது அரசாங்கம் எந்தச் சூழ்நிலையிலும் நாம் பாபரி மஸ்ஜிதை இடிக்க அனுமதிக்க மாட்டோம் என்றொரு உறுதியை அறிவிப்பாக தந்திருந்தது. தேவையானால் நாம் இராணுவத் தையும், இணை இராணுவத்தையும் கொண்டு வந்து நிறுத்துவோம். ஆனாலும் பள்ளிவாசலை இடிப்பதை அனுமதிக்க மாட்டோம் என நாம் அறிக்கைவிட்டிருந்தோம்.

மஸ்ஜித்–க்கு ஏற்பட்ட ஆபத்து திடீரென ஏற்பட்டதல்ல. அதேபோல் அது யதார்த்தமாக கரசேவர்கள் செய்த செயலுமல்ல.

செங்கற்களை இராமேஸ்வரம் போன்ற வெகுதூரமான இடங்களிலிருந்தெல்லாம் கொண்டுவந்தார்கள். இந்தக் கற்கள் ரெயில்கள் வழியாகத்தான் கொண்டு செல்லப்பட்டன. பல சரக்கு இரயில்கள் முழுமையாக செங்கற்களுக் காகவே பதிவு செய்யப்பட்டு ஒதுக்கப்பட்டிருந் தது. எல்லோருக்கும் தெரியும். லட்சக்கணக்கான கரசேவகர்கள் அங்கே வந்து குவிவார்கள் என்று பாபரி மஸ்ஜித்க்கான ஆபத்து உண்மையானது. அதுகாலங்காலமாக இருந்துகொண்டே இருக் கின்றது. குறையாது 1987–88 களிலிருந்தே இருந்து கொண்டே இருக்கின்றது என்பது தெரியும்.

ராவ், இராணுவத்தையும் இணை இராணு வத்தையும் அங்கே கொண்டு சென்றிருக்க வேண்டும். தெள்ளத் தெளிவாக பாபரி மஸ்ஜித் சம்மந்தப்பட்ட இடங்கள் மத்திய அரசின் கீழ் இருக்கின்றது எனப் பிரகடனப்படுத்தி இருக்க வேண்டும்.

இதைச் செய்யாதது ஒரு பெரும் அரசியல் பிழை. அதன் விளைவுகள் நாட்டுக்கு அழிவைக் கொண்டுவந்து விட்டன. தினம் தினம் பல அத்தாட்சிகள் வந்து குவிந்துகொண்டே இருக் கின்றன. நமக்கு நன்றாகத் தெரியும். கரசேவகர் களை வழியனுப்பி விழாக்கள் எடுக்கப்பட்டன. அரசியலில் காய்களை நகர்த்திக் கொண்டிருந்த வர்களுக்கு நன்றாகத் தெரியும் மஸ்ஜிதுக்கு பெரிய ஆபத்து இருக்கின்றது என்று. மஸ்ஜித் இடிக்க கோடாரிகளும் சுத்தியல்களும் எங்கிருந்து வந்தன.''

### இந்த உரையில் நாம் கவனிக்க வேண்டியவை....

சிதம்பரம் அவர்கள் சொல்லுவதில் சில புதிய தகல்கள் இருக்கின்றது. நாம் இன்றளவும் தமிழகத்தில் இருந்து ஆயிரம் கரசேவர்களை அனுப்பினார்கள் என்பதைத்தான் அறிவோம். செங்கற்கள் இங்கே பூஜை செய்யப்பட்டு அனுப்

பப்பட்டன என்பதையும் நாம் அறிவோம். ஆனால் இரயில்வேயில் தனியாக சரக்கு இரயில்கள் பதிவு செய்யப்பட்டன என்பது புதிய தகவல்கள்.

ஆனால் இங்கே செங்கல்களைப் பூஜை செய்திட நீதித்துறையே முன் வந்தது என்பது முன்னாள் நீதிபதி ப. கோபாலகிருஷ்ணன் அவர்கள் ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம் என்ற நூலில் நமக்குச் சொல்லும் உண்மை.

பாபரி மஸ்ஜித் இடிக்கப்பட்டபின் மூன்று நாட்கள் கரசேவகர்கள் அங்கே தங்க வைக்கப் பட்டிருந்தார்கள். கோயில் கட்டிட தேவையான ஏற்பாடுகளும் செய்து தரப்பட்டன. பின்னர் கரசேவகர்கள் மிகவும் பத்திரமாகவும் இலவசமாகவும் ரெயில்களில் அவர்களுடைய இல்லங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். இதில் அன்றைய பிரதமர் நரசிம்ம ராவ் அவர்கள். ஒரு கரசேவகரைப் போலவே நடந்து கொண்டார்கள். (மேலும் விளக்கங்களுக்கு பார்க்க நூல் பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள், வேர்கள் வெளியீட்டகம்)



### ப.சி. பொய்கள்....

பாபரி மஸ்ஜித் இடிக்கப்பட்ட அன்று இராணுவத்தினர் அங்கே அனுப்பப்பட்டிருந்தார்கள். ஆனால் அவர்கள் பாபரி மஸ்ஜித்—ஐ அணுக முடியாத அளவுக்கு சைக்கிள் டயர்கள் போன்றவற்றை கரசேவர்கள் நெருப்பு வைத்து எரித்துக் கொண்டிருந்ததாக ஒரு சாக்குப் போக்குச் சொல்லப்பட்டது.

இதைப்பற்றி அன்று சென்னையில் உரையாற்றிய கலைஞர் கருணாநிதி அவர்கள் சைக்கிள் டயர்களைத் தாண்டிட முடியாத இராணுவம் எந்த எதிரியை எதிர்த்துப் போராடப் போகின்றது என ஏகடியம் பேசியதையும் அதைக்கேட்ட ஆயிரக்கணக்கான மக்கள் கைகொட்டி சிரித்ததையும் வரலாறு இன்னும் மறக்கவில்லை.

அன்றைக்கு நாட்டு மக்களை ஏமாற்றிட "What demolished will be reconstructed" எது இடிக்கப்பட்டதோ, அது மீண்டும் கட்டப்படும் என்றார் நரசிம்ம ராவ். இந்த வாக்குறுதியை அதன்பின் 15 ஆண்டு காலம் ஆட்சியிலிருந்த காங்கிரசும், அதில் அமைச்சராக முக்கிய இலாக்காவின் அமைச்சராக இருந்த சிதம்பரமும் நினைத்துக்கூட பார்க்கவில்லை.

நாட்டு மக்கள் இந்த வாக்குறுதியை நினைவு படுத்திக்கொண்டே இருந்தார்கள். காங்கிரஸ் ஆட்சி அதைக் கண்டுகொள்ளவில்லை. தன்னால் முடியவில்லை என்றால் பாபரி மஸ்ஜித்—ஐ கட்டிடத் துடிப்பவர்களையாவது அனுமதித் திருக்க வேண்டும். அதையும் செய்யவில்லை காங்கிரஸ் ஆட்சி.



### நரசிம்ம ராவ்...

நரசிம்மராவ் தனது இளமைப் பருவத்தில் ஆர்.எஸ்.எஸ். என்ற அமைப்பில் இருந்தவர். அவரை பிரதமராக்கியபோது ஒரு இந்துத்துவ வாதியை பிரதமராக ஆக்குகின்றோம் என்பது காங்கிரஸுக்குத் தெரியாதா?

பள்ளிவாசல் இடிப்பின்போது இறுதிகட்ட வேலைகளைச் செய்தது நரசிம்மராவின்

காங்கிரஸ் ஆட்சிதான். பள்ளி வாசல் இடிப்பில் வெறும் பிக்காசுகளும், சுத்தியல்களும்தான் பயன்படுத்தப்பட்டன என்றில்லை. பெரிய ரூம்களை தகர்க்க குண்டுகளும் பயன்படுத்தப்பட்டன. பள்ளிவாசலை இடிக்க மாட்டேன் என்றால் குண்டுகளைப் பயன்படுத்திட கரசேவகர்கள் பெருமளவில் குண்டுகளை வைத்திருக்கின்றார்கள் என்று உளவுத்துறை தந்த தகவல் நரசிம்மராவுக்கு நன்றாகத் தெரியும்.

மாநிலத்தை ஆட்சி செய்த கல்யான் சிங் – இன் பாரதிய ஜனதா கட்சி அரசு உடனேயே கலைக்கப்பட்டது. மதியத்திற்குப் பின் அயோத்தியாவின் ஆட்சி மத்திய அரசின் கைகளில்தாம் இருந்தது. அதாவது நரசிம்மராவின் கைகளில் தாம் இருந்தது. ஆனால் நரசிம்மராவ் இடிபாடுகளை சமன் செய்து சிலைகளை வைக்க எல்லா ஏற்பாடுகளையும் செய்து தந்தார்.

மத்திய அரசின் கீழ் இருந்த ரெயில்வே நிர்வாகத்தின் செலவில் கரசேவகர்களை இலவசமாக இல்லம் கொண்டு சேர்த்தார். (மேலும் விளக்கம் பெற படியுங்கள் பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள், வேர்கள் பதிப்பகம்)

**பேச்சு வார்த்தை**

இவற்றிற்கெல்லாம் முன்னதாக சாதுக்களிடம், சன்னியாசிகளிடம், பேசுகின்றேன் என்றப் போர்வையில் அவர்களிடம் கரசேவகர்களை அதாவது 6.12.1992 வரை அயோத்தியாவில் கூடும் கரசேவகர்களை எதுவும் செய்ய மாட்டேன் என வாக்களித்தார்.

பாபரி மஸ்ஜித் இடித்தபின் உச்ச நீதிமன்றத்தில் 143 மனு ஒன்றை சமர்ப்பித்தார். அதில் பாபரி மஸ்ஜித் இருந்த இடத்தில் கோயில் இருந்ததா? எனக் கேட்டார். அதன்வழி மஸ்ஜித் இடிப்பை நியாயப்படுத்திட முனைந்தார். இப்படி முதல்நாள் தொட்டே பிரதமர் நரசிம்மராவ் அவர் ஓர் தேர்ந்த கரசேவகராகவே செயல்பட்டார்.

சிதம்பரம் இப்போது சொல்பவைகளை ஓர் பதிவாக – எதிர்கால சமுதாயத்திற்கு தருவதற்காக மட்டும் பதிவு செய்கின்றோம்.

வாசகர்கள் பாபரி மஸ்ஜித் அடிப்படைத் தகவல்கள் என்ற நூலை படிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.



# அயோத்தியாவில் அடாவடி



2012–இல் உத்திரப் பிரதேசத்தில் சட்டசபை தேர்தல் நடந்தது. அதில் முஸ்லிம்கள மிகவும் கட்டுப்பாடாக முலாயம் சிங் யாதவ்–ன் சமாஜ் வாடிக்கு வாக்களித்தார்கள். இதனால் முலாயம் சிங் யாதவ் மகத்தான் வெற்றியைப் பெற்றார். தன் மகன் அகிலேஷ் யாதவை முதலமைச்சராக் கினார். முஸ்லிம்களெல்லாம் மகிழ்ந்தார்கள். முஸ்லிம்கள் வேண்டியவற்றையெல்லாம் வென்றெடுத்து விடலாம் என எண்ணினார்கள். ஏனெனில் முலாயம் சிங் யாதவ் இந்துத்துவ சக்திகளுக்கு எதிராக உறுதியாக நிற்பார் என்பதும் ஒருமுக்கியக் காரணம். அன்றளவும் அவர் அப்படித்தான் இருந்தார்.

ஆனால் தன் மகன் அகிலேஷ் யாதவ் முதலமைச்சராக பதவி யேற்கும்போது எந்த முகாந்தர முமில்லாமல் பாரதீய ஜனதா கட்சியைச் சார்ந்த எல்.கே. அத்வானியை அழைத்திருந்தார். அத்வானி தன் வாழ்நாளில் பல லட்சம் முஸ்லிம்களின் உயிரைக் குடித்தவர். இது முஸ்லிம்களுக்கு ஒரு பெரும் அதிர்ச்சியைத் தந்தது.



முஸ்லிம் இளைஞர்களில் 134 பேர் விசாரணை கைதிகளாக பாபரி மஸ்ஜித் இடிக் கப்பட்ட நாளிலிருந்து சிறையிலிருக்கின்றார்கள். இவர்கள் எந்தக் குற்றத்தையும் செய்துவிட வில்லை. மாறாக இவர்கள் பாபரி மஸ்ஜித் இடிக்கப்பட்ட இடத்தில் மீண்டும் மஸ்ஜித்–ஐ கட்ட வேண்டும் என்று எனப்பேசிக் கொண்டி ருந்தார்களாம்.

**மாயாவதி**

2007–ஆம் ஆண்டு நடந்த சட்ட மன்ற தேர்தலில் அதாவது உத்திரப்பிரதேச சட்ட மன்ற தேர்தலில் மாயாவதி என்ற பகுஜன் சமாஜ் வாடி கட்சியின் தலைவி இந்த விசாரணைக் கைதிகளுக்கு பிணை வழங்குவோம் என்று வாக்குறுதிகளைத் தந்து முஸ்லிம்களின் வாக்குகளைப் பெற்று, ஆட்சியைப் பிடித்தார்.

ஆனால் ஆட்சிக்கு வந்தபின் இன்னும் சில பல முஸ்லிம்களை சிறைபிடித்து விசாரணைக் கைதிகளாக சிறையில் அடைத்தார். தன் வாக்குறுதிக்கு நேர் எதிராக நடந்தார்.

இதேபோன்ற வாக்குறுதியைத்தான் முலாயம் சிங் யாதவ் 2012 ஆம் ஆண்டு தேர்தலில் தந்தார். ஆனால் அவர் தன் ஆட்சி காலம் முழுவதும் முஸ்லிம்களை அழித் தொழிப் பதிலேயே குறியாக இருந்தார்.

முலாயம்சிங் யாதவ் தனது மகனின் முடி சூட்டு விழாவிற்கு அத்வானியை அழைத்திருந் தார். அந்த அத்வானிதான் பாபரி மஸ்ஜித் இடிப்பு வழக்கில் சரி செய்தவர்களில் தலையா வார் எனக் கிரிமினல் வழக்கில் குற்றம் சாட்டப் பட்டவர். அவரைக் காப்பாற்ற தன் முந்தைய ஆட்சியில்முடிந்ததையெல்லாம்செய்தார். அவர் செய்யாமல் விட்டதை மாயாவதி ஆட்சிக்கு வந்ததும் செய்து முடித்தார். முடிவில் அத்வானி வகையறாக்கள் தப்பித்தே விட்டார்கள். இப்போது அந்த வழக்கு செத்தே போய்விட்டது எனலாம்.

முலாயம் சிங் யாதவுக்கு அத்வானிமேல் இருக்கும் கள்ளக் காதலை புரிந்துகொண்ட சங்பரிவாரும், பாரதீய ஜனதா கட்சியினரும்





முஸ்லிம்களைக் கொலை செய்யும் படலத்தைத் தொடங்கினார்கள்.

தொடரும் வகுப்புக் கலவரங்கள், அகதிகளாக முஸ்லிம்கள், முலாயம் சிங்கின் மகன் பதவியேற்ற இரண்டே ஆண்டுகளில் 147 கலவரங்களை நடத்தினார்கள். பல ஆயிரம் முஸ்லிம்களைக் கொலை செய்தார்கள். முசாபர் நகர் கலவரங்களையும் நடத்திக் காட்டினார் கள். இந்தக் கலவரத்தின்போது முலாயம் சிங் யாதவ்அவருடையமகன்முதலமைச்சர்அகிலேஷ் யாதவ் ஆகியோர் ஆக அசிங்கமாகவும் தங்கள் விசுவாசப் பிரமாணம் செய்துகொண்ட அரசியல் சாசனத்திற்கு எதிராகவும் நடந்துகொண்டார்கள்.

சுதந்திர இந்தியாவின் வரலாற்றில் குஜராத் இனப்படுகொலைக்குப்பின் 60,000 முஸ்லிம் கள் இரண்டே நாள்களில் தங்கள் சொந்த பூமியிலேயே அகதிகளாக ஆக்கப்பட்டார்கள்.

பல்லாயிரக்கணக்கான கரும்பு தோட்டங் களையும் தங்கள் சொந்த வீடுகளையும் விட்டு விட்டு அகதிகளாக வந்தார்கள். அகதிகள் முகாம் களுக்கு வந்தவர்களிடம் உங்கள் நிலம் புலன்களையும் வீடுகளையும் விட்டு விடுங்கள் எனச் சொல்லி எழுதி வாங்கிவிட்டு ரூபாய் ஐந்து லட்சம் தருகிறேன் என ஏமாற்றி எழுதி வாங்கிவிட்டு அகதிகள் முகாம்களிலிருந்து அவர்களை விரட்டி அடித்தார். அந்த நிலம் புலன்களைச் சங்பரிவாரத்தினர் அபகரித்து ஆக்கிரமித்துக் கொண்டார்கள்.

## அகதிகள் மீது வழக்குகள்

அகதிகள் முகாம்களிலிருந்து விரட்டி



2017–இல் உத்திரப் பிரதேச மாநில சட்ட மன்ற தேர்தல்கள் வருகின்றது. இதில் இராமர் கோயில் முக்கியப் பங்கு வகிக்கும் என்ற நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறார்கள்.

**உச்ச நீதிமன்றம்**

இதனால் பாபரி மஸ்ஜித் உச்ச நீதிமன்ற வழக்கு தீர்ப்பு எல்லாம் என்னவாகும் என்பது கேள்விக் குறியே! இன்றளவும் உச்சநீதிமன்றம் பாபரி மஸ்ஜித் வழக்கில் எள் மூக்கின் முனைகூட நியாயமாக நடந்து கொள்ளவில்லை.

முன்னாள் நீதிபதி ஹோஸ்பெட் சுரேஷ் அவர்கள் உச்ச நீதிமன்றத்தால்தான் பாபரி மஸ்ஜித் வழக்கு இத்தனை நாள் நீடித்துக் கொண்டிருக்கின்றது எனக் கூறியுள்ளார்கள் என்பது நினைவு கூறுத்தக்கது.

முஸ்லிம்களின் நண்பர்கள்போல் தோற்றம் தந்தவர்கள் இப்போது எதிர்ப்பு அணியினர் ஆகிவிட்டார்கள்.

அடிக்கப்பட்ட முஸ்லிம்கள், வஃக் போர்டுக்கு சொந்தமான இடங்களில் குடியமர்ந்தார்கள். அரசுக்கு சொந்தமான இடங்களை ஆக்கிரமித்துக் கொண்டார்கள் என அவர்கள் மீது எப்.ஐ.ஆர். என்ற முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தார் முலாயம் சிங் யாதவ். முஸ்லிம்களை மேலும் வெறுப்பூட்டிட வேண்டும் என்பதற்காக 1990–ல் பாபரி மஸ்ஜித் வளாகத்தில் வந்த கரசேவகர் மீது தான் நடத்திய துப்பாக்கிச் சூட்டுக்கு மன்னிப்புக் கேட்டார்.

**ராமல்லா கருத்துப்பூங்கா**

இப்போது பாபரி மஸ்ஜிதிலிருந்து சிறிது தூரத்தில் ஓர் ஏக்கர் நிலப்பரப்பை காத கிராமல்லா கருத்துப்பூங்கா அமைத்திட வாரி வழங்கி இருக்கின்றார் அகிலேஷ் யாதவர்.

மியூசியம் என்ற இந்த அறிவிப்பை முலாயம் சிங் யாதவின் மகன் அகிலேஷ் யாதவ் (முதல்வர்) எப்போது அறிவித்திருக்கின்றார் என்றால் அயோத்தியாவில் இராமாயண மியூசியம் ஒன்றை அமைக்க மோடி ரூ.225 கோடியை மத்திய நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கியபோதுதான்.

அதாவது அயோத்தியாவில் நடந்த அநியாயங்களை முலாயம் சிங் யாதவும் நரேந்திர மோடியும் போட்டிப் போட்டுக்கொண்டு நியாயப்படுத்துகின்றார்கள். இதன்மூலம் முலாயம்சிங் யாதவும் அகிலேஷ் யாதவும் வெந்த புண்ணிலே வேலைப் பாய்ச்சு கின்றார்கள்.

**அல்லாஹ் கூறுகின்றான்**

“அன்றியும் முஃமீன்கள் எதிரிகளின் கூட்டுப்படைகளைக் கண்டபோது, இதுதான் அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் எங்களுக்கு வாக்களித்தது, அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் உண்மையைஉரைத்தார்கள்” என்று கூறினார்கள். இன்னும் அது அவர்களுடைய ஈமானையும் இறைவனுக்கு முற்றிலும் வழிபடுவதாகவும் அதிகப்படுத்தாமலில்லை.

– அல்குர்ஆன் 33:22

# பாபரி மஸ்ஜித் அனைத்து வழக்குகளிலும் தொடர்புடைய

# ஹாசிம் அன்சாரி மரணம்

**(இன்னாலில்லாஹி)**

அயோத்யாவில், பாபரி மஸ்ஜித்துக்குப் பக்கத்தில்தான் ஹாசிம் அன்சாரியின் வீடு. பாபரி மஸ்ஜித்தை சுற்றி நடந்த எல்லா சம்பவங்களுக்கும் அவர்தான் கண்ணால் கண்ட சாட்சியம். 1921–யிலேயே பிறந்தாலும், பாபரி மஸ்ஜித்துக்குப் பக்கத்திலேயே தவழ்ந்து வளர்ந்தாலும் எல்லா நிகழ்வுகளுக்கும் சாட்சியமாக இருந்தவர்கள். அதனால் தான் "Oldest babri Litigant" முதுபெரும் பாபரி மஸ்ஜித் வழக்காடர் என அறியப்படுபவர் ஹாசிம் அன்சாரி. அவர் மாரடைப்பால் தனது 95 ஆவது வயதில் ஜூலை 20, 2016 அன்று காலை 5 மணியளவில் மரணமடைந்தார்கள்.

இவருடையதந்தைதையல்தொழில்செய்து வந்தவர். அன்சாரி அவர்களும் தன் தந்தையின் தொழிலையே செய்து வந்தார். பாபரி மஸ்ஜித் விவகாரத்தில் முதலில் வழக்குத் தொடர்ந்தவர். பாபரி மஸ்ஜித்–ஐ இடிக்க நடந்த சதிகளையெல்லாம் அம்பலப்படுத்திக்கொண்டே இருந்தார். இதனால் 1976–ஆம் ஆண்டு இந்தியாவில் நெருக்கடி நிலை பிரடகனப்படுத்தியபோது இவரும் கைது செய்யப்பட்டார். பல மாதங்கள் சிறையிலிருந்தார். பாபரி மஸ்ஜிதுக்காக பல மாதங்கள் மட்டுமல்ல பலமுறை சிறையில் அடைக்கப்பட்டவர்கள், மர்ஹூம் ஹாசிம் அன்சாரி அவர்கள்.

அன்சாரி அவர்கள் 1949–ல் பாபரி மஸ்ஜித்துக்குள் சிலை வைத்தபோது அதைத் தடுக்க முயன்று இந்துத்துவ தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு உள்ளானவர். சிறையிலிருந்து வெளியே வந்தபின் சைக்கிள் பழுது பார்த்து வாழ்க்கை ஓட்டினார்கள். அன்றைய பைஜாபாத் நிர்வாகம் தாக்குதலுக்குள்ளான ஹாசிம் அன்சாரி அவர்களை பொது அமைதிக்குப்பங்கள் விளைவித்தார் என்ற போர்வையில் கைது செய்து, சிறையில் அடைத்தார்கள்.

**பாபரியில் பாங்கு**

1952–ல் பாபரி மஸ்ஜிதில் தொழுகையை மீண்டும் நிலை நாட்டிட முயற்சிகளை மேற்கொண்டார். மக்களைத்திரட்டி வைத்துக்கொண்டு பாபரி மஸ்ஜிதில் நின்று (பாங்கு) தொழுகை அழைப்பை விடுத்தார்கள். பாங்கு சொன்னார்கள் என்பதை பெருங்கு குற்றமாகக் காட்டி பைஜாபாத் நீதிமன்றம் ஹாசிம் அன்சாரி அவர்களுக்கு இரண்டாண்டுகள் சிறை தண்டனை வழங்கியது. இரண்டாண்டுகள் சிறைவாசத்திற்குப் பின்தான் வெளியே வந்தார்கள்.

பாபரி மஸ்ஜித் விவகாரத்தில் அதை மீண்டும் மஸ்ஜித் ஆக மாற்றிட மேற்கொண்ட முயற்சிகளில் பல ஆண்டுகள் சிறை சென்றவர் ஹாசிம் அன்சாரி அவர்கள்.

1969–ல் சன்னி முஸ்லிம்களின் மத்திய வஃக்ப் போர்டு பாபரி மஸ்ஜித் விவகாரத்தில் நீதிமன்றத்தில் பாபரி மஸ்ஜித்–ஐ மீட்டிட தொடர்ந்த வழக்கில் பல மனுதாரர்கள் இருந்தார்கள் அதில் முக்கிய மனுதாரராக ஹாசிம் அன்சாரி அவர்கள் இருந்தார்கள்.

இந்த மனுவில் இடம்பெற்ற எல்லா மனுதாரர்கள் எல்லாம் இறந்துவிட்டார்கள். ஹாசிம் அன்சாரி மட்டும்தான் உயிரோடு இருந்தார்கள். அவர்களும் 20 ஜூலை 2016–ல் அல்லாஹ்விடம் சென்றுவிட்டார்கள்.

பாபரி மஸ்ஜித் வழக்கை அன்று முதலே நடத்திக் கொண்டிருப்பவர் மூத்த வழக்கறிஞர் ஜாஃபர் யிப் ஜீலானி அவர்கள். அவர்களிடம் ஹாசிம் அன்சாரியின் மரணம் பாபரி மஸ்ஜித் வழக்கில் எந்த பாதிப்பையாவது ஏற்படுத்துமா எனக் கேட்டபோது, அவருடைய மரணத்தால் எந்தப் பாதிப்பும் ஏற்படாது எனக் கூறினார்கள். அத்தோடு “ஹாசிம் அன்சாரி அவர்களின் வாக்கு மூலம், அவர்களின் சார்பிலான ஆவணங்கள் எல்லாம் உயர்நீதி மன்றத்தில் பதிவு செய்யப்பட்டு விட்டன. அவையே உச்சநீதிமன்றத்திற்கும் மாற்றப் பட்டுள்ளன என்றும் கூறினார்.

ஹாசிம் அன்சாரி அவர்களின் மகன் என் தந்தை விட்ட இடத்திலிருந்து இந்தப் பெரும் போரை தொடருவேன் எனக் கூறியுள்ளார்.

செய்தி ஆதாரம் : பட்ங் ஏண்ய்க்ன் சர்ஸ்.
21.7.2016




# பசுவின் பெயரால் தீவிரவாதம்... ஜார்க்கண்ட் மாநிலத்தில் சங்பரிவார் அட்டூழியம்

பசு பாதுகாவலர்கள் என்ற பெயரில் நாடு முழுதும் கொலைகளை செய்து வருகின்றது சங்பரிவாரக் கும்பல். அதற்கு துணையாக காவல்துறையும் தங்களால் முடிந்த பங்களிப்பை செய்து வருகிறார்கள்.

மின்ஹாஜ் அன்சாரி,22 காவல்துறையால் கொலைசெய்யப்பட்ட இளைஞர். இவர் மாட்டுக் கறியை சாப்பிட்டதற்காகவோ, மாட்டுக்கறியை எடுத்து சென்றதற்காகவோ கூட கொலை செய்யப்படவில்லை. சில ஆட்சேபனத்திற்குரிய படத்தை வாட்சாப்பில் அனுப்பியுள்ளார்.

அந்த படங்களில் பசுக்கன்று படமும் ஒன்று. இதனை எதிர்த்து விஷ்வ ஹிந்து பரிஷத்தின் தலைவர் சோனு சிங் காவல்துறைக்கு தெரிவித் துள்ளார். பின்பு மின்ஹாஜ் காவல்துறையினரால் சட்டவிரோதமான காவலில் எடுத்து அவர்களா லயே சித்ரவதைக்குள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிகழ்வு ஜார்க்கண்ட் மாநிலத்தில் உள்ள ஜமத்தாரா மாவட்டத்தின் திஹாரி பகுதி யில் நடந்துள்ளது. இந்த இறப்பை காவல் துறை யினர் இயற்கை மரணமாக பதிவு செய்ய முயன் றுள்ளனர். ஆனால் பிரேத பரிசோதனையில் உடம்பில் தாக்கப்பட்ட அடையாளங்கள் இருந் தது தெரிய வந்துள்ளது. மின்ஹாஜ் மிசாரியின் மேல் எந்த FIRம் பதிவு செய்யப்படவில்லை காவல்துறையினரே கடத்தி சென்று கொலை செய்து இருக்கிறார்கள்.

கொலைக்கு முக்கிய குற்றவாளியாக இருந்த சோனு சிங் மீதும் இதுவரை எந்த வழக்கும் பதிவு செய்யப்படவில்லை. இந்த கொலையை எந்த தேசிய ஊடகங்களும் பெரிய அளவில் கண்டுகொள்ளவில்லை.

பிஜேபி ஆளும் ஜார்க்கண்ட் மாநிலத்தில் இது போன்ற கொலைகள் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. சமீபத்தில் இரண்டு முஸ்லிம் வாலி பர்கள் "பசு பாதுகாவலர்கள்" எனும் தீவிரவாதி களால் தூக்கில் தொங்கவிடப்பட்டனர் அதில் ஒருவர் "மைனர்". இந்த கொலையிலும் முக்கிய ஊடகங்கள் தங்கள் பொறுப்பை மறந்தன. இந்த கொலையை சாதாரண கொலையாகவும் சிறிய தாக்குதலாகவும் சித்தரித்தன. வட இந்தியாவில் இந்த கொடுமைகள் அதிகமாகிவிட்டன. எப்போது வேண்டுமானாலும் யாரையும் இழுத்து செல்லும் உரிமையும், கொல்லும் உரிமையையும் மோ(ச)டி அரசு சங்பரிவார அமைப்புகளுக்கும் காவல்துறைக்கும் வழங்கியுள்ளது போல்.

பசு தீவிரவாதிகளும் - காவல்துறையினரும் சேர்ந்து ஒரு மாட்டின் படத்தை பகிர்ந்ததற்காக கொன்றுள்ளனர். இந்த கொடுமையை ஜனநாய கத்தின் பெரும் தூண்களான வெகுஜன மீடியாக் களும் வேடிக்கை பார்த்து கொண்டிருக்கின்றது. ஓர் மதச்சார்பற்ற நாட்டில் மதத்தின் அடிப்படை யில் மிருகத்திற்காக தொடர்ச்சியாக மனிதர்கள் கொல்லப்படுவது தீவிரவாதம் அல்லாமல் வேறு என்னவாக இருக்க முடியும்?..

# தடுக்கப்பட்ட சிறு பாவங்கள்

சென்ற இதழ் தொடர்ச்சி...



இமாம் யூசுப் அல்கர்தாவி

# எது முதலில்?

தடுக்கப்பட்ட சிறுபாவங்கள் குறித்து அறிஞர் இப்னு ரஜப் (ரஹ்) அவர்களின் பயனுள்ள கருத்து ஒன்றை இங்கே எடுத்துக் கொள்வது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன்...

இதோ...

திருக்குர்ஆனிலும் நபி வழியிலும் எவை யெல்லாம் தடை செய்யப்பட்டுள்ளனவோ அவை அனைத்தும் திட்ட வட்டமாகத் தடை செய்யப்பட்டவைதான்.

கீழ்காணும் வசனங்கள் இதற்கு உதாரணம்...

“வாருங்கள், உங்கள் இறைவன் உங்களுக் குத் தடை செய்திருப்பவற்றை கூறுகிறேன் என்று (நபியே) கூறுவீராக...

எதையும் அல்லாஹ்வுக்கு இணையாக்கா தீர்கள். பெற்றோருக்கு நன்மை செய்யுங்கள், வறுமைக்குப் பயந்து உங்கள் குழந்தைகளைக் கொல்லாதீர்கள். ஏனெனில் உங்களுக்கும் அவர் களுக்கும் நாமே உணவளிக்கிறோம். வெளிப் படையான ரகசியமான மானக்கேடுகளை நெருங்காதீர்கள். அல்லாஹ் தடுத்துள்ள எந்த ஒரு ஆத்மாவையும் நியாயத்துக்கு அன்றி கொலை செய்யாதீர்கள். இவற்றை நீங்கள் உணர்ந்து கொள்வதற்காக உங்களுக்கு இறைவன் இவற்றை போதிக்கிறான்”

“அநாதையின் பொருளின் பக்கம் அவன் தக்க பருவத்தை அடையும்வரை மிக அழகிய முறையிலன்றி நெருங்காதீர்கள். அளவையும் நிறுவையையும் நிதியுடன் நிரப்பமாக்குங்கள். நாம் எந்த ஆத்மாவையும் சக்திக்கு மீறி சிரமமப் படுத்துவதில்லை. நியாயத்தைப் பேசுங்கள் அதனால் பாதிக்கப்படுபவர் உங்கள் நெருங்கிய உறவினராக இருப்பினும் சரியே. நீங்கள் அல்லாஹ்விடம் தந்த வாக்குறுதியை நிறை வேற்றுங்கள். நீங்கள் படிப்பினை பெறவே இவற்றை போதிக்கிறான்” (6:151, 152)

“வெளிப்படையான அந்தரங்கமான மானக் கேடுகளையும் பாவங்களையும் நிநயாமின்றி வரம்பு மீறுவதையும் ஆதாரமில்லாது இருக்கும் போதே அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்பதையும் நீங்கள் அறியாதவற்றை அல்லாஹ்வின் மீது பொய்யாக கூறுவதை யுமே என் இறைவன் தடை செய்துள்ளான் என்று (நபியே) கூறுவீராக ( 7:33 )

‘‘தானாகச் செத்தவை, வடியும் ரத்தம், பன்றி இறைச்சி இவை தவிர வேறு எதுவும் உண்பதற்குத் தடை செய்யப்படிருப் பதாக எனக்கு அறிவிக் கப்பட்ட (வேதத்தில்) நான் காணவில்லை என்று கூறுவீராக. ஏனெ னில் இவை அசுத்தமானவை அல்லாஹ் அல்லாதவற்றின் பெயர்கூறி அறுக்கப்பட்டவை பாவமாக இருப்ப தாகவும் உண்ண தடுக்கப்பட்டுள்ளது ( 6:145 )

“தானாகச்செத்தவை, ரத்தம், பன்றி இறைச்சி, அல்லாஹ் அல்லாதவற்றுக்காக அறுக்கப் பட்டவை ஆகியவற்றை உங்களுக்கு அல்லாஹ் தடை செய்துள்ளான்” (2:173), (16:115)

“தானாகச் செத்தவை, ரத்தம், பன்றி இறைச்சி அல்லாஹ் அல்லாதவற்றுக்கு அறுக்கப்பட் டவை, கழுத்து நெறிபட்டுச் செத்தவை, அடி பட்டுச் செத்தவை, கொம்பால் முட்டப்பட்டுச் செத்தவை, வன விலங்கு தின்று கடித்ததால் செத்தவை அனைத்தும் உங்களுக்கு தடை செய்யப்பட்டுள்ளது. (நீங்கள் உயிருடன் பிடித்து) முறைப்படி அறுத்தவை தவிர (அதை உண்ணலாம்) நட்டு வைக்கப்பட்ட (சிலைகள்) வைகளுக்காக அறுக்கப்பட்டவை அம்புகள் மூலம் குறி பார்த்து இவை விலக்கப்பட்டுள்ளது. இவை பெரும் பாவம் ( 5:13 )

“அல்லாஹ் வியாபரத்தை அனுமதித்துள் ளான் வட்டியைத் தடை செய்துள்ளான்” (2:275)

இப்படி நேரடியாகவே தடை செய்யப்பட்டுள்ளவை நபிமொழிகளிலும் உண்டு.

**இதோ சில நபிமொழிகள்...**

“மது, செத்த பிணம், பன்றி, சிலைகள் ஆகியவற்றை விற்பனை செய்வதை அல்லாஹ் தடை செய்துள்ளான்” என்று நபி (ஸல்) கூறினார்கள். (அறிவிப்பாளர் : ஜாபிர் (ரழி) நூல் அஹ்மது புஹாரி முஸ்லிம், அபூதாவூது, திர்மிதி, நஸயீ, இப்னுமாறா)

நபி (ஸல்) கூறினார்கள் “அல்லாஹ் எந்தப் பொருள்களையெல்லாம் (பயன்படுத்த, உண்ண) தடை செய்துள்ளானோ அவற்றை விற்பனை செய்துவரும் கிரயத்தையும் (வருமானத்தையும்) தடை செய்துள்ளான்” (அறிவிப்பாளர் : இப்னு அப்பாஸ் (ரழி) நூல் அபூதாவுத்)

நபி (ஸல்) கூறினார்கள் உங்கள் ரத்தங்கள், செல்வங்கள், மானங்கள் அனைத்தும் உங்களுக்கு (பிறர்க்கு) தடை செய்யப்பட்டவை. (அவற்றில் ஒருவர் மற்றவர் மீது வரம்பு மீறக்கூடாது) அறிவிப்பாளர் : அபூபக்கர் (ரழி) நூல் – புஹாரி.

மேலும் 4:23 வசனத்தில் திருமணம் செய்யக் கூடாத பெண்கள் யார் யார் என்று விளக்கமாக அல்லாஹ் கூறியுள்ளான்.

நீங்கள் திருமணம் செய்யத் தடை செய்யப்பட்ட பெண்கள்! உங்கள் தாய், உங்கள் மகள்கள், உங்கள் சகோதரிகள், உங்கள் தந்தையின் சகோதரிகள், உங்கள் தாயின் சகோதரிகள், உங்கள் சகோதரனின் மகள், உங்கள் சகோதரியின் மகள்கள், உங்களுக்குப் பாலூட்டிய (செவிலித்தாய், உங்களின் பால்குடிச்சகோதரிகள், உங்கள் மனைவியரின் தாய்மார்கள் ஆகியோராவார் ).

அவ்வாறே நீங்கள் ஒரு பெண்ணைத் திருமணம்செய்து அவனுடன்(தாம்பத்யம்) சேர்ந்துவிட்டால் அவனுடைய முந்திய கணவனுக்குப் பிறந்து உங்கள் கண்காணிப்பிலிருக்கும் மகளை நீங்கள் திருமணம் செய்யக்கூடாது.

ஆனால் நீங்கள் ஒரு பெண்ணை திருமணம் செய்த பின்னர் அவளுடன் (தாம்பத்யம் சேராது இருந்தால், அவளைவிலக்கிவிட்டால்) அவளுக்கு முந்திய கணவனால் பிறந்த பெண்ணை திருமணம் செய்வது குற்றமில்லை.

உங்களுக்குப் பிறந்த மகன்களின் மனைவியரையும் நீங்கள் திருமணம் செய்யக்கூடாது. (உடன்பிறந்த) இரு சகோதரிகளை (ஏக காலத்தில் மனைவியராக) ஒன்று சேர்ப்பது கூடாது.

இதற்கு முன் நடந்தவை தவிர, (விலக்கப்படும் முன் அவை நடத்திருந்திருப்பதால்) நிச்சயமாக அல்லாஹ் மன்னிப்பவன், கருணைமிக்கவன் (4:23)

இவ்வாறு வெளிப்படையாக குர்ஆனிலோ நபி வழியிலோ தடை செய்யப்பட்டவை அனைத்தும் தடை செய்யப்பட்டவை என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

சில விஷயங்கள் நேரடியாகத் தடை செய்யப் படாவிட்டாலும் கடுமையான எச்சரிக்கையும் கண்டிப்பும் சேர்ந்து கூறப்பட்டு தடை செய்யப் பட்டிருந்தால் அவற்றையும் ஹராம் எனும் விலக்கப்பட்டவற்றின் வரிசையில் சேர்க்கலாம்.

**உதாரணமாக பின்வரும் வசனத்தைப் பாருங்கள்...**

“மது, சூது, சிலைகள், அம்புகள் மூலம் குறி பார்ப்பது) இவையெல்லாம் அசுத்தமானவையே. ஷைத்தானின் வேலைகளில் உள்ளவையே. எனவே அதைவிட்டு விடுங்கள். நீங்கள் வெற்றி பெறுவீர்கள். மது, சூது இவற்றின் மூலம் உங்களிடையே பகையையும் வெறுப்பையும் ஏற்படுத்தவே ஷைத்தான் விரும்புகிறான். மேலும் இறைவணக்கத்தை விட்டும் இறைவனைத் துதிப்பதை விட்டும் உங்களைத் தடுத்திடவும் விரும்புகிறான். நீங்கள் விழிப்படைவீர்களா?” (5:90,91)

அடிக்குறிப்பு :

90–வது வசனத்தில் மது, சூது, சிலை வணக்கம், அம்பு வைத்து குறிப்பார்த்தல் ஆகிய நான்கு செயல்கள் கடுமையாக கண்டிக்கப்பட்டு எச்சரிக்கப்பட்டுள்ளன.

அடுத்த 91–வது வசனத்தில் மதுவும் சூதுவும் தனியாக எச்சரிக்கப்பட்டிருக்கின்றன.

இவ்விரண்டின் மூலம் உங்களிடையே பகை ஏற்படும், விரோதம் ஏற்படும், இறைவனைத் துதிக்காமலும் இறைவனை வணங்காமலும் நீங்கள் இருந்து விடுவீர்கள். இப்படி உங்களை ஆக்க ஷைத்தான் விரும்புகிறான். எனவே விழிப் படையுங்கள் என்ற எச்சரிக்கை இருக்கிறது.

மேற்கண்ட பாவங்களில் மது, சிலை வணக்கம், குறிபார்த்தல் ஆகிய மூன்றும் நேரடி யாகவே தடை செய்யப்பட்டுள்ளன என்பதை முன்னர் கூறப்பட்டிருக்கும் குர்ஆன் வசனங்கள் நபிமொழிகள் மூலம் அறிய முடியும்.

ஆனால் சூது தடை செய்யப்பட்டுள்ளது என்றோ அல்லாஹ் சூதை தடை செய்து விட்டான் என்றோ நேரடி வாக்கியத்தில் கூறப் பட்டால் அது குறித்த கடும் எச்சரிக்கையாகவே வாசகம் இங்கு இருக்கிறது.

சூது ஒரு பெரும்பாவம்தான் என்று நாம் விளங்கிக் கொள்வதற்கு இவ்வாறான கடும் எச்சரிக்கைகளே போதும் என்பதே இமாம் கர்லாவீயின் கருத்து – மொழி பெயர்ப்பாளர்.

ஆனால் ஹராம் என்ற வாசகம் வராமல் நஹ்யு – தடை என்ற வாசகம் மட்டும் வருவதால் அதை ஹராம் என்று கருத முடியுமா? என்பதில் அறிஞர்களிடையே மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன.

**இதற்கு உதாரணமாக பின்வரும் செய்தியைப் பாருங்கள்...**

அபூதஹ்லா (ரஹ்) கூறுகிறார் ஒருநாள் நான் அப்துல்லாஹ் பின் உமர் (ரழி) விடம் இருந்தேன். அப்பொழுது அவர்கள் "நபி (ஸல்) அவர்கள் உலர்ந்த திராட்சையையும் பேரித்தம் பழத்தையும் ஒன்றாகக் கலப்பதை தடுத்தார்கள்" என்று கூறினார்கள்.

அப்பொழுது எனக்குப் பின்னாலிருந்த ஒருவர் "அப்துல்லாஹ் பின் உமர் (ரழி) (கூறியது அவருக்கு சரியாகக் கேட்காததால்) என்ன கூறினார்கள்" என்று கேட்டார்.

அதற்கு நான் "உலர்ந்த திராட்சையையும் பேரித்த பழத்தையும் ஒன்றாகக் கலப்பதை நபி (ஸல்) அவர்கள் தடை (ஹராம்) செய்தார்கள்" என்று கூறினேன்.

இதைக்கேட்ட அப்துல்லாஹ் பின் உமர் (ரழி) "நான் அப்படிச் சொல்லவில்லை நீ பொய் சொல்லிவிட்டாய்" என்றார்கள்.

அதற்கு நான் "இறைத்தூதர் (ஸல்) அதைத் தடுத்தார்கள் என்று கூறினீர்களே! அப்படி யானால் அது ஹராம் (விலக்கப்பட்டது) தானே!" என்று கேட்டேன்? அதற்கு அப்துல்லாஹ் பின் உமர் (ரழி) அவர்கள் "நீ அதை அப்படி பார்க்கிறாயா? என்று கேட்டார்கள்.

இந்த செய்தியின் அறிவிப்பாளர் வரிசையில் இடம் பெற்றுள்ள ஸலாம் (ரஹ்) கூறுகிறார் "இது ஓர் ஒழுங்கீனம் என்பதால் நபி (ஸல்) இது கூடாது என்றார்கள் என்பதே அதன் பொருள் என இப்னு உமர் (ரழி) கருதுகிறார்கள்"

எவையெல்லாம் ஹராம் என்று உறுதியாகக் கூறவில்லையோ எவை ஹராம் என்பதில் ஐயம் உள்ளதோ கருத்து வேறுபாடு உள்ளதோ அவற்றையெல்லாம் "ஹராம்" என்று கூறுவ தில்லை மிக்க பேணுதலுடனே கவனமாக இருந் திருக்கிறார்கள் இமாம் மாலிக் இமாம் அஹ்மது ஆகிய இரு பெரும் இமாம்களும்.

இமாம் நஹயீ (ரஹ்) கூறுகிறார்

"சங்கைக்குரிய இமாம்கள் எதை ஹராம் என்று கூறவில்லையோ (கூற முடியவில்லையோ) அதை மக்ரூஹ் (வெறுக்கத்தக்கது) என்று கூறுவார்கள்".

இப்னு அவ்ஃப் (ரஹ்) கூறுகின்றார்

"மக்ஹூல் என்பவர் என்னிடம் ஒரு கூட்டத் தினர் மத்தியில் ஒரு பழம் போடப்பட்டது. அதை அவர்கள் அடித்துப் பிடித்து எடுத்துக் கொண்டனர். இச்செயலைப் பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்? என்று கேட்டார்.

அதற்கு நான் நம்மைப் பொருத்தவரை இது மக்ரூஹ் (வெறுக்கத்தக்க செயல்) என்றேன்.

அதற்கு மக்ஹூல் "இது ஹராம் அல்லவா?" என்றார். உடனே நான் "நம்மைப் பொருத்தவரை இது மக்ரூஹ்" என்றேன் அதற்கவர் "இது ஹராம் அல்லவா?" என்றார்.

"மக்ஹூப் என்பவரின் கருத்து நமக்கு பார தூரமானதாகவே தெரிகிறது என்று இப்னு அவ்ஃப் (ரஹ்) கூறுகின்றார்.

காசிம் பின் முஹம்மது (ரஹ்) என்ற அறிஞரி டம் ஒருவர் "இசை ஹராமா?" என்று கேட்டார். இதற்கு பதிலளிக்காது அவர்கள் அமைதியாக இருந்தார்கள். அவர் மீண்டும் கேட்டார். பதி லளிக்கவில்லை. மீண்டும் கேட்டார் அப்பொழுது "குர்ஆன் எதை ஹராம் என்று கூறியுள்ளதோ அதுதான் ஹராம் எனினும் நன்மை, தீமை இவ்விரண்டும் அல்லாஹ்விடம் வரும்போது



இசை நன்மையுடன் சேருமா, தீமையுடன் சேருமா?'' என்று கேட்டார்கள். அதற்கு அவர் ''அது தீமையுடன்தான் சேரும்'' என்றார். உடனே ''அப்புறமென்ன நீயே முடிவு செய்துகொள்'' என்று காசிம் பின் முஹம்மது (ரஹ்) கூறினார்கள்.

இமாம் அஹ்மது பின் ஹன்வீ (ரஹ்) கூறுவதாக அவர்களின் மகன் அப்துல்லாஹ் கூறுகிறார்

நபி (ஸல்) அவர்கள் தடை செய்துள்ளவை இரு வகையுண்டு. ஒன்று ஹராம், மற்றொன்று ஒழுங்கீனம்.

''ஒரு பெண்ணைத் திருமணம் செய்து அவளுடன் வாழ்ந்துகொண்டிருப்பவர் அவனுடைய தந்தையின் சகோதரியையயோ (மாமி) தாயின் சகோதரியையோ (சின்னம்மா) (இரண்டாவது மனைவியாகத்) திருமணம் செய்யக் கூடாது'' என்று நபி (ஸல்) கூறினார்கள். (அறிவிப்பாளர் அபூஹுரைரா (ரழி) நூல் புஹாரி முஸ்லிம், அபூதாவுத், நஸயீ, இப்னு மாறா)

நபி (ஸல்) கூறிய இந்தத் தடை ஹராம். முற்றிலும் விலக்கப்பட்டது.

''வன விலங்குகளின் தோல்களைப் பயனப்டுத்தக் கூடாது'' என்று நபி (ஸல்) தடுத்துள்ளார்கள் (அறிவிப்பாளர் – ஸயீத்பின் அபிஅரூபா (ரஹ்) நூல் : அபூதாவூத், திர்மிதி, நஸயீ, ஹாஇம்

இந்தக் தடையும் ஹராம்தான் முற்றிலும் விலக்கப்பட்டதுதான்.

இதுபோல் வேறுசில விஷயங்களை நபி (ஸல்) தடை செய்துள்ளார்கள். ஆனால் அவை ஹராம் அல்ல. ஒழுங்கீனம் என்பதால் கூடாது என்று கூறியுள்ளார்கள்.

இதுவே இமாம் அஹ்மது (ரஹ்) வின் கருத்து. ( நூல் நமிஉல் உலூம் வல்ஹிகம், இப்னு றறப் (ரஹ்).)

**உண்மைக்குப் புறம்பான நம்பிக்கைகளும் செயல்களும் பாவங்களே...**

இஸ்லாத்தில் இல்லாதவற்றை இஸ்லாத்தில் உள்ளதாக ஆக்குவது ''பித்அத்'' என்றழைக்கப் படுகிறது. இந்த பித்அத் எனும் நூதனங்கள் இருவகையுண்டு ஒன்று நம்பிக்கை மற்றொன்று செயல்கள்.

ஒரு விஷயத்தை எப்படி நம்ப வேண்டும் என்று மார்க்கம் கற்றுத் தருகிறதோ அதற்கு மாறாக அதை நம்புவது கொள்கை நூதனம் எனப்படும்.

ஒரு விஷயத்தை எப்படிச் செய்ய வேண்டும் என்று மார்க்கம் கற்றுத் தருகிறதோ அதற்கு மாறாக அதைச் செய்வது ''நூதனச் செயல்'' எனப்படும்.

இந்த இரண்டுவகை "பித்அத்"களுமே பாவங்கள்தான். ஆனால் பெரும்பாவங்களை விடவும் "பித்அத்"கள் ஒருவகையில் ஆபத்தானவை.

**எப்படியென்றால் பெரும்பாவங்கள் செய்பவன் அதற்காக மனம் வருந்தி மன்னிப்பு கேட்பதன் மூலம் அல்லாஹ்விடம் நெருங்கிவிடுகிறான். ஆனால் "பித்அத்" காரன் தான் செய்யும் பித்அத்களை எல்லாம் நன்மைகளே என்று நினைக்கிறான் (அது பாவம் என்றே நினைப்பதில்லை. நினைத்தால்தானே திருந்துவதற்கு!?**



# குடியரசு தலைவருக்கு ஓர் கடிதம்

## இந்து ராஷ்டிராவாக இந்தியா மாறுகின்றது?

கண்ணியத்திற்குரிய குடியரசு தலைவர் மற்றும் பிரதமர் அவர்களே நம் நேசத்திற்குரிய நாடும் நாட்டு மக்களும் கடுமையான சாவல்களையும், அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்கின்ற இந்த வேலையில் கணத்த இதயத்துடன் நான் தங்களுக்கு எழுதும் வெளிப்படையான கடிதம் இது.

நான் இந்திய ராணுவத்தில் பணிபுரிந்தவன். சுதந்திரமடைந்து 15 ஆண்டுகளிலேயே ராணுவத்தில் இணைந்தவன். இந்திய கடற்படையின் தலைமை அதிகாரியாக 1990–1993 வரை பணிபுரிந்து பணி நிறைவு பெற்றவன். இந்த இந்திய தேசத்தில் ஏற்பட்ட பல மாற்றங்களுக்கும் நான் சாட்சியாக இருக்கின்றேன்.

1947 தேசப்பிரிவனை பயங்கரங்கள் முதல் நவீன தொழில்நுட்ப இணைப்புகளுடன் இன்று பார்த்துக் கொண்டிருக்கும் வித்தியாசமான இந்த உலகிலும்தான் இந்து மத நம்பிக்கையாளன் என்ற அடிப்படையிலும் தான் இந்த கடிதத்தை நான் எழுதுகிறேன். எனக்கு தெரிந்த, நான் வளர்ந்த இந்து மதம் கனிவானது, பன்முகத் தன்மை வாய்ந்தது, எனக்கு எல்லா மக்களையும் நேசித்திட மதித்திட கற்றுக் கொடுத்தது.

நான் அறிந்த இந்து மதம் இந்த நாட்டிலே எரிந்துகொண்டிருக்கின்ற பிரிவினைகளை ஊதி பெரிதாக்கி நாடு முழுவதும் அச்சத்தை ஏற்படுத்துகின்ற “இந்துத்துவத்தை” போன்றதல்ல “இந்துத்துவம்” வன்முறைகளையும் சகிப்புத்தன்மையற்ற போக்கையும் கொண்டது.

இன்று வயதால் 80–களில் இருக்கும் நான் என் சொந்த நாட்டு மக்களின் மீதே நடத்தப்படும் வெறி தாக்குதல்கள் சம்பவங்களை எண்ணி வெட்கி தலை குனிகிறேன். இந்த தாக்குதல்களும் சம்பவங்களும் சிறுபான்மையினர்கள் மீதும் தலித்களின் மீதுமே நடத்தப்படுகின்றது.

இந்தியாவின் மதச்சார்பற்ற பண்பாட்டிற்கு உதாரணமான ராணுவத்தில் 45 ஆண்டுகள் கண்ணியமான முறையில் பணியாற்றியிருக்கின்றேன். கப்பல்களில், நீர்மூழ்கி கப்பல்களில், விமானங்களில் மற்றும் யுத்தத்தின் போது போர் வரிசையில் நாங்கள் ஜாதி, மத பாகுபாடு பார்த்ததில்லை. நாங்கள் ஒன்றாகவே பயிற்சி எடுத்தோம், சண்டையிட்டோம், உண்டோம், வாழ்ந்தோம் ஒன்றாகவே மரணித்தோம்.

மே 2014–ல் இந்த அரசாங்கம் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தது முதல் இந்த நாடு முழுவதும் அதிகரித்து வரும் சிறுபான்மையினர் மீதான வெறித்தாக்குதல்களுக்கு நாம் ஏன்

சாட்சியாக இருந்திட வேண்டும். இந்த சம்பவங்கள் எல்லாம் குறிப்பிட்ட சில சமூகங்களை இவர்கள் தனிமைப்படுத்துவதையே வெளிக் காட்டுகிறது. இதற்கு உதாரணம் முஸ்லிம்கள்.

இன்று முஸ்லிம்கள் தங்கள் தேசப்பற்றை நிருப்பித்திட வேண்டிய கட்டாய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றார்கள். அவர்களின் உணவு பழக்கம் மற்றும் இதர அடிப்படை சுதந்திரங்கள் கேள்விக் குறியாக்கப்பட்டி ருக்கின்றது.

முஸ்லிம்கள் மீண்டும் மீண்டும் அவர்களின் வழிபாட்டு தளங்கள் தாக்குதல்களுக்கு உள்ளாகும் இடமெல்லாம் இந்த சூழ்நிலைக்கே தள்ளப்படுகின்றார்கள். இவர்களின் இந்த ஒரு தலைபட்சமான கம்பல நடத்தை (தாக்குதல்) பல உயிர்களை காவு வர்ங்கியிருக்கின்றது. இந்த சம்பவங்களில் மூத்த தலைவர்களின் மறை முகமான நேரடி தலையாக இருப்பது நம்மால் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று.

இந்த மூத்த தலைவர்களின் தலையீடுகளால் நடந்த சம்பவங்கள் ஏராளம். அவை மீண்டும் மீண்டும் நடந்தேறுகிறது.

ஆக இவையாவும் ஆர்.எஸ்.எஸ். மற்றும் அதன் பிரிவுகளால் நன்கு திட்டமிடப்பட்ட "இந்து ராஜியத்தின் உருவாக்கத்தை" திணித் திடும் இவர்களின் முயற்சியை வெட்ட வெளிச்ச மாக்குகிறது என்றால் மிகையாகாது.

இவற்றின் ஆபத்தான விளைவுகளால் வதந்தி களை அடிப்படையாக வைத்து மக்கள் கும்பல்களால் மிரட்டப்படுகிறார்கள் என்பது மட்டுமின்றி கோரமாக கொலை செய்யவும் படுகிறார்கள். ஆக இவை சட்ட ஒழுங்கின் மீதான இவர்களின் முழு அவமதிப்பையும் வெளிக் காட்டுகிறது. ஆனால் அதிகமான வழக்குகளில் சட்டத்தை நடைமுறைப்படுத்த அதிகாரமுள்ள வர்கள் தங்களை அப்பழுக்கற்றவர்களாக காட்டிக்கொள்கிறார்கள். இவை எல்லாவற்றிலும் நம்மை அதிர்ச்சிக்குள்ளாக்குவது என்னவெனில் இந்த விவகாரங்களில் தலையிடும் அதிகாரம் படைத்தவர்கள் தெளிவான கண்டனங்களை கூட தெரிவித்திடவில்லை என்பதுதான்.

துரதிஷ்டவசம் என்னவென்றால், காலம் காலமாக அரசு இதுபோன்ற சம்பவங்களுக்கு தரும் பதில் அவற்றை வேண்டுமென்ற செய்தது போல் தெரிகிறதே தவிர கவனக்குறைவாலோ அலட்சியத்தாலோ இல்லை என்பதுதான்.

ஆட்சியில் இருப்பவர்களின் ஒருமித்த பதில் வினைத்திட்பமுடைய கொடிய தாக்குதல்களை குற்றச்சாட்டுகளை "வருத்தத்திற்குரியது அல்லது எதிர்பாராதது" என்று கூறுவதுதான். அதேசமயம் இவற்றை எதிர்த்து போராடுபவர்கள் இது போன்ற நடத்தயை இனி ஒருபோதும் இந்த சமுதாயம் சகித்துக்கொள்ளாது என்பதால் உறுதி யாக இருந்திட வேண்டும். இங்கு இருக்கும் எம்.பி.க்கள், அமைச்சரவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சர்களும்தான் கொடிய கருத்துக்களை பரப்புவதில் இது போன்ற வேலைகளை செய்வதில் முன்னணியில் நிற்கின்றார்கள்.

ஆக இவையாவும் ஆளுகின்ற கட்சியும் அதன் சக அமைப்புகளும் ஒரு திட்டத்துடன் தான் இவற்றை செய்து வருகிறார்கள் என்பதை உறுதிப்படுத்துகிறது. இந்த விஷயங்களை இன்று நான் உயர்மட்ட தலைமை அதிகாரிகளுக்கு சொல்லிட வேண்டிய தேவையில்லை.

இது சிறுபான்மையினர் வாழும் தேசம், குறிப்பாக முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் இன்னும் தலித்துகள், ஆதிவாசிகள் ஒதுக்கப்பட்டு, பார பட்சப்படுத்தப்படுகிறோம் என்ற உணர்வால் தான் ஏற்கனவே இருந்து கொண்டிருக்கின்றார் கள். இது நெருப்போடு விளையாடுவதற்கு சமம்.

இந்த தேசத்தின் அற்புதமான 'பன்முகத் தன்மையை" பலமாக கருத வேண்டிய அரசு இன்று இப்படியொரு சூழலுக்கு தேசத்தை தள்ளி விட்டது. இன்று சர்வதேச சமூகங்களை பொறுத்தவரை நாம் சகிப்புத் தன்மையற்றவர் கள், குறுகிய நோக்குடைய இனவாதிகள், தனிமைப்படுத்தப்பட்டவர்கள், பாசிசவாதிகள் என்ற பார்வையில் பார்க்கப்படும் வன்முறைகள் இந்தியா கறைப்படிந்த ஜனநாயக நாடு என்னும் பிம்பத்தை வலுப்படுத்துகிறது.

மனித உரிமைகளையெல்லாம் மண்ணிலே போட்டு மிதித்து குற்றவாளிகள் தப்ப வைக்கப் படுகிறார்கள்.

பிரதமரும் அவரின் அமைச்சர்களும் இந்திய குடியரசு தலைவரிடம் உறுதிமொழி எடுத்து பதவியேற்றவர்கள். அவர்கள் இந்த

அரசியல் நிர்ணய சட்டத்தை நிலை நிறுத்து வோம் என்ற உறுதி பூண்டார்கள். ஆனால் எடுத்த உறுதிமொழியை நிறைவேற்றிட தவறி விட்டார் கள் என்பதற்கு நாட்டில் நடந்து கொண்டிருக்கும் முக்கியமான சம்பவங்கள் சாட்சி.

இவை தேசிய ஒருமைப்பாட்டிற்கோ அல்லது தேசிய பாதுகாப்பிற்கோ நன்மை பயப்பதாக இல்லை. எனவே மத்திய மற்றும் மாநில அரசுகள் விரைவாக செல்பட்டு ஐயத்திற்கு இடமின்றி அந்த சம்பவங்களை கண்டித்து நீதி வழங்கிட வேண்டும்.

குற்றவாளிகளை தண்டித்திட வேண்டும். பல்வேறு கலாச்சாரங்களைக் கொண்ட இந்த நாட்டு மக்களுக்கு எதிராக நம்முடைய பாரம் பரிய பண்பாட்டிற்கு எதிராக முன்னே நின்று பேசி தூண்டுபவர்களை செயல்படுபவர்களை தாங்கள் எடுத்திடும் நடவடிக்கை தடுத்திட வகை செய்ய வேண்டும்.

இந்தியா 5000 ஆண்டுகளுக்கு மேலாக மாறிவரும் பல்வேறு கலாச்சாரங்களை கொண்ட மக்கள் வாழ்ந்திடும் ஒப்பற்ற சின்னமாக விளங்குகிறது. இந்த பண்முகத்தன்மை இந்த சமுதாயம் மற்றும் மக்களின் ஒப்பற்ற இயல்பு. இவற்றை இந்த உலகில் எங்குமே பார்த்திட முடியாது. ஆகவேதான் ஒரே மத அடையாளம், ஒரே கலாச்சாரம் என்னும் இவர்களின் தத்துவம் நம்முடைய தொன்மையான நாகரீகத்தையும் பாரம்பரியத்தையும் அவமானப்படுத்தும் விதமாக அமைகிறது.

கண்ணியத்திற்குரிய குடியரசுத் தலைவர் மற்றும் பிரதமர் அவர்களே நீங்கள் இருவரும் இந்த ஒவ்வொரு குடிமக்களின் உரிமைகளான பேச்சு சுதந்திரம், வழிபாட்டு சுதந்திரம் என்று இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்தில் புத்திசாலித் தனமாக குறிப்பிடப்பட்டிருக்கும் அந்த அடிப் படை உரிமைகளை பாதுகாப்போம். கண்ணியப் படுத்துவோம் என உறுதிமொழியேற்றவர்கள்.

அனுபவமுள்ள ஒரு ஒய்வு பெற்ற அதிகாரி படைத்தலைவன் என்ற அடிப்படையில் நானும் உங்களைப் போன்று இந்த அரசியல் நிர்ணயச் சட்டத்தை நிலை நாட்டிட பாதுகாத்திட உறுதி பூண்டுளளேன். நாட்டுக் கொள்கையின் வழி காட்டும் நெறிகளில் அரசியலமைப்பின் முன்னுரையில் கூறப்பட்டுள்ள ஒவ்வொரு குடிமக்களின் உரிமைகளையும் பாதுகாத்திடுவது தேர்ந்தெடுக் கப்பட்ட ஒவ்வொரு அரசின் மீது கட்டாய கடமையாகும். தலைமை கமெண்டராக தலைமை நிர்வாகிகளாகிய மக்களால் உங்களுக்கு தரப்பட்ட அதிகாரங்களை வைத்து நீங்கள் நடைமுறைப் படுத்த வேண்டியவைகள் இதுவே.

இப்போதே இங்கு ஏற்பட்டிருக்கும் சூழலை கிள்ளி எரிந்திடவில்லை என்றால் என்ன ஆகும். இதுவே பெரும் தாமதம்தான். நிச்சயமாக இந்திய குடிமக்களாகிய நாங்கள் இதில் நீங்கள் தலையிட்டு தக்க நடவடிக்கை எடுத்து ஜன நாயகத்தின் மீதான எங்களின் நம்பிக்கையை மீண்டும் நிலைபெற செய்வார்கள் என்றே நம்புகிறோம். நீங்கள் உறுதிமொழி செய்தபடி சகோதரத்துவம், சமத்துவம், கண்ணியம் இவற்றை ஒவ்வொரு குடிமக்களுக்கும் பெற்றுத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு
**எல். ராம்தாஸ்**
முன்னாள் படைத்தலைவர்


பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்

**கொடிய வட்டியில் இருந்து மீள..!**

தாங்கள் வங்கியில் அடகு வைத்திருக்கும் நகைகளை ஏலத்திற்கு செல்லாமல் மீட்டு நல்ல விலைக்கு விற்று தரப்படும்.

தொடர்புக்கு
**90955 40678**



# பரிணாமத்தை மறுதலிக்கும் கண்டுபிடிப்புகள்

பண்டைய நாகரீகத்தில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட பொருள்கள் "நாகரீக முதிர்ச்சியற்ற நிலையில் இருந்து நாகரீகமான நிலைக்கு மனிதன் முன்னேறினான்" என்ற தத்துவத்தை ஆதாரமற்ற தாக்குகிறது.

வரலாற்றை நாம் ஆய்வு செய்தால், மனிதன் அறிவுத் திறமையோடும் புதியதை ஆக்கும் திறனோடும் வாழ்ந்திருக்கின்றான் என்ற உண்மை புலப்படும். நூறாயிரம் வருடங்களுக்கு முன் வாழ்ந்தவர்களின் செயல்பாடுகளும், அவர்கள் விட்டு சென்றவைகளும் பரிணாம தத்துவத்திற்கு எதிரான கருத்துகளை கொண்டிருக்கின்றன. மேலும் அவற்றை நோக்கும் போது அவர்கள் புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கி தங்களது தேவைகளை பூர்த்தி செய்து நாகரீகத்தை கட்டி யெழுப்பி உள்ளனர் என்பது புரியும்.

இறைவனால் அனுப்பப்பட்ட தூதர்கள், அவர்களுடைய சமுதாயத்தை மாற்றங்களுக்கு உட்படுத்தி அவர்களின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் உதவியுள்ளனர். இறைவனின் உதவியால் அறிவியல் கருத்துகளின் விளக்கங்களையும் அவர்கள் பெற்றிருந்தனர். உதாரணமாக நூஹ் என்ற இறைதூதர் கப்பல் கட்டுமான தொழில் நுட்பத்தை தெரிந்திருந்தார். அவருடைய படகு நீராவி சக்தியை கொண்டு இயங்கிற்று என்று திருமறை குர்ஆனின் வசனம் நமக்கு புரிய வைக்கிறது. (இறைவனே மிக அறிந்தவன்),

ஆகவே (நாம் விதித்திருந்த) வேதனை நெருங்கி அடுப்பு பொங்கவே (நூஹை நோக்கி)" ஒவ்வொரு உயிருள்ள பிராணியிலிருந்தும்) ஆண், பெண் இரண்டு கொண்ட ஒவ்வொரு ஜோடியை அதில் ஏற்றிக் கொள்ளுங்கள். (அழிந்து விடுவார்கள் என) நம் வாக்கு ஏற்பட்டு விட்ட (உங்களுடைய மகன் ஆகிய) வர்களை தவிர, உங்களுடைய குடும்பத்தவரையும் (மற்ற) நம்பிக்கையாளர்களையும் அதில் ஏற்றிக் கொள் ளுங்கள்" என்று நாம் கூறினோம். வெகு சொற்ப மக்களைத் தவிர (மற்றவர்கள்) அவருடன் நம்பிக்கை கொள்ளவில்லை. *அல் குர்ஆன் 11:40*

தன்னூர் என்று அறியப்படும் அடுப்பு (ஓவன்) இன்றும் அதிகமான பகுதிகளில் பயன்படுத்தப்படுகிறது. இது இந்த வசனத்தில் கூறப் பட்டுள்ளது.

OVEN GUSHED FORTH WATER. "அடுப்பு வெள்ளத்தை சூட்டு ஓடச்செய்தது" எனவே அப்படகு அடுப்பினால் ஏற்படும் கொதிநிலை இயக்கத்திற்காக தயார் நிலையில் நின்றுள்ளது.

எல்மாலி (Elmali) தன்னுடைய ஹம்தி யாசிர் (Hamdi Yazir) என்ற தொகுப்பில் அப்படகு அடுப்பினால் ஏற்படும் நீராவி சக்தியினால் இயங்கும் ஒரு வகை எனக் குறிப்பிட்டுள்ளார்.

தன்னூர் : மூடிய அடுப்பு அல்லது அடுப்பு என்றும் அகராதியில் பொருள் சொல்லப்படுகிறது. "ஃபரா" என்ற வார்த்தைக்கு அதிக விசையுடனும் தீவிரத்துடனும் கொதித்தல் அல்லது சூடுச்செய்தல் என்பது பொருளாகும். அப்படகு



பாய்மர வகையை சார்ந்தது அல்ல. மாறாக நீராவி சக்தியினால் இயங்கும் வகையை சார்ந்தது.

இறைத்தூதர் சுலைமான் (இறைவனின் சலாமத் அவர் மீது உண்டாகட்டும்) அவர் களின் காலத்திலும், கலை மற்றும் தொழில் நுட்பங்கள் வளர்ச்சி நிலையை எட்டியிருந்தன.

உதாரணமாக வானூர்திகளை விட வேகமாக செல்லக்கூடிய போக்குவரத்து வாகனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்று குர்ஆன் கூறுகிறது.

அன்றி, சுலைமானுக்கு காற்றை வசப் படுத்தி தந்தோம். அதன் காலைப் பயணம் ஒரு மாத தூரமும், அதன் மாலை பயணம் ஒரு மாத தூரமுமாக இருந்தது. அல் குர்ஆன் *34:12*

இவ்வசனம் அதிகமான தூரங்களை எளிதில் கடக்க முடியும் என்று குறிப்பிடுகிறது.

இன்றும் பயன்பாட்டில் இருக்கும் தொழில் நுட்ப முறைகள் அன்றும் இந்த காற்று ஊர்திகளுக்கு பயன்படுத்தப்பட்டிருக்கலாம். (இறைவனே மிக அறிந்தவன்)

**மேலும் குர்ஆன் வசனம் 34:13**

அ(ன்றி ஜின் ஆகிய)வைகள் சுலைமான் விரும்பிய மாளிகைகளையும், சிலைகளையும், (பெரிய பெரிய)தண்ணீர் தொட்டிகளை போன்ற பெரும் கொப்பரைகளையும், அசைக்க முடியாத பெரிய (பெரிய) தேகு (சமையல் பாத்திரங்)களையும் செய்து கொண்டிருந்தன. (அவருடைய குடும்பத்தினரை நோக்கி) “தாவூதுடைய சந்ததிகளே இவைகளுக்காக நீங்கள் (நமக்கு) நன்றி செலுத்திக் கொண்டி ருங்கள்” (என்று கட்டளையிட்டோம்). எனினும் என்னுடைய அடியார் களில் நன்றி செலுத்துபவர்கள் வெகு சொற்பம்.

இறைத்தூதர் சுலைமான் (இறைவனின் சலாமத் அவர் மீது உண்டாகட்டும்) அவரு டைய பணியாட்களை உயர்தரமான கட்டட கலை தொழில் நுட்பங்களுக்கு ஈடுபடுத்தி யுள்ளார் என்பது புரிகிறது.

மற்றொரு வசனத்தில் - ஆதலால், (அவர் விரும்பிய ஆட்சியை கொடுத்து) காற்றையும் அவருக்கு வசப்படுத்தி கொடுத்தோம். அது அவருடைய கட்டளையின் படி, அவர் செல்லக் கூடிய இடங்களுக்கெல்லாம் மிக்க சௌகரிய மாகவே (அவரை சுமந்து) சென்று கொண்டி ருந்தது.

அன்றி, சைத்தான்களில் உள்ள சிற்பிகள், முத்துக் குளிப்பவர்கள் ஆகிய அனைவரையும் அவருக்கு வசப்படுத்தி கொடுத்தோம். குர் ஆன் *38:36-37*

உண்மையில் நீந்தி செல்லும் ஜின்களின் கட்டுபடுத்தும் ஆற்றலை இறைத் தூதர் சுலை மான் அலைஹி (PBUH) பெற்றிருந்தார். கடலுக் கடியில் காணப்படும் வளங்களின் இடங்களை பற்றியும் அதை பிரித்தெடுப்பது பற்றியும் இங்கே குறிப்பிடுகிறது. கடலுக்கடியில் காணப் படும் எண்ணெய், உலோகங்களை பிரித்தெடுப் பதற்கு அதிநவீன தொழில்நுட்ப முறை தேவைப்படும்.

இந்த வசனங்கள், அந்த முறைகள் அப்பொழுது பயன்பாட்டில் இருந்ததை குறிப் பிடுகிறது. மற்றொரு வசனம் உருக்கப்பட்ட செம்பு பாளங்களை பற்றி குறிப்பிடுகிறது.

**திருக்குர்ஆன் 34:12**

உருக்கப்பட்ட செம்பு பற்றிய வசனம் மின்சாரத்தை அடிப்படையாக கொண்ட நவீன தொழில் நுட்ப முறைகளின் பயன்பாட்டை குறிக்கிறது. செம்பு ஒரு சிறந்த உலோக மற்றும் வெப்ப கடத்தியாகும். இதன்மூலம் மின்சாரத்தின் பயன்பாடு இருந்துள்ளது தெரிய வருகிறது.

இறைத் தூதர் தாவூத் (இறைவனின் சலாமத் அவர் மீது உண்டாகட்டும்) அவர்கள் இரும்பு வேலைகளையும் மற்றும் போர் கவசங்கள் உருவாக்குதல் பற்றியும் மிகுந்த அறிந்தவராக இருந்தார் என குர்ஆன் வசனங்கள் தெரிவிக் கின்றன.

மேலும் (சங்கிலி) வளையங்களை (முறைப் படி) ஒழுங்காக இணைத்து போர்ச் சட்டை செய்யும் படியும் (கட்டளையிட்டதுடன் அவரையும் அவரை சார்ந்தவர்களையும் நோக்கி)" நற்செயல்களையே செய்து கொண்டி ருங்கள். நிச்சயமாக நான், நீங்கள் செய்பவை களை உற்று நோக்கினவனாக இருக்கிறேன்" (என்றோம்). அல் குர்ஆன் *34:10-11*

இறைதூதர் துல்கர்னைன் (இறைவனின் சலாமத் அவர் மீது உண்டாகட்டும்) இரு மலைகளுக்கு நடுவே ஒரு தடுப்பு சுவரை எழுப்பினார். அக்கால மக்கள் யாராலும் கடந்து செல்ல முடியாத, துளையிட முடியாத தன்மை கொண்டதாக அந்த சுவர் இருந்தது. அவர் இரும்புத்துண்டுகளையும், உருக்கப்பட்ட செம்பையும் பயன்படுத்தினார் என குர்ஆன் கூறுகிறது.

நீங்கள் (அதற்கு தேவையான) இரும்புப் பாளங்களை என்னிடம் கொண்டு வாருங்கள். என்றும் கூறி (அவைகளை கொண்டு வந்து இரு மலைகளுக்கிடையில் இருந்த பள்ளத்தை நிறைத்து) இரு மலைகளின் உச்சிக்கு அவை சமமாக உயர்ந்த பின்னர், நெருப்பாக பழுக்கும் வரையில் அதை ஊதுங்கள் என்றார். (அதன் பின்னர்) செம்பையும் என்னிடம் கொண்டு வாருங்கள். நான் அதனை உருக்கி அதன் மீது ஊற்றுவேன் என்றார். அல் குர் ஆன் *18:96*

இவ்வசனம் துல்கர்னைன் அவர்கள் வலுவூட்டப்பட்ட கட்டுமான தொழில் நுட் பத்தை பயன்படுத்தியுள்ளார் எனக் குறிப்பிடு கிறது. கட்டிடங்கள், மேம்பாலங்கள் மற்றும் அணைகள் ஆகிய கட்டுமான தொழில்களில் அவற்றின் சக்தியை மேம்படுத்த முக்கியமாக இரும்பு பயன்படுகிறது. மேற்கூறிய வசனத்தில் இருந்து, அவர் இரும்பை ஒரு முனையில் இருந்து மறு முனை வரை வைத்து அதன் பின்னர் மென் காரையை (சிமெண்ட், மணல், நீர் ஆகியவற்றின் கலவை) அதன்மேல் ஊற்றி வலிமையான செறிவூட்டப்பட்ட கான்கிரீட் அமைப்பை ஏற்படுத்தியுள்ளார் என்று புரிகிறது.

உயரமான, தாடிவைத்த, வெள்ளை நிற மேலங்கியை உடுத்திய நபர் வருகை தந்தார் என பழங்கால மத்திய அமெரிக்க நாகரீகத்தில் இருந்து பெறப்பட்ட கல்வெட்டுகள் குறிப்பிடு கின்றன. மேலும் மிக குறுகிய கால கட்டத்தில் ஓரிறை கொள்கை பரவியது. கலை மற்றும் அறிவியலில் ஒரு பேரெழுச்சி ஏற்பட்டது என அவை குறிப்பிடுகின்றன.

ஜேக்கப், ஜோசப், மோசஸ் மற்றும் ஹாரூன் போன்ற அதிகமான இறைத்தூதர்கள் (இறை வனின் சலாமத் அவர் மீது உண்டாகட்டும்) பழங் கால எகிப்து நாட்டிற்கு அனுப்பபட் டுள்ளனர்.

வெவ்வேறு காலங்களில், எகிப்தில் ஏற்பட்ட கலை மற்றும் அறிவியல் முன்னேற் றத்திற்கு அந்த இறைத் தூதர்களும் அவர்களை நம்பிக்கை கொண்டவர்களும் காரணமாக இருந்துள்ளனர்.



திருக்குரானையும், நபி வழியையும் பின் பற்றிய முஸ்லிம் அறிவியலாளர்கள் வானியல், கணிதவியல், வடிவியல், மருத்துவம் மற்றும் பிற அறிவியல் துறைகளிலும் முக்கியமான கண்டு பிடிப்புகளை கண்டுபிடித்துள்ளனர்.

இக்கண்டுபிடிப்புகள் அறிவியலிலும், சமூக வாழ்க்கையிலும் குறிப்பிட தகுந்த முன்னேற்றத்தையும் மாற்றத்தையும் ஏற்படுத்தி யுள்ளன. சில முஸ்லிம் அறிவியலாளர்களும், அவர்கள் பங்காற்றிய துறைகளும்:

**1) அப்த் அல்-லத்திப் அல்-பக்தாதி :** உடற்கூறு அமைப்பியலை பற்றி ஆய்வு செய்த தாக அறியப்படுபவர். கீழ்தாடை மற்றும் மார்பு எலும்புகள் போன்ற மனித எலும்புகள் பற்றிய முந்திய தவறான புரிதல்களை சரி செய்தார். அவருடைய அல்-இபத அல் இதிபார் என்ற படைப்பு 1788 ஆம் ஆண்டு



இலத்தீன், ஜெர்மன் மற்றும் பிரெஞ்சு ஆகிய மொழிகளில் மொழிப் பெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது. இவருடைய மகளதுன் ஃபயல் ஹவஸ் என்ற நூலில் ஐந்து உணர்வு உறுப்புகளை பற்றி கூறப்பட்டுள்ளது.

**2) இப்னு சினா:** பலவிதமான நோய் களுக்கான சிகிட்சை முறைகளை வகுத்தவர். இவர் அரபியில் எழுதிய மிகவும் பிரசித்தி பெற்ற “கிதாப் அல்-கானுன் பி அத்-திப் என்ற நூல் 12-வது நூற்றாண்டில் இலத்தீனில் மொழி யாக்கம் செய்யப்பட்டது. 17-ஆம் நூற்றாண்டு வரை ஐரோப்பாவின் பல்கலை கழகங்களில் இப்புத்தகம் அடிப்படை பாடத் திட்டமாக போதிக்கப் பட்டு வந்துள்ளது.

இப்புத்தகத்தில் கூறப்பட்டுள்ள மருத் துவம் பற்றிய குறிப்புகள் இன்று வரை நடை முறையில் உள்ளன

**3) சகரியா கழ்வினி :** அரிஸ்டாடில் காலத் தில் சரி என்று கருதப்பட்டு வந்த மூளை மற்றும் இதயம் தொடர்பான கருத்துகளில் உள்ள தவறு களை கண்டுபிடித்து தகர்த்தெறிந்தவர் இந்த இரு உறுப்புகளை பற்றி இவர் தந்த தகவல்கள் இன்று நடைமுறையில் உள்ள கருத்துக்களோடு ஒத்துப் போகின்றன.

சகரியா கழ்வினி , ஹம்த் அல்லாஹ் முஸ்தவ்பி கழ்வினி (1281-1350)

மற்றும் இப்னு நப்ஸ் ஆகியோர் உடல் உறுப்புகளின் அமைப்பியலை கற்றுத் தேர்ந்தவர்கள். நவீன மருத்துவ அறிவியலின் அடிப்படை களை உருவாக்கி தந்தவர்கள்.

**4) அலி இப்னு இஸா:** கண் நோய் சம்பந்த மாக தஸ்கிரத் அல்-கஹ்ஹான் என்ற மூன்று தொகுப்புகளை எழுதியுள்ளார். முதல் தொகுப் பில், கண்கள் சம்பந்தப்பட்ட பயனுள்ள தகவல் கள் காணப்படுகின்றன. இலத்தீன் மற்றும் ஜெர்மன் மொழிகளில் இந்நூல் மொழிப் பெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது.

**5) அல்-புருனே :** கலிலியோ சொல்வதற்கு 600 ஆண்டுகளுக்கு முன்னரே பூமி சுழல்கிறது என்றும் நியூட்டன் சொல்வதற்கு 700 ஆண்டு களுக்கு முன்னரே பூமியின் விட்டத்தையும் கண்டுபிடித்தவர்.

**6) அலி-குஸ்ச்சு-** சந்திரன் குறித்த முதல் வரைபடங்களை தந்தவர். சந்திரனில் உள்ள ஒரு பகுதிக்கு இவர் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

**7) தாபித் இப்னு குர்ரா:** நியூட்டனுக்கு முன்னரே differential calculus வகை நுண் கணிதத்தை கண்டு பிடித்தவர்.

**8) அல்-பட்டானி:** கோணவியல் கணிதத்தை முதன் முதலாக கண்டுபிடித்தவர்.

**9) அபுல் வபா:** வெட்டுக்கோடு (secant) மற்றும் கோணத்தின் எதிர் நெடுக்கை (cosecant) என்ற வார்த்தைகளை முக்கோணவியலுக்கு தந்தவர்.

**10)அல் கவரிஸ்மி:** இயற்கணிதம் குறித்த

முதல் புத்தகத்தை எழுதியவர்.

**11)அல் மக்ரிபி:** பாஸ்கல் முக்கோணம் என்று அறியப்படுகிற வாய்ப்பாடுகளை பாஸ்கல் கூறுவதற்கு 600 ஆண்டுகளுக்கு முன்னேர கண்டுபிடித்தவர்.

**12)இப்னு ஹைதம்:** ஒளியியலுக்கு அடித்தள மிட்டவர். பெகன் மற்றும் கெப்ளர் ஆகியோர் இவருடைய படைப்புகளை பயன் படுத்தியுள்ளனர். டெலஸ்கோப் கண்டு பிடிப்பில் இவருடைய படைப்புகளையே கலிலியோ பயன்படுத்தியுள்ளார்.

**13)அல்-கிந்தி - ஐன்ஸ்டீன்-க்கு** முன்னர் அதாவது 1100 ஆண்டுகளுக்கு முன்னரே சார்பு டைமை தத்துவத்தை முன் மொழிந்தவர்.

**14)அக்ஸம்ஸத்தின:** பாஸ்கல் பிறப்பதற்கு 400 ஆண்டுகளுக்கு முன்னர் முன் வாழ்ந்தவர். நுண்ணுயிரிகளின் இருப்பை கண்டுபிடித்தவர்.

**15)அலிஇப்னு அப்பாஸ்:** புற்று நோய் அறுவை சிகிச்சைகளை முதலில் செய்து காட்டியவர்.

**16) இப்னு ஜஸ்ஸார்:** தொழு நோய்களுக் கான காரணங்களையும் அதன் சிகிச்சைகளை யும் விளக்கியவர்.

திருக்குர் ஆனையும், இறைத் தூதரின் வழியையும் பின்பற்றிய மேற்கூறிய முஸ்லிம் அறிவியலாளர்கள் தந்த கண்டுபிடிப்புகள் நவீன மருத்துவ அறிவியலுக்கான அடிப்படை களாக அமைத்தன.

இறைத்தூதரின் போதனைகளுக்கு கட்டு பட்டு, அவர்களின் அறிவுரைகளையும், ஊக்கத் தையும் பெற்றுக் கொண்டு, இவ்வறிவியலாளர் கள் தாம் கற்றுணர்ந்த அறிவை அடுத்த சந்ததிகளுக் கும் விட்டு சென்றுள்ளனர். மேலும், நேரிய மார்க்கத்தில் இருந்து வழிதவறி மூட நம்பிக்கை களை பின்பற்றிய ஒரு சில சமூகங்கள், இறைத் தூதரின் முயற்சியினால் நேரான மார்க்கத்தில் மறுபடியும் வந்துள்ளன.

இன்ஷா அல்லாஹ் தொடரும்


# ஹிஜாமா (நபி வழி சிகிச்சை)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் "நீங்கள் எவற்றால் சிகிச்சை பெறுகிறீர்களோ அவற்றிலெல்லாம் விட சிறந்தது இரத்தம் உறிஞ்சி (ஹிஜாமா) எடுப்பதாகும்" என்று கூறினாரர்கள். ( முஸ்லிம் )

## அல்-கர்ளாவி அக்குபஞ்சர் & ஹிஜாமா கிளீனிக்

இடம் : பாரத் நகர் 4வது வீதி, சாரமேடு, கரும்புக்கடை, கோவை -8.

கிளை : L.M.R. வீதி, சின்ன பள்ளிவாசல் எதிரில், கோட்டைமேடு, உக்கடம், கோவை -1.

**உடல் மற்றும் மனம் சம்மந்தமான அனைத்துப் பிரச்சனைகளுக்கும் ஹிஜாமா செய்யப்படும்.**

**பெண்களுக்கு பெண் தெரஃபிஸ்ட் மூலம் சிகிச்சை அளிக்கப்படும்.**

தொடர்புக்கு : எஸ்.உமர் M.DAT., : 96 55 811 811, 97 89 473 999



# கறுப்புப் பணம் மோடி வகை.?

கருப்பு பணம் ஒழிப்பு நடவடிக்கையை பாராட்டியே ஆக வேண்டும். நம்முள் புதைந்து கிடந்த எண்ணத்தை - அதாவது தவறு செய்தவர்கள், தவறு செய்பவர்கள் தண்டிக்கப் பட வேண்டும் என்ற நம் அனைவரது எண்ணத் திலும் இது உற்சாகத்தை தந்துவிட்டது. எனவே அரசு எடுக்கும் முயற்சிகளுக்கும் அதன் நடவடிக் கைகளுக்கும் நாம் ஒத்துழைக்க வேண்டும், சிரமங்களை பொறுத்துக்கொள்ள வேண்டும் என பலர் வரிந்து கட்டிக்கொண்டு முழக்கமிடு கின்றனர்.

நம்மில் பலர் நற்பண்புகளை உடையவர் களாக இருப்பதனால் தான் நம்மால் இதற்கான ஒரு பெரும் ஆதரவையும், தவறு செய்பவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்ற ஒரு பெரும் மனசாட்சியையும் உருவாக்க முடிந்தது. கருப்பு பணம் ஒழிப்பு எண்ணம் வரவேற்கப்பட வேண்டியதாக இருந்தாலும், அதற்காக அரசு மேற்கொண்ட நடவடிக்கையை வரவேற்க முடிய வில்லை. இதற்கான திட்டம் பத்து மாதத்திற்கு முன்னரே தொடங்கிவிட்டதாம்!. இது ஒரு புறம் இருக்கட்டும். விசயத்துக்கு வருவோம்.

தவறு செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற நமது எண்ணத்தில், உணர்வில் பாரபட்சம் இருக்காது என்றே நம்புகிறோம். வரி ஏய்ப்பு செய்பவர்களையே சட்டத்தின் பிடியில் கொண்டுவர வேண்டும் என்று விரும்புகிற நாம் கொலைபாதக செயல்கள் செய்தவர்களை, அதை முன்னின்று நடத்தியவர்களை விட்டு விடுவோமா என்ன?




**நேரடியான கேள்விக்கு வந்து விடுவோம்.**

குஜராத்தில் ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் இனப்படுகொலை செய்யப்பட்டனர். கர்ப்பிணி யின் வயிற்றை கிழித்து சிசுவை திரிசூலத்தில் குத்தி எடுத்து பெட்ரோல் ஊற்றி கொலை செய்து அதில் ஆனந்தம் அடைந்தன இந்துத்துவ கும்பல்கள். பெண்கள் கூட்டு பாலியல் வன்புணர் வுக்கு உள்ளாக்கப்பட்டனர். கூட்டம் கூட்டமாக முஸ்லிம்கள் உயிரோடு எரிக்கப்பட்டனர்.

இர்பான் ஜாஃப்ரி (முன்னாள் காங்கிரஸ் அமைச்சர்), முஸ்லிம்களுக்குப் பாதுகாப்பு அளிக்குமாறும், தங்களது உயிர்களைக் காக்கு மாறும் மோடியையும், உயர் போலீஸ் அதிகாரி களையும் திரும்பத்திரும்ப, பலமுறை தொலை பேசி மூலம் தொடர்பு கொண்டு கெஞ்சினார். கொலைகாரர்களிடம் கெஞ்சி என்ன பயன்?

புத்தரின் வாரிசான!!! மோடியின் ஆசிர்வாதத்தை கொண்டே அங்கே இனப்படு

கொலைகள் அரங்கேறுகிறது என்பதை அவர் அறியவில்லை போலும். மோடிக்கு எதிரான சாட்சியங்களை புறந்தள்ளி விட்டே அங்கே விசாரணை கள் அமைந்தன.



அடுத்து, காவல்துறையில் உள்ள ஆட்களை ஏவி விட்டு போலிஎன்கவுண்டர்செய்வது, கடத்தல், மிரட்டி பணம் பறித் தல் போன்ற குற்ற செயல்களில் தொடர்புடை யவர் தான் இப்பொழுது நமது நாட்டை ஆளும் பாரதீய ஜனதா கட்சியின் தேசிய தலைவர் அமித்ஷா

இவர்களை போன்றோர் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் உங்கள் உணர்வும் மனசாட்சியும் எங்கே செத்து போனது? என்று தெரியவில்லை. ஆனால் இவர்களை போன் றோரை பிரதமராகவும், தலைவராகவும் ஆக்கிய பெருமை இந்திய மக்களையே சாரும்.

இங்கே ஒரு கருத்து வலிமையாக பதிவு செய்யப்படுகின்றது. அநீதிகளையும், குற்றங்களை யும் புரியும் ஒருவன் தனது அதிகாரத்தை பயன் படுத்தி தப்பித்து விடலாம். பின் மக்களுக்கு சில நல்லது செய்தாலே போதும் அல்லது அப்படி நல்லது செய்வதாக ஏமாற்றினாலே போதும். அவன் மகானாகவும், தலைவனாகவும் இந்தியா வில் போற்றப்படுவான் என்பதே அந்த கருத்து.

சம நீதி சமூகத்திலும் நிலை நாட்டப்பட வில்லை அல்லது அப்படி நிலைபெற வேண்டும் என்ற எண்ணம் இவர்களை போன்றோரை அதிகாரத்தில் அமர்த்தியவர்களின் உள்ளத் திலும் இல்லை. எவன் வீட்டில் எழவு விழுந்தால் எனக் கென்ன? என்பதுபோல் இருக்கின்றது.

இப்படி அநீதிகளின் அடிப்படையில் ஒரு சமூகம் கட்டமைக்கப்படு கின்றது. அதற்கான வழிமுறையை இன்றைய தலைமுறைக்கும் வருங்கால தலைமுறைக்கும் பாடம் பயிற்று வித்து விட்டு, அதற்கு உதாரணமாக இப்படிப் பட்ட தலைவர்களையும் உருவாக்கி விட்டு செல்கின்றோம்.

நிச்சயமாக இந்த வழிமுறை, பாரபட்சமான நீதி இப்பொழுது இதில் பாதிக்காதவர்களை ஒரு நாளில் காவு கொள்ளும். புரிந்து கொள்ளுங்கள் உங்களது ஆன்மாக்களும், ஆத்மாக்களும் ஒரு புறம் அழுகிக் கொண்டிருக்கின்றன.

பேய் அரசாண்டால் பிணம் தின்னும் சாத்திரங்கள் என்பதற்கு இன்று நடக்கும் நிகழ்வு களே அதாவது பணம் செல்லாது என்று அறிவித்த பின் மக்கள் படும் சிரமங்களும் உயிரிழப்பு களுமே எடுத்துக்காட்டு



# மதுரை குண்டு வெடிப்பு வழக்குகளும் காவல்துறையும்

## உண்மை அறியும் குழு அறிக்கை

### அ. மார்க்க அறிக்கை

"தீவிரவாதிகளின் ஹிட் லிஸ்டில்" மதுரை முக்கிய இடத்தில் இருப்பதாக உளவுத்துறை எச்சரித்துக்கொண்டே இருக்கிறது" என்பது அக்டோபர் 22, 2013 அன்றைய தமிழ் நாளிதழ் ஒன்றில் வெளி வந்துள்ள செய்தி. இப்படித் தமிழகத்திலேயே மதுரை முஸ்லிம் தீவிரவாதத்தின் மையமாக உள்ளது என்றொரு கருத்தைப் பொதுப்புத்தியில் பதிப்பதில் தமிழகக் காவல்துறை வெற்றி பெற்றுள்ளது. 2011 லிருந்து இன்று (2016) வரை மதுரை மாவட்டம் மற்றும் சுற்று வட்டாரங்களில் மட்டும் காவல்துறையினர் 17 வெடிகுண்டு வழக்குகளைப் பதிவு செய்துள்ளனர்.

அனைத்தும் டாஸ்மாக் கடைகள் பேருந்துகள், பொதுக்கூட்ட மேடைகள் முதலான மக்கள் கூடும் இடங்களில் வைக்கப்பட்டு வெடித்த மட்டும் வெடிக்காத குண்டுகள். இவற்றில் இரண்டு பார்சல் குண்டுகள். இப்படியான வெடி குண்டுத் தாக்குதல்கள் உள்ளிட்ட பயங்கரவாத நடவடிக்கைகளால் அப்பாவிப் பொது மக்கள் பெரிய அளவில் கொல்லப்படுவது என்பது உலகையே அச்சத்தில் உறைய வைத்துள்ள நேரத்தில் இப்படி மதுரை மாவட்டப் போலீஸ் 12 வெடிகுண்டு வழக்குகளைப் புலன் விசாரித்து வருவது என்பது இங்கு பொது மக்கள் மத்தியில் பெரும் பயத்தை ஏற்படுத்தியுள்ளது .

இன்னொரு பக்கம் இந்த தீவிரவாதத் தாக்குதல் முயற்சிகள் ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரால் செய்யப்படுவதாக மேற்கொள்ளப்படும் பிரச்சாரங்கள் பெரிய அளவில் அந்தச் சமூகத்தையே "சந்தேகத்திற்குரிய சமூகமாகவும்", "பயங்கரவாதச் சமூகமாகவும்" பார்க்கக் கூடிய நிலைக்கும் இட்டுச் செல்கிறது. எப்படி இருந்த போதிலும் இப்படியான பயங்கரவாதத் தாக்குதல்கள் கவனமாகப் புலன் விசாரித்துக் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

ஆனால் பிரச்சினை என்னவெனில் ஆண்டுகள் ஐந்தாகியும் பெரிய அளவில் யாரும் இதில் கைது செய்யப்படவில்லை. கைது செய்யப்பட்ட சுமார் பத்து பேர்களில் ஒன்பது பேர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். மற்றவரும் இரண்டொரு நாளில் பிணையில் வெளி வருவார் எனச் சொல்லப்படுகிறது. தவிரவும் பயங்கரமான குண்டு வெடிப்பு நிகழ்ச்சிகளாக இவை காவல் துறையாலும் ஊடகங்களாலும் பிரமாதப் படுத்தப்பட்டாலும் இந்தப் 17 பயங்கரவாத தாக்குதல் முயற்சிகளிலும் யாரும் ஒரு சிறிய அளவில் கூட பாதிக்கப்படவில்லை ; சொத்திழப்புகளும் இல்லை.

இந்த வழக்கு விசாரணைகளில் குறைந்த பட் சம் மூன்று புலன் விசாரணை அமைப்புகள் ஈடுபடுத்தப்பட்ட போதும் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதில் ஏன் இந்த மெத்த னம்? குற்றவாளிகளைக்கண்டு பிடிக்கும் தறுவாயில் இதை முறியடிக்கும் நோக்கில் ஆய்வாளர் மாடசாமி எனும் புலன் விசாரணை அதிகாரி இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் என ஒரு குற்றச்சாட்டை மதுரை மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளர் வைத்துள்ள ஒரு செய்தியும் பத்திரிகைகளில் பெரிதாய் வந்தது. வேறொரு புலன் விசாரணைக் குழுவில் உள்ள ஒரு தலைமைக் காவலர் தீவிரவாதி

ஒருவருடன் தொடர்பில் உள்ளார் எனவும் அவரிடமிருந்து பணம் பெற்றுள்ளார் எனவும் ஆதாரத்துடன் அதே கண்காணிப் பாளர் முன் வைத்துள்ள இன்னொரு புகார் பற்றிய செய்தியும் பத்திரிகைகளில் வந்தது.இது குறித்தெல்லாம் காவல்துறை என்ன நடவடிக்கை எடுத்துள்ளது எனத் தெரியவில்லை. ஆனால் வெடிகுண்டுகள் ‘வைக்கப்படுவதும்’, முஸ்லிம்கள் வழக்கு களில் சிக்க வைக்கப்படுவதும் தொடர் கின்றன. இது தொடர்பான வழக்கு விவரங் களை எல்லாம் தொகுத்துப் பார்க்கும் போது எங்களுக்கு இன்னொரு அதிர்ச்சி காத்திருந்தது. பல்வேறு புலன் விசாரணை முகமைகள் வைக்கும் குற்றச்சாட்டுகளுக்கும்

இடையில் மிகப் பெரிய வேறுபாடுகள் உள்ளன. ஒரே குற்றம் குறித்து இரண்டு முகமைகளும் வெவ்வேறு நபர்கள் மீது குற்றச்சாட்டுகளை வைக்கின்றன .இதெல் லாம் காவல் துறையினருக்கு இடையே யார் விரைவாகப் பதவி உயர்வு பெறுவது, பணப் பரிசுகளைப் பெறுவது என நடக்கும் போட்டி ‘என நாம் அமைதியாக இருந்து விட முடியாது. ஏனெனில் இந்தப் போட்டிகளுக்கிடையில் பல அப்பாவிகள் பாதிக்கப்படுகின்றனர்.

ஒரு சமூகத்தையே பயங்கரவாதிகளாக மற்றவர்கள் பார்க்கும் நிலை ஏற்படுகிறது. இந்த நிலை சமூக ஒற்றுமைக்கும் அடிப் படை நீதி வழங்கு நெறி முறைகளுக்கும் எதிரானது என்கிற வகையில் இது குறித்து ஆய்வு செய்து உண்மைகளையும், ஐயங் களையும் பொதுவெளியில் வைப்பதற்கென அ. மார்க்ஸ் தலைமையி லான உண்மை அறியும் குழு (CHRO) அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளளது. அதனை இங்கே தருகின்றோம். வெடிகுண்டு வழக்குகளின் சுருக்கமான விவரங்கள்

*1) 30.04.11* - மதுரை மாட்டுத்தாவணி அருகில் ‘டாஸ்மாக்’ பாரில் குண்டு வெடிப்பு (கேதூர் காவல் நிலையக் குற்ற எண் *788/2011*). பள்ளிவாசலுக்கு அருகில் டாஸ்மாக் இருந்ததால் குண்டு வைக்கப் பட்டது எனச் சொல்லப்பட்டது.

*2) 30.09.2011* - கேதூர் பஸ் டெப்போவில் நின்றிருந்த அரசு பேருந்தில் வெடிக்காத குண்டு ஒன்று காணப்பட்டது. (கேதூர் கா.நி.கு.எண். *1302/2011*).

*3) 07.12.2011* - திருவாதவூர் அருகே சித்தரடிகள் குளத்தில் குண்டு வெடிப்பு (பேலூர் கா.நி.கு.எண்.*757/2011*) பாபர் மசூதி தகர்ப்புக்கு எதிர்வினை எனக் காரணம் சொல்லப்பட்டது.

*4) 01.05.2012* - மதுரை அண்ணா நகர் ஸ்ரீராமர் கோவில் கம்பி கேட் அருகில் சைக்கிள் குண்டு வெடிப்பு (அண்ணா நகர் கா.நி.க.எண். *404/2012*) பா.ஜ.க.வின் தாமரை சங்கமம் நிகழ்ச்சிக்கு அத்வானி வருகையை எதிர்த்து எனச் சொல்லப்பட்டது.)

*5) 03.08.2012* - உமர் ஃபாரூக் என்பவர் கடைக்கு ஒரு பார்சல் குண்டு வந்தது. (தெற்கு வாசல் கா.நி.கு.எண்.*736/2012*) சௌ ராஷ்டிர மாநாட்டுக்கு மோடி வருவதாகக் கேள்விப்பட்டு வைத்ததாகச் சொல்லப் பட்டது). இருவர் கைது.

*6) 29.09.2012* - தேனி டாஸ்மாக் கடை அருகில் ஒரு வெடிகுண்டு (தேனி கா.நி.கு. எண்.*692/2012*) - இமாம்அலி நினைவாக எனச் சொல்லப்பட்டது.

*7) 01.11.2012* - திருப்பரங்குன்றம் தர்ஹா அருகில் ஒரு வெடிக்காத குண்டு (திருப்பரங் குன்றம் கா.நி.கு.எண்.*362/2012*)

*8) 20.11.2013* - வழக்குறைஞர் அக்பர் அலி காரில் குண்டு வெடிப்பு (விளக்குத்துண் கா.நி.கு.எண்.*120/2014*)

*9) 09.02.2014* - தினமணி தியேட்டர் அரு கில் அ.தி.மு.க. சாதனை விளக்கப்பொதுக் கூட்ட மேடை பின்புறம்குண்டு வெடிப்பு (தெப்பக்குளம் கா.நி.கு.எண். *88/2014*).

*10) 05.02.2014* - ராஜலிங்கம் வெங்காயக் கடை அருகில் ஒரு குண்டு கண்டெடுப்பு (விளக்குத்தூண் கா.நி.கு.எண்.*120/2014*)

*11) 14.03.2014* - நெல்பேட்டை ஜமாத் செயலர் காஜா மைதீன் பைக்கில் குண்டு வெடிப்பு (விளக்குத்தூண் கா.நி.கு.எண். *196/2014*)

12) 02.01.2015 - சிவகங்கை டாஸ்மார்க் பாரில் குண்டு வெடிப்பு (சிவகங்கை கா.நி. கு. எண்.02/2016) - பள்ளிவாசலுக்கு அருகில் டாஸ்மாக் இருந்ததால் எனச் சொல்லப் பட்டது.



13) 01.03.2015 - வில்லாபுரம் சம்சுதீன் என்பவரது வீட்டில் கத்தி மற்றும் குண்டு செய் வதற்குத் தேவை யான பொருட்கள் சோதனையில் கண்டெடுக்கப் பட்டது. (அவனியாபுரம் கா.நி.கு.எண். 262/2015 u/s 25 (1) (a) of arms act r/w 201, 153 (A), 187, 120 (B), 341 IPC)

14) 21.03.2015 - சிவகங்கை மாவட்டம் பிரான்மலையில் குண்டு வைக்க மூலப் பொருட்கள் வைத்திருந்ததாக Q பிரிவு போலீஸ் வழக்கு குற்ற எண் 01/2015, 11 பேர் குற்றம் சாட்டப்பட்டனர். மூன்று வழக்குறைஞர்கள் உட்பட இமாம் அலியைக் காட்டிக் கொடுத்தவர்களைப் பழி வாங்க உருவாக்கப்பட்ட 'அல் முத்தஹீம் ஃபோர்ஸ்' அமைப்பினர் செய்தது எனக் குற்றச்சாட்டு.

15) 29.09.2015 - ஆரப்பாளையம் பஸ் நிறுத்தத்தில் இரண்டு பஸ்களில் குண்டு வெடிப்பு ( கரிமேடு கா.நி.கு.எண். 859 / 2015). ஏழு பேர் குற்றம் சாட்டப்பட்டு ஐவர் பிணையில் உள்ளனர் இருவர் தலைமறைவு.

16) நெல்பேட்டை கல்பாலம் குண்டு வெடிப்பு-( விளக்குத்தூண் கா.நி.கு.எண். 769 / 2016)

17) நெல்பேட்டை அம்சவல்லி ஓட்டல் அருகில் ஃபரீத்கான் என்பவர் பீடா கடையில் பார்சல் குண்டு (விளக்குத்தூண் கா.நி.கு.எண். 900/2016)

மேலே உள்ள குண்டு வெடிப்பு வழக்குகள் எதிலும் யாரும் பாதிக்கப்பட வில்லை. இந்த 'வெடி குண்டுகள்' யாவும் பட்டாசு வகைக் குண்டுகள் எனவும் LOW INTENSITY EXPLOSION எனவும் தான் காவல் துறையினரால் குறிப்பிடப்படுகிறது. இந்த வழக்குகள் பலவற்றின் குற்றப் புலனாய்வு அதிகாரியான ஏ.டி.எஸ்.பி. மாரிராஜன் எங்களிடம் இக்குண்டுகள் பற்றிச் சொன்னது.

"இதுவெல்லாம் சும்மா சின்ன பட்டாசு வெடிங்கதான். உங்க பக்கத்தில் இதை வச்சு வெடிச்சா பக்கத்துல இருக்கிற பேப்பர், துணி இதுதான் லேசா நெருப்பு பத்தி அணையும். வேற எந்த ஆபத்தும் இருக்காது. இந்தக் குண்டுகள் ஒவ்வொண்ணுக்கும் ஆகிற மொத்தத் தயாரிப்புச் செலவே ஒரு 150 ரூபாய் தான் இருக்கும்."

பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்றில் மதுரை காவல்துறை ஆணையரும் இவை சாதாரண பட்டாசுக் குண்டுகள் தான் என ஏற்றுக் கொண்டார். இந்த 17 வழக்குகளில் இதுவரை திருவாதவூர் பஸ்குண்டு கண்டெடுக்கப்பட்ட வழக்கு, அ.தி.மு.க. பிரச்சாரக் கூட்ட மேடைக்குப் பின் குண்டு வெடித்த வழக்கு, கவுன்சிலார் ராஜலிங்கம் அலுவலகம் அருகில் குண்டு கண்டெடுக்கப்பட்ட வழக்கு. பிரான் மலை குண்டு தயாரிப்பு

மூலப்பொருட்கள் வைக்கப்பட்டிருந்தது என்கிற வழக்கு ஆகிய நான்கில் மட்டுமே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2011 முதல் 2014 வரையுள்ள அனைத்து வழக்குகள் மற்றும் கல்பாலம் வழக்கு ஆகியவற்றை சி.பி.சி.ஐ.டி. காவல் பிரிவின் சிறப்புப் புலனாய்வுத் துறை (SIT) விசாரித்து வருகிறது.

## ஆரப்பாளையம் பஸ் குண்டு வழக்கு,

சமீபத்திய நெல்பேட்டை பீடா கடை பார்சல் குண்டு வழக்கு ஆகிய இரண்டும் நகர காவல் துறையால் புலன் விசாரிக்கப் படுகிறது. இந்தப் 17 வழக்குகளில் முதல் வழக்கு பதிவாகி ஐந்தாண்டுகள் ஓடிவிட்டன. நம் தமிழகக் காவல்துறை தன்னை ஸ்காட்லன்ட்யார்டுடன் ஒப்பிட்டுக்கொள்ளத் தயங்குவதில்லை. சுவாதி வழக்கில் ஒரு வார காலத்தில் குற்றவாளியைக் கண்டு பிடித்த பெருமையும் அதற்குண்டு ஆனால். இந்த ஐந்து ஆண்டுகளில் இந்த 17 வழக்குகளில்நான்கில்மட்டுந்தான்அதனால்குற்றப் பத்திரிகை தாக்கல் செய்ய முடிந்துள்ளது. நாட்டையே அச்சுறுத்தும் பயங்கரவாதம் தொடர்பான இவ்வழக்குகளில் இத்தனை மெத்தனம் ஏன்?

இத்தனை வழக்குகளிலும் சுமார் 22 பேர்கள்தான் இதுவரை குற்றம் சாட்டப்பட்டு, அதிலும் 10 பேர்கள் தான் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிலும் 9 பேர் இன்று பிணையில் வெளி வந்துள்ளனர். தமிழகக் காவல் துறையினர் வெடிகுண்டு வழக்குகளிலும் கூட இத்தனை இரக்கத்துடன் செயல்படக் கூடியவர்களாக இருக்கிறார்களே என வியப்பதா? இல்லை இவ்வளவு தான் இவர்களின் திறமை என நகைப்பதா? இல்லை இதற்கெல்லாம் பின் ஏதோ காரணங்கள் உள்ளன என சந்தேகப்படுவதா? இதற்கு விடை காண இந்த வழக்குகள் விசாரிக்கப்பட்ட முறைகளையும் அதனூடாக இன்று மேலெழுந்துள்ள சில பிரச்சினைகளையும் ஆராய வேண்டும்.

காவல்துறை மீது காவல்துறையே வைக்கும் குற்றச்சாட்டு வெடித்ததெல்லாம் பட்டாசுக் குண்டுகள் என்ற போதிலும் பெரும்பாலான முதல் தகவல் அறிக்கைகளில் குற்றவாளிகள் யார் எனப் பெயரிடப்படாத போதும் இந்த வழக்கு விசாரணைகளில் மதுரை முஸ்லிம்கள், குறிப்பாக நெல்பேட்டை வாழ் ஏழை எளிய முஸ்லிம் இளைஞர்கள் மிகக் கொடுமையாகத் துன்புறுத்தப்பட்டு விசாரிக்கப்பட்டனர்.

ஏ.டி. எஸ்.பி. மயில்வாகனன் மற்றும் ஆய்வாளர் மாடசாமி ஆகியோர் தலைமையில் உருவாக்கப்பட்ட தனிப்படை (SPEICAL TEAM) சுமார் 500 முஸ்லிம் இளைஞர்களைக் கடும் சித்திரவதைகளுக்கு உட்படுத்தி விசாரித்தது. நெல்பேட்டை வாழ் பெண்களும் கூட பெண் போலீஸ் அதிகாரிகள் முன்னிலை இல்லாமல் விசாரிக்கப்பட்டனர்.

சுமார் ஓராண்டுக்கு முன் நெல்பேட்டை மக்கள் மத்தியில் இது தொடர்பாக விசாரித்த எங்கள் குழுவின் முன் இப்படிப் பலரும் வந்து தாங்கள் அப்பாவிகள் எனவும், தங்களைத் துன்புறுத்துவதாகவும் பதிவு செய்தனர். இவர்களின் விசாரணை முறை எத்தனை அநீதியானது. இவர்களது விசாரணையில் எப்படி முஸ்லிம் வெறுப்பு அதிதமாக உள்ளது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டைச் சொல்லலாம். 2011 ல் இந்த மயில்வாகனன் - மாடசாமி ‘டீம்’ பரமக்குடி பா.ஜ.க. பிரமுகர் முருகன் என்பவர் கொலையைப் புலனாய்வு செய்தது.

பரமக்குடி - இடைக்காட்டூர் கிராமத்தைச் சேர்ந்த மதார் சிக்கந்தர் என்பவர் திருச்சி சிறையில் காவலராக இருந்தார். இவரையும் இந்தப் பகுதியைச் சேர்ந்த இத்ரிஸ் என்பவரையும் இந்தக் கொலை வழக்கில் தொடர்புபடுத்த மாடசாமி குழு முடிவெடுத்துக் களத்தில் இறங்கியது. இவர்கள் மதாரையும் இத்ரிசையும் கடத்திச் சென்று திருச்சியில் ஒரு விடுதியில் தங்க வைத்துச் சித்திரவதை செய்தனர். இதே நேரத்தில் இந்த ஊரைச் சேர்ந்த சுந்தர வேலு, பாண்டி என்னும் இரு இளைஞர்கள் வேறொரு வழக்கில் பிணை கிடைத்து திருச்சி நீதி மன்றத்தில் கையெழுத்திட ஆணையிடப்பட்டனர்.

கையெழுத்திட வந்த இந்த இளைஞர்கள் இருவரையும் மாடசாமி டீம் கடத்திச் சென்று அவர்களை என்கவுன்டர் செய்வதாக மிரட்டியது. இறுதியில் அந்த மிரட்டலுக்கான காரணத்தை வெளிப்படுத்தினர். அவர்கள் இருவரும் கையெழுத்துப் போடுவதற்காக திருச்சியில் இருந்த போது அவர்கள் ஊர்க்காரரரான மதாரின் அறையில் தங்கி இருந்ததாகவும் அப்போது அவர்களுக்குத் தெரிந்த இத்ரிஸ் அங்கு வந்ததாகவும் மதாரும் இத்ரிசும் சேர்ந்து முருகனைக் கொல்லச் சதித் திட்டம் செய்ததைத் தாங்கள் கண்டதாகவும் சாட்சி சொல்ல அவர்களை மாடசாமி டீம் மிரட்டியது.

திருச்சியில் உள்ள குரு லாட்ஜில் தங்க வைத்து அவர்கள் இவ்வாறு மிரட்டப்பட்டனர். அடுத்தநாள் நீதிமன்றத்தில் கையெழுத்திட அவர்கள் வந்த போதும் கூடவே வந்த மாடசாமி டீம் வாசலில் காத்திருந்தது.

அப்போது இந்த இளைஞர்கள் இருவரும் ஓடி அங்கு இருந்த வழக்கறிஞர் கென்னடியிடம் நடந்தவற்றைச் சொன்னார்கள். அவர் உடனடியாக மாஜிஸ்ட்ரேட் முன் (JUDICAL MAGISTRATE COURT NO.2, THIRUCHIRAPPALLI) அழைத்துச் சென்று அவர்களின் வாக்குமூலத்தைப் பதிவு செய்தார் நீதிபதி ராஜாராம் அவர்கள் மாடசாமி மற்றும் அவரது குழுவில் இருந்த 16 காவலர்கள் மீதும் கொலை செய்வதாக மிரட்டியது, பொய் சாட்சிகளை உருவாக்கியது. மனித உரிமைகளை மீறியது ஆகிய அடிப்படைகளில் விசாரணை நடத்த வேண்டும் என CBCID காவல் பிரிவுக்கு ஆணையிட்டார் (ஆக 1, 2011)

இந்த ஒரு சான்று போதும் மயில்வாகனன் - மாடசாமி குழு எவ்வளவு முஸ்லிம் வெறுப்புடன் விசாரணைகளை மேற்கொண்டனர் என்பதற்கு இந்தக் குழு மீது CBCID விசாரணை தொடங்கிய பின்னும் தொடர்ந்து அந்தக் குழு மதுரை வெடிகுண்டு வழக்கு விசாரணைகளைச் செய்ய அனுமதிக்கப்பட்டது.

தனது அதிகாரிகள் விசாரணை என்கிற பெயரில் மேற்கொள்ளும் கொடும் மனித உரிமை மீறல்களைக் காவல்துறை தண்டித்ததாக வரலாறே இல்லை என்பதற்கு இது மேலும் ஒரு சாட்சி. இந்தப் பின்னணியில் தான் அப்போது மதுரை மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளராக இருந்த வி.பாலகிருஷ்ணன், ஐ.பி.எஸ் காவல்துறை தலைவருக்கு (DGP) எழுதிய இரு கடிதங்கள் ஊடகங்களின் கவனத்தை ஈர்த்தன.

23.08.2013 அன்று எழுதப்பட்ட முதல் கடிதத்தில் மயில்வாகனன் - மாடசாமி டீம் தனது நேரடி வழிகாட்டலில் மிகச்சிறப்பாக மதுரை வெடிகுண்டு வழக்குகளைப் புலனாய்வு செய்து வருகிறது எனவும், ஆனால் குற்றவாளிகளைச் சரியாக அடையாளம் கண்டு கைது செய்ய இருந்த நிலையில் அவர் திருநெல்வேலிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் எனவும் இந்த இடமாற்ற ஆணையை ரத்து செய்ய வேண்டும் எனவும் அவர் கோரி இருந்தார்.

29.03.2013 அன்று டி.ஜி.பி.க்கு பாலகிருஷ்ணன் எழுதிய இரண்டாவது கடிதத்தில் மதுரை வெடிகுண்டு வழக்குகளை விசாரித்து வந்த பல்வேறு புலனாய்வு மற்றும் உளவுப்பிரிவுகளான மதுரை SID, மதுரை SIT, மதுரை நகர SIC ஆகியவற்றுக்கும் முஸ்லிம் அடிப்படைவாதிகளாகவும் காவல் துறையின் தகவலாளிகளாகவும் (informants) செயல்படும் இஸ்மத், வகாப் ஆகியோருக்கும் இடையே நிலவும் ஆபத்து நிறைந்த இரகசிய உறவுகள் குறித்த தன் கவலைகளைப் பகிர்ந்திருந்தார். அப்படியான ஒரு ‘தீவிரவாதியிடம்’ இருந்து 25,000 ரூபாயை உளவுப் பிரிவைச் சேர்ந்த விஜய பெருமாள் எனும் தலைமைக் காவலர் பெற்றுக் கொண்டதை ஆதாரத்துடன் வெளிப்படுத்தி அவர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி இருந்தார்.

அதோடு காவல்துறையைச் சேர்ந்த விஜய பெருமாளும் இந்த முஸ்லிம் ‘தீவிரவாதிகளும்’ சேர்ந்து பரமக்குடியில் சிலரை மிரட்டிப்பணம் பெற்றுள்ளதாகவும் குற்றம் சாட்டிய பாலகிருஷ்ணன் விஜய பெருமாளின் நடவடிக்கைகள் மதுரை

மற்றும் அருகிலுள்ள பகுதிகளில் வெடி குண்டுகள் வைப்பதற்கும் பயன்பட்டுள்ளது என்கிறார்.

இன்று வரை விஜயபெருமாள் மீது நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகவும் தெரியவில்லை மாடசாமியின் இடமாற்ற மும் ரத்தாக வில்லை. கண்காணிப்பாளர் பாலகிருஷ்ணன் முறையீடு செய்தும் தன் இடமாற்றம் ரத்தாகாததைக் கண்ட மாட சாமி நேரடியாக ஊடகங்களிடம் பேசத் தொடங்கினார். 'தி இந்து' நாளிதழிலும் (அக். 23, 26, 2013), ஜுனியர் விகடனிலும் (நவ. 03,2013) அவரது கருத்துக்கள் வெளி யாயின. அவற்றில் மதுரைக் குண்டு வெடிப்பு களுக்குக் காரணமான மூன்று பேர்களைத் தான் கண்டுபிடித்து விட்டதாகவும் ஆனால் காவல் துறையின் CBCID பிரிவின் SPEICALINVE STIGATION DIVISION ஐச் சேர்ந்த கார்த்திகேயன் மற்றும் மாரிராஜன் என்கிற இரு ADSP கள் தடுத்து வருவதாக வும் அவர் குற்றஞ் சாட்டினார். காவல் துறைப் பிரிவுகளுக்கிடையே இருந்த இந்த முரண்கள் அம்பலத்துக்கு வந்ததில் ஒன்று தெளிவாகியது.

இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவங்களில் காவல்துறைக்கும் தொடர்புண்டு அல்லது யார் அதைச் செய்திருப்பார் என்பது அவர் களுக்குத் தெரியும் என்பது தான் அது.

உண்மைகள் வெளி வந்தால் காவல் துறைக்கே பிரச்சினைகள் வரும் என்பதா லேயே ஐந்து ஆண்டுகள் ஆகியும் இந்தப் புலன் விசாரணைகள் இறுதியை எட்ட வில்லை. இந்த அறிக்கைகளை எல்லாம் சுட்டிக்காட்டி SÅI கட்சியின் மாவட்ட வழக் கறிஞர் அணிச் செயலாளர் அப்துல் காதர் ஒரு ரிட் மனுவை மதுரை உயர்நீதிமன்றக் கிளையில் தாக்கல் செய்தார் (W.P - MD-NO.4711 OF 2014). தமிழ்நாடு காவல்துறை விசாரித்தால் உண்மைகள் வெளிவராது எனவும் மதுரை வெடிகுண்டு விசாரணை முழுமையையும் CBI க்கு மாற்று மாறும் அவர் அந்த மனுவில் கோரியுள்ளார்.

மதுரை காவல்துறை மேற்கொண்டுள்ள சமாளிப்பு நடவடிக்கைகளும் அதன் மூலம் வெளிப்படும் முரண்களும் இந்த வெடி குண்டு வழக்குகள் அனைத்தும் ஒட்டு மொத்தமாக CBI விசாரணைக்கு மாற்றப் படும் வாய்ப்புள்ளது என்பதை அறிந்த மதுரை காவல் துறையினர் விரைந்து இந்த வழக்கு விசாரணைகளில் சில மாற்றங் களைச் செய்தனர். இதன் முதற் கட்டமாக ஒரு புதிய ஆணையை வெளியிட்டனர் (மாநகர் சட்டம் ஒழுங்கு காவல் துணை ஆணையர் செயல்முறை ஆணை (C.NO.66 / CAMP / DC / L&O / M.C.2015 DATED 25.01.2015), இதன்படி மதுரை மாநகர் எல்லைக்குட் பட்ட வெடிகுண்டு வழக்கு விசாரணை களை விசாரிக்க அண்ணா நகர் காவல் நிலைய ஆய்வாளர் சிவக்குமார் என்பவர் சிறப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

இவர் கடந்த "மார்ச் 01, 2015 அன்று தனக்குக் கிடைத்த இரகசிய தகவல்" ஒன்றின் அடிப்படையில் அண்ணா நகர் இராமர் கோவில் சைக்கிள் குண்டு வெடிப்பு வழக்கில் (குற்ற எண் 404/2012) தொடர் புடைய சம்சுதீன் என்பவரைக் கைது செய்துள்ளதாக அறிவித்தார். அந்த சம்சுதீன் மீது அவனியாபுரம் காவல் நிலையத்தில் புதிய வழக்கொன்றைப் (262/2015) பதிவு செய்து, அவரது "ஒப்புதல் வாக்குமூலம்" நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. அதன்படி மதுரையைச் சுற்றி நடந்த குண்டு வெடிப்புகள் பலவற்றை இந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கண்டுள்ள நபர்கள் தான் செய்தனர் எனக் கூறப்பட்டது. இத்தகைய ஒப்புதல் வாக்குமூலங்கள் பலவும் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு வாக்குமூலம் அளிப்பவரிடம் படித்துக் கூடக் காட்டா மல் கையொப்பம் பெறப்படுபவை என்பது குறிப்பிடத்தக்கது.

மதுரை காவல்துறை இந்த வழக்குகளின் விசாரணையில் ஏற்படுத்தும் இடியாப்பச் சிக்கல் இத்தோடு முடியவில்லை. சிவகுமா ரின் இந்த விசாரணை நடந்து கொண்டி ருக்கும் போதே இந்த குண்டு வெடிப்புகள் குறித்து மார்ச் 21, 2015 அன்று மதுரை Q பிரிவு குற்றப் புலனாய்வுத்துறை இன்னொரு வழக்கைப் பதிவு செய்தது.

இந்தப் புதிய வழக்கின் முதல் தகவல் அறிக்கையில் நாம் தொடக்கத்தில் குறிப்பிட்ட 2011 முதல் 2015 வரையிலான அனைத்து வெடிகுண்டு வழக்குகளையும் கொண்டு வந்தனர். இந்த வழக்குகள் அனைத்திலும் 1908 ம் ஆண்டு **EXPLOSIVE SUBSTANCES ACT** பிரிவுகள், பிரிவுகள் 3, 4, 5 மற்றும் 120 **(B) and 34 of IPC** ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றங்களை சுமத்தப்பட்டன. இதில் 11 பேர்கள் பெயர் குறிப்பிட்டும் மற்றும் சிலர் எனவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். இந்த வழக்குகள் அனைத்திற்கும் ஏற்கனவே அந்தந்தக் காவல் நிலையங்களில் தனித் தனியே வழக்குகள் பதியப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பழைய முதல் தகவல் அறிக்கைகளுக்கும் இன்றைய அறிக்கைக்கும் இடையில் பல முரண்கள் உள்ளன. இந்த முரண்கள் அவை அனைத்தும் அப்பட்டமாக ஜோடிக்கப்பட்ட பொய் வழக்குகள் என்பதைக்காட்டுகின்றன. எமது வழக்கறிஞர் குழு சுட்டிக் காட்டியுள்ள

## அப்படியான முரண்களில் சில இங்கே

1) 2011 மாட்டுத் தாவணி டாஸ்மாக் குண்டுவெடிப்பு வழக்கு. ஆய்வாளர் சிவக்குமார் தலைமையிலான விசாரணையில் குண்டு வைத்த உமர் ஃபாரூக் எனப்பதிவாகியுள்ளது. இன்றைய Q பிரிவு முன் வைக்கும் வாக்குமூலத்தின் படி அதைச் செய்தது ஹாரூன் எனச் சொல்லப்படுகிறது.

2) 2011 கேபுதூர் அரசு டிப்போ பேருந்து குண்டு வழக்கு, பழைய வாக்கு மூலப்படி குண்டு வைத்தது இஸ்மத் Q பிரிவு விசாரணையின் படி இது ஹாரூன்.

3) 2012 இராமர் கோவில் சைக்கிள் குண்டு வழக்கு சிவகுமார் விசாரணையில் இதைச் செய்தது பிலால் மாலிக், தௌபீக் ஆகியோர், ஹாரூன் Q பிரிவு விசாரணையில் தவ்பீக் பெயர் மட்டும் உள்ளது.

4) 2013 நவம்பர் சுங்கம் பள்ளிவாசல் அக்பர் அலிகார் குண்டு வழக்கு. சிவகுமார் விசாரணையின் படி இதைச் செய்தது ஹாருனும் அசாருதீனும் Q பிரிவு விசாரணையில் இது மைதீன் பீர் ஆக மாறுகிறது.

5) 2014 சுங்கம் பள்ளிவாசல் காஜா மைதீனின் இரு சக்கர வாகனத்தில் குண்டு வெடித்த வழக்கு சிவகுமார் விசாரணையின் படி அது உமர் ஃபாரூக் Q பிரிவு விசாரணையின் படி அது மைதீன் பீர்.

6) 2012 ஆகஸ்டில் உமர் ஃபாரூக் கடைக்கு வந்த பார்சல் குண்டு வழக்கு. சம்பவம் நடந்த உடன் பதியப்பட்ட தெற்கு வாசல் காவல் நிலைய மு.த.அ.யின் அடிப்படையில் 96 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு குற்றவாளி அசாருதீன்தான் என அவர் கைது செய்யப்பட்டார். ஆனால் இன்றைய Q பிரிவு விசாரணையின் படி பார்சல் குண்டைக் கொண்டு வந்தது தவ்பீக். விசாரணையில் இப்படி ஏற்படுத்திய அதிரடித் திருத்தங்கள் இத்தோடு முடிய வில்லை.

அடுத்து மேலும் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தினார்கள். திடீரென இந்த வழக்குகள் **C.B.C.I.D.** யின் **S.I.D** வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. **C.B.C.I.D** யின் **ADSP** மாரிராஜன் கடந்த 24.03.2015 அன்று இதை மறு வழக்காக மீள்பிரிவு **(Re-Register)** செய்தார். அதன்பின் இந்த வழக்குகளின் விசாரணை அதிகாரிகளாக சீனிவாசன், முருகவேல், மணிவண்ணன், சரவணன் ஆகியோர் நியமிக்கப்பட்டாலும் நடைமுறையில் இந்த வழக்குகள் அனைத்தையும் இப்போது மாரிராஜனே விசாரித்து வருகிறார். நாங்கள் சந்தித்த அனைவரும் இதை உறுதி செய்தனர்.

இந்தப் புதிய திருப்பங்களின் ஊடாக இவர்கள் உருவாக்கிய ஒரு புதிய வழக்கு அதிர்ச்சியை அளிக்கக் கூடியது. மார்ச் 21, 2015 அன்று மேலூரில் அப்போது கூரியர் ஏஜன்சி ஒன்றை வைத்திருந்த அப்பாஸ் மைதீன் (43) என்பவரை Q பிரிவு போலீசார் பெரும்படையுடன் வந்து இழுத்துச்சென்று ஒரு நாள் முழுவதும் அவரைக் கடுமையாக அச்சுறுத்தி இறுதியில் பிரான் மலைக்குக் கொண்டு சென்றனர். அங்கிருந்த ஏராளமான காவல்துறையினர் முன் அவரை நிறுத்தி, அடித்து, அங்கு வைக்கப்பட்டிருந்த ஒரு வாளியைக் கை நீட்டிக் காட்டச்

சொல்லி புகைப்படம் எடுத்துக் கொண்ட னர்.கீழே காத்திருந்த பத்திரிகையாளர்களுக் கும் அந்த வாளி குண்டுக்குக் காரணமான வர் அப்பாஸ் மைதீன் தான் எனச் சொல்லப் பட்டது. பின் அவரிடம் ஏற்கனவே தயாரிக் கப்பட்ட ஒரு வாக்குமூலத்தில் கையொப் பமும் பெறப்பட்டது.

பின் மீண்டும் மார்ச் 31, 2015 அன்று அவரை ADSP மாரிராஜன் 'கஸ்டடி' எடுத்து இன்னொரு வாக்குமூலத்தில் கையொப்பம் வாங்கினார். ஒரே நபர், ஒரே வழக்கு குறித் துத் "தந்துள்ள" இரு வாக்கு மூலங்களிலும் பல வேறுபாடுகள் உள்ளன. Q பிரிவு முன் வைத்துள்ள வாக்குமூலத்தில், "2011 ம் ஆண்டு ஹாரூன் மூலம் ஒரு வெடிகுண்டு வைத்தோம் - அது வெடித்தது" என அப்பாஸ் மைதீன் கூறுவதாக உள்ளது.

பத்து நாட்களுக்குப் பின் ADSP மாரிராஜன் பதிவு செய்துள்ள வாக்குமூ லத்தில்,"பேக்கடைசெய்யதுவும்,ஹாருனும் வெடிகுண்டை மதுக்கடை முன் வைத்து வெடிக்கச் செய்வது எனத் தீர்மானம் செய் யப்பட்டது. உமர் ஃபாரூக் வெடிகுண்டு செய்து தருவதாகக் கூறினார். அப்போது செல்வகனி, தலைவர் சீனி, வக்கீல் பயாஸ், வக்கீல் சௌகத் அலி, ஆட்டோ யாசின் ஆகியோர் தங்களிடம் இருந்த பணம் 5000-த்தை வெடி மருந்துப் பொருள் வாங்கு வதற்கு உமர் ஃபாரூக்கிடம் கொடுத்தனர். இரண்டு மூன்று நாட்கள் கழித்து மீண்டும் நாங்கள் செருப்பு கடை செய்யது கடைக்கு வந்தோம். அப்போது உமர் ஃபாரூக் கையில் ஒரு பேக் கொண்டு வந்திருந்தார். அதிலிருந்து பேட்டரி, வெடிமருந்து மற்றும் டைமருடன் கூடிய ஒரு டப்பாவை வெளியில் எடுத்தார். பேக் கடை செய்யது விடமும் ஹாருனிடமும் அதை எப்படி வெடிக்கச் செய்வது என்று சொல்லிக் கொடுத்தார்.பின்னர்வெடிகுண்டைஎடுத்து சென்று மதுக்கடை பார் முன்பு வைக்கச் சொல்லி பேக் கடை செய்யதுவிடமும் ஹாருனிடமும் சொல்லிவிட்டு நாங்கள் அங்கிருந்து கிளம்பி விட்டோம். அன்று இரவு மாட்டுத்தாவணி எதிரே உள்ள மதுக்கடையில் வெடிகுண்டு வெடித்தது" என விரிவாக உள்ளது.

நாங்கள் நெல்பேட்டையில் சந்தித்த பலரும் "உன்னை 13 வழக்குகளிலும் சிக்க வைத்து விடுகிறேன்" என மாரிராஜன் உள்ளிட்ட காவல்துறையினர் மிரட்டி வருவதாகக் கூறினர்.

யாரை எல்லாம் காவல்துறை குறி வைத்துள்ளதோ அவர்களை எல்லாம் இப்படிக் காவல் துறையாலேயே தயாரிக் கப்பட்ட இந்த அப்பாஸ் மைதீனின் வாக்கு மூலத்திற்குள் கொண்டு வந்துள்ளனர். நாங்கள் சந்தித்த வர்கள் சொன்னவை முகமது முபாரக் எனப்படும் உமர் ஃபாரூக் (35), புது ராமநாதபுரம் - "தற்போது 13 வழக்குகளில் என்னைச் சேர்த்துள்ளதாக ஆய்வாளர் சீனிவாசன் சொன்னார்.

இப்படி பொய் வழக்கு போடுறீங்களே, நீங்க நல்லா இருப்பீங்களா. என் பொண் டாட்டி பிள்ளைங்க மாதிரி உங்க பொண் டாட்டி புள்ளைங்க கஷ்டப்பட மாட்டாங் களான்னு கேட்டேன். 'என்ன சபிச்சிரா தப்பா. நான் என்ன பண்றது. எனக்கு எல் லாம் தெரியும் என்ன செய்யிறது Q பிராஞ்ச் ஏற்கனவே உன்னை இந்த வழக்குகளை சேர்த்துருக்கதால் ஒண் ணுமே பண்ண முடியல. நீ 13 வழக்குலயும் AB (முன் ஜாமீன்) வாங்கிடு" என்றார். நான்

இமாம் அலிக்கு அடைக்கலம் கொடுத் தது. அப்படி இப்படின்னு 2004 முதல் 2007 வரை மூணரை வருஷம் ஜெயில்ல இருந் தேன். ஹைகோர்ட்ல எல்லா வழக்கிலயும் விடுதலை ஆனேன்.

இப்ப மின் வியாபாரமும் ரியல் எஸ்டேட்டும் பண்றேன். விஜய பெருமாள் என்கிற ஏட்டு என்னிடம் வந்து ஒரு ரியல் எஸ்டேட் டீல்ல அவருக்கு வேண்டிய ஒரு மூணாவது நபருக்குச் சலுகை பண்ணச் சொன்னார். என்னால் முடியல. இப்ப என்னைப் பழி வாங்குறாங்க. இமாம் அலி வழக்கின்போது நான் தலைமறைவா இருந் தப்போ போலீஸ் தொல்லை தாங்காம எங்க அப்பா மீரான் கனி மனித உரிமை செயல்பாட்டாளரான ஹென்றி டிபேனி

டம் உதவி கேட்டதுக்காக வங்கிக் கொள்ளை வழக்கு ஒண்ணுல அவரையும் என் அக்கா மாப்பிள்ளையையும் பொய் வழக்கு போட்டு உள்ள தள்ளினாங்க. அதிலேயும் அவங்களை நீதிமன்றம் விடுதலை பண்ணிச்சு.

பாண்டு அலி என்கிற முகமது அலி (39), த.பெ. முகமது சுல்தான் நெல்பேட்டை "என்னையும் 13 வழக்குகள் ல சேர்த்திருக் காங்க. அந்த வழக்குகளுக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்ல. இந்த வழக்குகள் எதுலயும் நான் இதுவரை கைது செய்யப் படல. உமர் ஃபாரூக் என்னோட மைத்துனர் இமாம் அலி தொடர்பான வழக்குல 10 வருஷம் ஜெயில்ல இருந்துருக்கேன்.

அதுக்குப் பிறகு நான் எந்த தீவிர நடவடிக்கையிலயும் இல்ல. ADSP மாரி ராஜன் என்கிட்ட நல்ல பேசுவாரு. தேனி வெடிகுண்டு வெடிப்புக்கு முதல் நாள் நெல் பேட்டை பக்கம் வந்தாரு. நான் தேசிய லீக் கட்சியில இருந்த செயல்படுறேன். அவங்க 2012 செப் 29 அன்னிக்கு கம்பத்தில் இமாம் அலி நினைவு நாள்னு அறிவிச்சிருந்தாங்க. அதுக்குப் போகலியான்னு மாரிராஜன் என்னைக் கேட்டாரு. 'அவசியம் போப்பா கட்சியில் பொறுப்புல இருக்கிறவங்க நிகழ்ச்சிகள் புறக்கணிக்கக் கூடாதுல்ல' என்றார். அதுல ஏதோ சூது இருக்குன்னு எனக்குத் தெரிஞ்சு போச்சு. அதே மாதிரி அன்கிக்கு தேனியில குண்டு வெடிச்சுது"..

வழக்குறைஞர் சவுக்கத் அலி (36), த.பெ. அப்துல் அஜீஸ், நெல்பேட்டை "நான் ஹைகோர்ட்ல வழக்கறிஞரா இருக்கேன். என்னையும் 13 வழக்கில் சேர்த்திருக்காங்க. ஒரு வழக்கிலேயே medaccused மற்ற வழக்கு கள்ல **confession** ல கொண்டு வந்திருக் காங்க. நான் இதுக்கு முன்னாடி எந்த வழக் குலையும் சம்பந்தப்பட்டதோ விசாரிக்கப் பட்டதோ இல்லை. உமர் ஃபாரூக்கிற்கு நான் வழக்குறைஞர் அவரோட ரியல் எஸ்டேட் பார்ட்னர். அதனால என்னைப் பழி வாங்குறாங்க."

ஜரீனா பேகம் க.பெ. பீர் முகம்மது, நெல்பேட்டை (ராமர் கோவில் குண்டு வழக்கில் இரண்டு வாரங்களுக்கு முன் கைதாகிச் சிறையில் உள்ள அபூபக்கர் சித்திக்கின் அம்மா). "என் மகன் எந்த வம்பு தும்புக்கும் போக மாட்டான். அரசியலுக்கும் அவனுக் கும் சம்பந்தமில்ல. அவன் ஒரு 'செல்போன் கடை வச்சிருக்கான். அதுல ஏதாவது திருட்டு போன பிரச்சினையில ரெண்டொரு தடவை கூப்பிட்டு விசாரிச்சுருக்காங்க. மத்தபடி இந்த குண்டு வழக்குகள் எதுலையும் அவனை விசாரிச்சது இல்ல. பெருநாள் முடிஞ்சு டூர் போய்ட்டு வந்தான். இப்டி அவனைப் புடிச்சுட்டுப்போயி ராமர் கோவில் வழக்குல சேர்த்துட்டாங்க...."

ஜரீனா பேகம் அழுதுகொண்டே இதைச் சொன்னபோது அங்கிருந்தவர்கள் அதோடு இன்னொரு சம்பவத்தைச் சொன்னார்கள். ஆய்வாளர் சீனிவாசன் தலைமையில் ஒரு குழு வந்து சித்திக்கைக் கைது செய்தபோது அவரது கடையில் வேலை செய்யும் சையது முகமது அதை வீடியோ எடுத்துள்ளார். உடனே அவர் செல்போனை சீனிவாசன் டீம் பிடுங்கிச் சென்றுள்ளது.

அதைத் திரும்பப் பெறக் காவல் நிலையம் சென்றபோது சையது முகமதுவை ஒருநாள் முழுக்க ஸ்டேஷனிலேயே காக்க வைத்து விசாரித்துள்ளனர். விசாரணை முடிந்து வந்த சையது மிகவும் மனம் சோர்ந்து காணப்பட்டுப் பின் தற்கொலை செய்து கொண்டார். காவல்துறையின் மிரட்டல் காரணமாகவே அவர் தற்கொலை செய்து கொண்டதாக அப்பகுதி மக்கள் கூறினர். சையதுவின் உடல் அடக்கம் செய்யப்படும் போது தேவை இல்லாமல் ஆய்வாளர் சீனிவாசன் அந்த இடத்தில் ரொம்ப நேரம் சுற்றிச் சுற்றி வந்தார் எனவும் கூறுகின்றனர்.

வழக்கறிஞர் முகமது அலி ஜின்னா த.பெ. கே.உமர் பாய் நெல்பேட்டை, "என்னையும் 13 வழக்குகளில் சேர்த்துள்ள னர். எனது 17 வயதில் போலீசை அடித்ததாக என் மீது ஒரு வழக்கு. அதன்பின் 2005 வரை ஏழு வழக்குகள் போட்டார்கள். அதில் ஆறு வழக்குகளில் நான் விடுதலை செய்யப்பட்டுள்ளேன்.

மற்ற ஒரு வழக்கும் ரத்தாகி விட்டது.

தமிழ்வீரன் எனும் ஒரு இந்து முன்னணித் தலைவரைக் கொலை செய்ய முயன்றேன் என ஒரு வழக்குத் தொடர்ந்து குண்டர் சட்டமும் போட்டார்கள். அந்தத் தமிழ் வீரனே அது பொய் வழக்கு என நீதிமன்றத்தில் வாதாடி எனக்கு விடுதலை வாங்கித் தந்தார். இந்த ஆண்டு பிப்ரவரி 25 ந் தேதி ஒரு 30 போலீஸ்காரர்கள் வந்து என் வீட்டில் 'சர்ச் வாரன்ட்' காட்டித் தேடுதல் வேட்டை நடத்தினார்கள். என்னை மரியாதைக் குறைவாகப் பேசவும் செய்தார்கள். கடைசியில் ஒன்றும் கிடைக்கவில்லை என எழுதிக் கொடுத்துவிட்டுப் போனார்கள்.

இமாம் அலியைக் காட்டிக் கொடுத்தவர்களைப் பழி வாங்குவதற்காக அமைக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்படும்

'அல் முத்தகீம் ஃபோர்ஸ்' என்கிற தீவிர அமைப்பிற்கு நான் தலைவன் என அபாண்டமாகப்பழிசுமத்துகிறார்கள். அது அப்பட்டமான பொய். நான் கவுரவமாக வக்கீல் தொழில் நடத்துகிறேன். நான் எந்த வழக்கில் வக்கீலாக ஆஜர் ஆனேனோ அதே வழக்கிலும் என்னைக் குற்றவாளியாகச் சேர்த்தார்கள். குற்றம் சுமத்தப்பட்டவர்களோடு ஒரு வழக்கறிஞர் என்கிற முறையில் பழகுவதே தவறா? நான் மன நிம்மதி இன்றித் தவிக்கிறேன்...."

அம்சவல்லி ஓட்டல் அருகில் பீடா கடை வைத்துள்ள ஃபரீத்கான் அவரது சகோதரர் மன்சூர் கான் இருவரையும் நாங்கள் சந்தித்த போது அவர்கள், தங்கள் கடையில் சில நாட்களுக்கு முன் யாரோ ஒருவர் இரவு 11 மணி வாக்கில் வந்து 10 இனிப்பு பீடா ஆர்டர் செய்து விட்டு, 'தயாரித்து வையுங்கள் வருகிறேன்' எனச் சொல்லி ஒரு பையையும் கொடுத்து விட்டுச் சென்றதாகவும் பின் வரவே இல்லை என்பதால் அடுத்த நாள் அந்தப் பையைத் திறந்து பார்த்த போது அது வெடிகுண்டு போலத் தெரிந்ததால் காவல்துறைக்குச் சொன்னதாகவும், அவர்கள் வந்து சோதனையிட்டு அதை எடுத்துச் சென்றதாகவும் கூறினர்.

ஆட்டோ யாசின் த.பெ. காதர் மைதீன். நெல்பேட்டை மீன்மார்கெட் அருகில், "எந்த வழக்குன்னு தெரியல. ஆனா வழக்கில் சேர்த்துருக்காங்களாம். வக்கீல் சொன்னாரு. இதுக்கு முன்னாடி எந்த வழக்கும் என்மீது கிடையாது. 2013 ல் மயில்வாகனன், மாடசாமி டீம் நிறைய நெல்பேட்டைப் பையன்கள் அழைச்சிட்டுப் போயி அடிச்சு சித்திரவதை பண்ணினாங்க. என்னையும் எந்தத் தப்பும் பண்ணாமலேயே ADSP ஆபீசில் வச்சு அடிச்சாங்க. நான் வெளியே வந்து அமானுல்லா என்கிற வழக்குறைஞர் மூலமா இன்ஸ்பெக்டர் மாடசாமி மேல ஒரு பிரைவேட் கம்ப்ளெயின்ட் கொடுத்தேன். அந்த கோவத்துல இப்ப என் மேல பொய் வழக்கு போடுறாங்க. எனக்கு இந்த ஆட்டோ தொழில் தவிர வேற வருமானம் இல்ல."

பிரியாணி மைதீன் த.பெ. பக்ருதீன், நெல்பேட்டை "கல்யாண ஆர்டர்க்கு பிரியாணி செஞ்சு கொடுப்பது என் தொழில். 2002 ல் இமாம் அலி வழக்கில் என்னை சேர்த்திருந்தாங்க. அதுல எனக்கு 2 வருஷம் தண்டனை அதுக்கு அப்புறம் எட்டு வழக்கு போட்டாங்க. ஒரு கொலை கேஸ் உட்பட எல்லாத்துலையும் நான் விடுதலை ஆயிட்டேன். இப்ப பிரியாணி தொழில் தான் செய்றேன். அன்னிக்கு இன்ஸ்பெக்டர் சீனிவாசன் வந்து என்னை வழக்கில் சேர்த்துள்ளதா சொன்னாரு. எந்த வழக்குன்னு தெரியல.

அப்பாஸ் மைதீன் (43) த.பெ. ஷேக் தாவூது. மேலூர். "நான் ரொம்ப சாதாரண குடும்பம். எனக்கு இரண்டு மனைவி. முதல் மனைவிக்குக் குழந்தை இல்ல. இரண்டாவது மனைவிக்கு நாலு பிள்ளைகள். ஒரு கூரியர் ஏஜன்சி எடுத்திருந்தேன். எனக்கு எந்த அரசியல் தொடர்பும் கிடையாது.

மார்ச் 21, 2015 அன்னிக்கு யாரோ வந்து நூறு தேங்கா கூரியர் அனுப்பனும்னு கூப்பிட்டாங்க. கீழே இறங்கிப் போனா ஒரு வேன்ல ஏற்றிக் கொண்டு போய்ட்டாங்க. இரவு வரை என்னை என்னென்னவோ கேட்டாங்க. யார் யாரோ வந்து ஏதேதோ விசாரிச்சாங்க. ஒண்ணும் எனக்குப் புரியல



பயந்து போனேன். சாயந்திரம் என்னை பிரான் மலைக்கு அழைச்சிட்டுப் போனாங்க. அங்கே நிறைய பத்திரிகை யாளருங்க இருந்தாங்க. மேலே கொண்டு போனாங்க. ஏராளமாக அங்கே போலீஸ் அதிகாரிங்க இருந்தாங்க. அங்கே தூரத்தில ஒரு வாளியில என்னமோ இருந்துச்சு. அதைக்கையை நீட்டி காமிக்கச் சொன் னாங்க."ஏன்"ன்னேன்."என்னடா எதிர்த்தா பேசுறேன்னு அடிச்சாங்க. நான் கையை நீட்டினேன் போட்டோ பிடிச்சுட்டாங்க. அந்த வாளியில என்ன இருந்துச் சுன்னு கூட எனக்கு முழுசா தெரியாது. அப்ப அங்கே எங்க ஊரு முபாரக்கையும் கொண்டு வந்து அடிச்சு அதே மாதிரி கையை நீட்டச் சொல்லி போட்டோ எடுத்தாங்க.

சார், அவன் என்னை விட ரொம்ப அப்பாவி, என் சொந்தக்காரந்தான். ஆனாலும் அவன்கிட்ட நான் அதிகமாப் பேசுனது கூடக் கிடையாது. எங்க இரண்டு பேருக்கும் எந்த இயக்கத் தொடர்பும் கிடையாது. நானாவது தாடி வச்சிருக்கேன். தொழுகைக்குப் போவேன். இஸ்லாமிய ஒழுக்கங்களைக் கடை பிடிப்பேன். அவன் அதையும் செய்யுறது கிடையாது. அப்புறம் எங்களை தனித்தனியா கொண்டு போயி அடுத்த நாள் Q பிராஞ் போலீஸ் எதையோ கொண்டு வந்து என் கிட்ட கையெழுத்து வாங்கினாங்க. படிச்சு கூட காட்டல. பத்து நாளைக்கப்புறம் கஸ்டடியில் எடுத்து மாரி ராஜன் டீம் மறுபடியும் ஒரு வாக்குமூலத்தை அவங்களாகவே எழுதி கையெழுத்து வாங்கினாங்க சார். இது ரொம்ப அநியாயம் என் பழைய தொழில் போச்சு. இப்ப ஒரு செருப்புக் கடையில் வேலை செய்றேன். எனக்கு இது தாங்க முடியாத அனுபவம். என்னை ஏன் இதற்குத் தேர்ந் தெடுத்தாங்கன்னு என்னால புரிஞ்சுக்கவே முடியல. படுத்தா தூக்கம் வரமாட்டேங்குது சார்...."

அடுத்து அப்பாஸ் மைதீனுடன் இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ள முபாரக்கிடம் (வயது 24, த.பெ ஷேக் என்கிற மீரான் மைதீன், மேலூர்) பேசினோம். சின்னப்

பையன் என்பதும் மிகவும் பயந்து போயுள்ளான் என்பதும் குரலிலேயே தெரிந்தது. அப்பாஸ் சொன்ன அதே கதையை அவனும் திருப்பிச் சொன்னான். இந்தச் சின்ன வயதில் அந்தக் கொடூரமான அனுபவத்தை அவன் சந்தித்தபோது குணாளன் என்பவரது செருப்புக் கடையில் வேலை செய்து கொண்டு இருந்திருக்கிறான்.

ஆறு மாதம் கழித்து பிணையில் அவன் வெளியே வந்த போது யாரும் அவனுக்கு வேலை கொடுக்கத் தயாராக இல்லை. கடந்த ஆறு மாதமாக ஏதோ ஒரு வெல்டிங் பட்டறையில் வேலை செய்கிறான். தினம் 170 ரூ ஊதியமாம். அதை வைத்துத்தான் குடும்பம் நடக்கிறது. இன்னும் திருமணம் ஆகவில்லை. இதை எழுதும் போது ஏதோ ஒரு தகவலை உறுதி செய்ய போனில் தொடர்பு கொண்டோம். அவன் அம்மா பேசினார்கள். வேலைக்குப் போய்விட்டானாம்.

“ஐயா, நாங்க எல்லாம் ஏழைங்க அய்யா, எங்களுக்கு யாரும் ஆதரவு இல்லைங்க அய்யா. இது ரொம்ப அநியாயம் அய்யா. அவன் ரொம்பச் சின்னப் பையன் அய்யா. அவனுக்கு யாரும் இப்ப வேலை கூடக் குடுக்க மாட்டெங்குறாங்க அய்யா” என அந்த அம்மா புலம்பி அழுதார். அதிகாரிகள் சந்திப்பு சர்ச்சைக்குள்ளாகி இருக்கும் ADSP மாரிராஜனை அவரது அலுவலகத்தில் சந்தித்தோம். மிக்க பொறுமையாகவும் விரிவாகவும் அவர் எங்களுடன் பேசினார். இந்த வெடிகுண்டுகள் அனைத்தும் மிகச் சாதாரணமான பட்டாசுக் குண்டுகள் என அவர் சொல்லியதை வேறோர் இடத்தில் பதிவு செய்துள்ளோம். இந்த வெடிகுண்டு வழக்கு விசாரணையைப் பற்றி அவரிடம் கேட்ட போது, “நான் இப்ப அதிலேருந்து விலகிட்டேன். இந்த வழக்குகளை நாங்க விசாரிக்கக் கூடாதுன்னு ரிட் மனு ஒன்னு போட்டிருக்காங்க. அதனால நான் அந்த விசாரணையில இப்ப ஈடுபடுவதில்லை” என்றார்.

கைது செய்யப்படுகிறவர்கள் பலரும் அப்பாவிகள் எனக் கேள்விப்படுகிறோமே என நாங்கள் கேட்டபோது அவர் அதை மறுக்கவில்லை. “அப்பாவிகளும் இருக்கலாம் . முஸ்லிம்களுக்குள் பல உட்பிரிவுகள் இருக்கு. இவங்களுக்குள்ளேயே போட்டி பகைமைகள் இருக்கு. ஒருவர் மேல ஒருவர் புகார் கொடுத்துக்கிறாங்க. அதனால தான் இப்படிக் கைதுகள் நடக்குது. அப்புறம் இந்த முஸ்லீம்கள் கிட்ட இருக்கிற ஒரு கெட்ட பழக்கம் இவங்க எல்லாம் போலீசுடன் நெருக்கமா இருக்கிறதை ஒரு பெருமையா நினைக்கிறாங்க. அதனாலயும் சில பிரச்சினைகள் ஏற்படுது”

“ஆய்வாளர் மாடசாமி என்பவர் உங்கள் மீதெல்லாம் கொடுத்துள்ள புகார் விசாரிக்கப்பட்டதா, ஏட்டு விஜய பெருமாள் ஒரு தீவிரவாதியிடமிருந்து பணம் வாங்கியதாகக் குற்றச்சாட்டு உள்ளதே அதன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?” எனக்கேட்டோம். “மாடசாமியிடம் விளக்கம் கேட்டு இருக்காங்க.

அதுகுறித்து மேலதிகாரிங்களைத்தான் கேட்கணும் விஜயபெருமாளிடம் விளக்கம் கேட்டதுக்கு அவர் தனக்கு அந்த நபர் கொடுக்க வேண்டிய பணத்தைத் திருப்பிக் கொடுத்துள்ளார்னு பதில் சொல்லி இருக்கார்” என்றார்.

நாங்கள் புறப்படும்போது, “ஆண்டவன் செயலால் உண்மைக் குற்றவாளிகள் கண்டு பிடிக்கப்பட்டால் அப்பாவிகளை விடுதலை செய்வதில் தடையில்லை. என் மீதுள்ள ரிட் வழக்குகள் திரும்பப் பெறப்பட்டால் நானே இந்த வழக்குகளை விசாரித்து நல்லபடியாய் முடித்து வைப்பேன்” என்றார். அடுத்து நாங்கள் உளவுத் துறை உதவி ஆணையர் முத்துராமலிங்கம் அவர்களைச் சந்தித்தோம். “ஆரப்பாளையம் பஸ் குண்டு வழக்கு, பீடா கடை பார்சல் குண்டு வழக்கு இந்த இரண்டையும் தான் நகர காவல்துறை (CITY POILICE) விசாரிக்குது. மற்றதெல்லாம் Q பிராஞ், CBCID இவங்ககிட்ட கொடுத்தாச்சு. இந்த இரண்டையும் கூட அவங்க கிட்ட மாத்தலாம்னு இருக்கோம்.

மற்ற வழக்குகளைப் பற்றித் தெரியணும்னா அந்த வழக்குகளை இப்போ

விசாரிக்கிற ஆய்வாளர் சீனிவாசனைத்தான் நீங்க கேட்கணும் '' எனச்சொல்லி அவரது தொடர்பு எண்ணையும் எங்களுக்குத் தந் தார்.அடுத்துநாங்கள்நகரகாவல்ஆணையர் ஷைலேந்திர கமார் யாதவ் அவர்களைச் சந்தித்தோம். பொய் வழக்குகள் பற்றிய எங்களின் புகார்களைச் சொன்ன போது, "ஆரப்பாளையம் பஸ் குண்டு வழக்கைத் தான் நாங்க விசாரிக்கிறோம்.அது நேரடியா என் கண்காணிப்பில் விசாரிக்கப்படுது. அது பொய் வழக்கு இல்ல.

குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றத்தை ஒத்துக் கொண்டு தெளிவாக வாக்கு மூலம் கொடுத்திருக்காங்க. மற்ற வழக்குகள் பற்றிய உங்கள் சந்தேகங்களுக்கு நான் பதில் சொல்ல முடியாது" என முடித்துக் கொண்டார். பல்வேறு புலன் விசாரணை முகமைகளுக்கு இடையில் உள்ள போட்டி களால் அப்பாவிகள் பலர் பாதிக்கப்படுவது பற்றி நாங்கள் கேட்கத் துவங்கியபோது, "ஒரு குற்ற விசாரணை என்பது போலீசின் புலன் விசாரணையோடு முடிந்து விடுவ தில்லை. அதற்குப் பின் நீதிமன்றம் இருக் கிறது.குறுக்குவிசாரணைகள் இருக்கின்றன. வக்கீல்களின் வாதங்கள் இருக்கிறது. அவற்றின் மூலம் உண்மைகளைக்கொண்டு வரலாமே" என்றார்.

தற்போது இந்த வெடிகுண்டு வழக்கு களை விசாரித்து வரும் ஆய்வாளர் சீனி வாசன் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டபோதுதான் விசாரிக் கும் வழக்குகள் நீதிமன்றத்தில் உள்ளதாக வும். உயர் அதிகாரிகளைக் கேட்காமல் தான் ஏதும் பேச இயலாது எனவும் குறிப் பிட்டார். அப்பாவிகள் பலர் வழக்கில் சிக்க வைக்கப் பட்டுள்ளார்களே என்ற போது அதைப் பற்றியெல்லாம் விசாரணையில் உள்ளதால் ஒன்றும் சொல்வதற்கில்லை எனவும் எதற்கும் நேரில் வாருங்கள் எனவும் கூறினார்.

**எமது பார்வைகள்**

இந்திய அளவில் முஸ்லிம் இளைஞர் கள் கைது செய்யப்படுவதும் பிணையில் வெளிவர இயலாமல் அவர்கள் நீண்ட வருடங்கள் சிறைகளில் வாடி தங்களின் இளமையைத் தொலைத்த இறுதியில் குற்றமற்றவர்கள் என விடுதலை செய்யப் படுவதும் இன்று கண்டனத்துக்கு உள்ளாகி யுள்ளது. இப்படிப் பாதிக்கப்படுவது பெரும்பாலும் ஏன் முஸ்லிம்களாகவே உள்ளனர்? அவர்களைக் கைது செய்வது எளிது அவர்கள் மீது சுமத்தப்படும் குற்றங் களை நிறுவுவதற்கு அதிகம் சிரமப்பட வேண்டியதில்லை. அவர்கள் மீது குற்றத் தைச்சுமத்தினாலேபோதும்.அதுவே அந்தக் குற்றங்களின் நிரூபணங்களகளாகவும் ஆகி விடுகின்றன. இந்த நிலை மிகவும் கவலைக் குரிய ஒன்று.

இதன் பொருள் குண்டு வைப்பவர்கள். மீது கடுமை காட்டக் கூடாது என்பதல்ல. அதே நேரத்தில் எக்காரணம் கொண்டும் குற்றமற்ற அப்பாவிகள் தண்டிக்கப்படக் கூடாது என்பது தான். இப்படிச் சொல்வது வெறும் அற அடிப்படையான கூற்று மட்டு மல்ல. ஒரு ஜனநாயக அமைப்பு உறுதியாக நிலைப்பதற்கான அப்படியான நிபந்தனை இது. இந்த அமைப்பில் நமக்கு நீதி கிடைக் காது என்கிற எண்ணம் எந்தத் தரப்புக்கும் ஏற்பட்டு விடக் கூடாது. அப்படி உருவாகும் அவநம்பிக்கை (DESPAIR ) அமைப்பின் மீது மட்டுமல்ல. சக மனிதர்கள் மீதும் வெறப்பை விதைக்கிறது. இந்த வெறுப்பு அவரை வன்முறையாளராக்குகிறது.

"அவநம்பிக்கை ஒரு குடிமகனை வன்முறையாளனாக்குகிறது. வேட்டை யாடப்படுபவன் வேட்டை ஆடுபவனாக மாறுகிறான். அவநம்பிக்கை ஒரு கொடூர மான கொலை ஆயுதம்" (**DESPAIR CAN TURN YOU FROM CITIZEN TO PEÓETRATOR. FROM THE HUNTED TO THE HUNTER. DESPAIR CANBEA DEADLY WEAPON**) என ஷோமா சவுத்ரியை மேற்கோள் காட்டி நீதியரசர் மார்க்கண்டேய கட்ஜு சொல்வது கவனத் துக்குரியது,

பெருகிவரும் தீவிரவாதச் சூழலில் பயங் கரவாத நடவடிக்கைகளை எதிர்கொள் வதற்குப் பின் என்னதான் வழி? விஞ்ஞான பூர்வமான புலனாய்வு என்பதுதான் ஒரே

வழி. கிரிமினல் குற்றப் புலனாய்வு என்பது ஒரு அறிவியல் இன்று அது பெரிய அளவில் வளர்ச்சி பெற்றுள்ளது.

தீவிரமாக முயன்றால் உண்மைக் குற்ற வாளியைக் கண்டுபிடிப்பது கடினமல்ல. ஆனால் மதுரையில் என்ன நடக்கிறது? முறையான புலனாய்வு நடைபெறுவதே இல்லை. நாங்கள் விசாரித்தவர்களில் ஒருவர் சொன்னதுபோல பெரும்பாலான நேரங்களில் அவர்கள் செல்போனை நோண்டிக் கொண்டு உட்கார்ந்திருப்பது தான் அவர்களின் வேலையாக உள்ளது இது ஏன்?

## இந்தக் கேள்விக்குப் பதில் காண்பதற்கு முதற்படியாக நாம் இதுவரை கண்டவற்றைத் தொகுத்துக் கொள்வோம்?

1) இந்த17 குண்டுவெடிப்புகளும்பெரிய அளவில் அழிவை ஏற்படுத்தக் கூடியவை அல்ல. வெறும் பட்டாசு வெடிக் குண்டுகள்.

2) ஐந்து ஆண்டுகள் ஆகியும் வெறும் ஐந்து வழக்குகளில் தான் குற்றப் பத்தி ரிகைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

3) வழக்கு விசாரணையில் ஏகப்பட்ட குழப்பங்களும் முரண்களும் உள்ளன. ஒரு புலனாய்வு முகமை குற்றவாளியை நெருங் கும் நேரத்தில் இன்னொரு புலனாய்வு முகமை அதைத் தடுப்பதாக ஒருவருக்கொருவர் குற்றம் சுமத்திக் கொள்கிறார்கள்.

4) ADSP மாரிராஜன், ADSP கார்த்தி கேயன், தலைமைக் காவலர்கள், மாரியப் பன், விஜயபெருமாள் ஆகியோருக்கும் நகர காவல்துறைக்கும் இடையில் முரண் உள்ளது.

5) மேற் குறிப்பிட்ட இந்த நால்வர் குழு தீவிரவாதிகள் எனக் குற்றம் சாட்டப்பட்ட வர்கள் சிலருடன் நெருக்கமாக இருக்கிறார் கள். விஜய பெருமாள் எனும் தலைமைக் காவலர் அப்படி ஒருவரிடம் பணம் பெற்றுள் ளது இன்று உறுதியாகியுள்ளது.

6) இன்று வழக்கு பதியப்பட்டவர்களில் அப்பாவிகளும் உள்ளனர் என்பதை வெளிப் படையாக ஒரு அதிகாரி ஒத்துக் கொள் கிறார்.

7) வழக்கில் தொடர்புபடுத்தப்பட்ட முஸ்லிம்களைப் பொருத்த மட்டில்

அ) இமாம் அலி காலகட்ட வழக்கு களில் தண்டிக்கப்பட்டுப் பின் இப்போது குடும்ப வாடி நகை தொழில் என வாழ்ந்து கொண்டிருப்போர்

ஆ) ரியல் எஸ்டேட் தொடர்பான தொழில்களில் இருப்போர்

இ) காவல்துறையுடன் நேரடியாக முரண்பட்டோர்

ஈ) மேலே சொன்ன இவர்களுக்கு நெருக்கமாக இருக்கும் நண்பர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் ஆகியோர் தவிர

உ) முற்றிலும் எந்த அரசியலிலும் தொடர்பில்லாத அப்பாவிகள் என அவர்களை அடையாளம் காண முடிகிறது.

8) முன்னதாக வழக்குகளில் சம்பந்தப் பட்டுச் சிறை சென்றவர்கள் ஆயினும் அவர் களில் பலருக்கும் இப்போது அவர்கள் மீது சுமத்தப்பட்ட வழக்குகளில் தொடர்பு இல்லை . பெரும்பாலும் அவை பொய் வழக்குகள்.

9) அல்முத்தகீம் ஃபோர்ஸ் எனும் அமைப்பைக் காரணம் காட்டி உ. முகமது அலிஜின்னா போன்ற வழக்கறிஞர்கள் சிக்கலுக்குள்ளாக்கப்பட்ட போதிலும் அப்படி ஒரு அமைப்பு செயல்படுவதற்கான சான்றுகள் இல்லை. ஒருமுறை தமுமுக பிரமுகர் ஒருவரது லெட்டெர் பேடில் SIT தலைமைக் காவலர் மாரியப்பன் என்பவரே ‘அல்முத்தஹீம் ஃபோர்ஸ்’ குறித்து ஒரு புகார் டைப் செய்து வந்து தந்து அனுப்பச் சொன்னார் என நாங்கள் சந்தித்த முகமது அலி கூறினார்.

10) வழக்குகளில் தண்டிக்கப்பட்டு வெளிவந்து திருமணம், தொழில் என யாரும் திருந்தி வாழ காவல்துறை அனுமதிப்ப தில்லை. அவர்கள் தொடர்ந்து காவல் துறை யால் உளவு சொல்வதற்கும் பிற சட்ட விரோத காரியங்களுக்கு நிர்ப்பந்திக்கப்படு



கிறார்கள்.

11) ரியல் எஸ்டேட் முதலான சிக்கலான தொழிலில் ஈடுபடுவோர்கள் காவல்துறையினரால் எளிதில் பயன்படுத்தக் கூடியவர்களாகவும் பழிவாங்கப்படக் கூடியவர்களாகவும் ஆகிறார்கள்.

12) SIT முதலிய சிறப்புப் படைகளைத் தக்க வைத்துப் பலன் பெறுவதற்கும், பதவி உயர்வு, பணப்பரிசுகள் முதலியவற்றைப் பெறுவதற்கும் காவல் துறையில் சிலருக்குத் தொடர்ந்து இந்த மாதிரியான குண்டு வெடிப்புச் சம்பவங்கள் தேவைப்படுகின்றன.

13) இந்தத் "தீவிரவாதிகள்" என முத்திரை குத்தப்படுபவர்களில் ஒருவரான முகமது அலியுடன் அண்ணன் தம்பி உறவு முறையுடன் செல்போனில் ADSP மாரிராஜன் 'சாட்' செய்துள்ளதைக் கண்டோம். ஆனால் அதே அண்ணன் தம்பிகள் கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களுக்கு அழைத்து வரப்படும் போது ஏராளமான ஆயுதக் காவலர்கள் புடை சூழ அவர்களைக் கொண்டு வந்து மக்கள் மத்தியில் இவர்கள் பீதி ஊட்டுவதைக் காணலாம்.

14) வழக்கு விசாரணை தவறாகச் செய்யப்பட்டாலும் நீதிமன்றத்தில் நீதி கிடைக்குமே என கண்காணிப்பாளர் ஷைலேஷ் யாதவ் அவர்கள் சொன்ன பதில் மிகவும் பொறுப்பற்ற ஒன்று. வழக்கு என போடப்பட்டுச் சிக்க வைக்கப்பட்டால் இத்தகைய வழக்குகளில் பிணையில் வெளிவருவது எளிதல்ல. இதனால் அவர்களின் எதிர்காலமும் குடும்ப வாழ்க்கையும் பாதிக்கப்படுகிறது.அவர்களின் பிள்ளைகள் குற்றவாளிகளின் பிள்ளைகளாகக் காணப்படும் கொடுமையும் நிகழ்கிறது . எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு சமூகமே இத்தகைய வழக்குகள் மூலம் சந்தேகத்துக்கரிய ஒரு சமூகமாகக் கட்டமைக்கப்படுகிறது.

15) இந்தக் காவல்துறை அதிகாரிகள் ஒருவருக்கொருவர் குற்றம் சாட்டிக் கொண்டாலும், முரண்பட்டுக் கொண்டாலும் ஒரு அம்சத்தில் மிகவும் ஒற்றுமையாகச் செயல்படுகின்றனர். நெல்பேட்டை போன்ற பகுதிகளில் வசிக்கும் ஏழை எளிய முஸ்லிம் சமூகத்தை ஒட்டு மொத்தமாக ஒரு தீவிரவாதச் சமூகமாகக் கட்டமைப்பது என்கிற அம்சம்தான் அது .

காவல்துறையினர் மத்தியில் உயர்

மட்டத்திலிருந்து கீழ்மட்டம் வரை சமூக ஒற்றுமை மற்றும் மதச்சார்பின்மை குறித்த உணர்வூட்டும் பயிற்சித் திட்டம் (SENSITI ZATION PROGRAMME) ஒன்றை நிறைவேற்று வது அவசியமாகிறது. சுமார் பத்தாண்டு களுக்கு முன் புதலித் பிரச்சினைகளிலும், பெண்ணுரிமை சார்ந்த பிரச்சினைகளிலும் தமிழகத்தில் இத்தகைய பயிற்சி முகாம்கள் மாவட்டந்தோறும் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## எமது முடிவுகளும் கோரிக்கைகளும்

1) இந்த வெடிகுண்டு வழக்குகள் 17லும் இங்குள்ள பல்வேறு விசாரணை முகமைகளாலும் குற்றஞ்சாட்டப்பட் டுள்ள பெரும்பான்மை யோருக்கு இந்தக் குற்றங்களில் தொடர்பு இல்லை.

2) இமாம் அலி காலத்திலிருந்து மதுரை முஸ்லிம் தீவிரவாதத்தின் மையமாக உள்ளது என தமிழகக் காவல்துறை மக்கள் மத்தியில் ஒரு பீதியை உருவாக்கிப் பரப்பும் நோக்கில் செயல்பட்டு வருகிறது. போலீஸ் பக்ருதீன் போன்றவர்கள் கைது செய்யப்பட்ட பின்னும் இன்னும் அங்கு ஆபத்து உள்ளது என ஒரு புனைவை உருவாக்குவது ஒரு பக்கம். இன்னொரு பக்கம் இதுவரை மயில்வாகனன் - மாடசாமி டீம் இப்பகுதி இளைஞர்களைச் செய்த கடும் சித்திரவதைகள் எல்லாம் நியாயமானவைதான் என்கிற

எண்ணத்தை ஏற்படுத்துவது ஆகியன இந்தப்பொய் வழக்குகளின் நோக்கங்களாக உள்ளன. இதன் மூலம் ஒரு சமூகப் பிரிவின் மீது மக்கள் மத்தியில் வெறுப்பும் கோபமும் ஏற்படுவது பற்றியும், இது சமூக ஒற்றுமையைக் குலைப்பது பற்றியும்

காவல்துறை இம்மியும் கவலைப்படு வதில்லை. ADSP மாரிராஜன், கார்த்தி கேயன், மயில்வாகனன் ஆய்வாளர் மாட சாமி,காவலர்கள் விஜயபெருமாள்,மாரியப் பன் போன்றோரின் சார்பு நிலை மற்றம் பொய் வழக்குகள் மூலம் மக்களுக்கு எண் ணற்ற துயரங்களை உருவாக்கும் நடவடிக் கைகள் ஆகியவற்றை இக்குழு கவலையோடு சுட்டிக் காட்டுகிறது.

3) காவல் துறை மற்றும் உளவுத் துறையுடன் முஸ்லிம்கள் கொண்டுள்ள வெளிப்படையான மற்றும் இரகசியமான தொடர்புகள் இறுதியில் அவர்களுக்கும் அவர்களின் சமுதாயத்திற்கும் உலை வைப்பதாகவே உள்ளது என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என இக்குழு அவர்களைக் கேட்டுக் கொள்கிறது.

4) தீவிரவாதச் செயலில் ஈடுபட்டவர்கள் திருந்தி வாழ காவல் துறையினர் அனுமதிக் காத நிலை மிகவும் அநீதியானது. இதை வன்மையாக இக்குழு கண்டிக்கிறது.

5) உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முடியாமல் உள்குத்து வேலைகள் நடப்பது அதிகாரப் பூர்வமாக கண்காணிப்பாளர் பால கிருஷ்ணனால் அம்பலப்படுத்தப்பட்ட பின்னும் அதன் அடிப்படையில் ரிட்மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்ட நிலையிலும் உடனடியாக வழக்குகளைத் திசை திருப்பிக் கொண்டு போகும் நோக்கில் காவல் துறையின் ஒரு பிரிவினராலேயே மேற்கொள்ளப்பட்ட அப்பாஸ் மைதீன் முபாரக் என்கிற இரு நபர்கள் இதில் பலியாக்கப் பட்டுள்ளனர்.

வழக்கைத் திசை திருப்பும் நோக்குடன் ADSP மாரி ராஜனே அவர்களின் வாக்கு மூலம் என ஒன்றைத் தயாரித்து அவரை மிரட்டிக் கையொப்பம் பெற்றுள்ளார். அவரால் குறி வைக்கப்பட்ட நெல்பேட்டை இளைஞர்கள் பலரும் இன்று குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

இது குறித்து ADSP மாரிராஜன் உள்ளிட்ட குழுவினர் மீது உரிய விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

6. கண்காணிப்பாளர் பாலகிருஷ்ணன் கொடுத்துள்ள இரண்டு குற்றச் சாட்டு களையும் பதவியில் உள்ள ஒரு நீதிபதியை க் கொண்டு விசாரிக்க வேண்டும்.

7. இந்த 17 வழக்குகளையும் தமிழகக் காவல் துறை விசாரித்தால் நீதி கிடைக் காது என்பதால் இந்த வழக்கு விசாரணை முழுமையையும் உடனடியாக மத்திய புல னாய்வுப் பிரிவுக்கு (CBI) மாற்ற வேண்டும்.

இராணுவ வீரர்கள் இறந்தது எங்களுக்கு மகிழ்ச்சியை தரவில்லை - காஷ்மீரில் ராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட புர்ஹான் வானியின் தந்தை.

"காஷ்மீரில் தொடந்து மக்கள் கொல்லப் படுகிறார்கள். வீடுகளும், பள்ளிகளும் மருத்துவ மனைகளும் முடங்கிக் கொண்டிருக்கின்றன. ஆனால் இந்திய அரசிற்கு அதைப்பற்றி சிறிதும் கவலையில்லை.

இராணுவ வீரர்கள் கொல்லப்படுவது எங்களுக்கு எந்த கொண்டாட்டத்தையும் தருவ தில்லை அவர்களும் மனிதர்களே!. எங்கள் மக்களின் மரணத்தின் போது நாங்கள் வருத்த மடைகிறோம். அதே போல் இராணுவத்தினரின் மரணத்திற்கு நாங்கள் மகிழ்ச்சியடைவதில்லை.

கடந்த 27 வருடமாக காஷ்மீர் எரிந்து கொண் டிருக்கிறது. ஆனால் யாரும் தீயை அணைக்க முயல்வதில்லை. இன்னும் அதிகம் பற்ற வைத்து விட்டு செல்கிறார்கள்.

# காஷ்மீரில்..?

காஷ்மீரில் இருந்த பண்டிட்களுக்கென்று தனியாக ஒதுக்கி இடம் தர ஏற்பாடு செய்கி றார்கள். இதன் மூலம் எரியும் தீயில் மேலும் பெட்ரோலை ஊற்றுகிறார்கள் ஆட்சியாளர்கள்.

காஷ்மீரில் பற்ற வைத்த நெருப்புக்கு இந்தி யாவின் ஒவ்வொரு குடிமனும் குறிப்பாக பாஜக' விற்கு வாக்களித்த ஒவ்வொருவரும் பொறுப்பு தாரிகள்.

புர்ஹான் வானியும் இதனையே வலியுறுத்தி வந்தார். 2008, 2010, 2016 என்று ஒவ்வொரு முறை காஷ்மீரகம் எரியும் போது கட்டிப் போடு கிறார்களே ஒழிய எங்களது பிரச்சனைகளை சரி செய்ய யாரும் முன் வருவதில்லை.

காஷ்மீரின் பள்ளிக்கூடங்களும் கல்வி நிறுவ னங்களும் தொடர்ச்சியாக எரிக்கப்பட்டு வரு கின்றன. யார் இதை செய்கிறார்கள் என தெரிய வில்லை. சிறுவர்கள் மீது பழி போடுகிறார்கள். கண்டிப்பாக அவர்களும் செய்வதில்லை.

எங்களுக்கான மாற்றம் வேண்டும்." என்று காஷ்மீரில் தற்போது நடைபெறும் போராட்டங் களுக்கு காரணமாக இருந்த புர்கான் வானியின் தந்தை அரசாங்க பள்ளி ஆசிரியர் முசாபர் வானி கூறியுள்ளார்.

காஷ்மீர், 21ம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு எதிராம நடைபெறும் மாபெரும் சுதந்திர போராட்டம் இந்தியாவை சர்வதேச அளவில் தலை குனிவை ஏற்படுத்தியுள்ளது. நான் இந்தியனென்றால் மற்ற மாநிலத்தில் உள்ள மக்கள் அனுபவிக்கும் உரிமைகளை நான் ஏன் அனுபவிக்க முடியவில்லை என்ற கேள்விகள் காஷ்மீரிகளை இந்தியாவை விட்டு முழுமையாக தனிமைப்படுத்தி விட்டன.

இந்நிலையில் காஷ்மீரத்தில் நடைபெறும் சுதந்திர போராட்டத்தை மத ரீதியான போராட்





டமாக இன்றைய மத்திய அரசு மாற்ற முயல் கிறது. அதன் பெரும் முயற்சியாக காஷ்மீரகத்தின் பூர்வகுடிகளான பண்டிகளுக்கு தனி இடத்தை ஒதுக்கி அவர்களுக்கு வீடுகள் கட்டி தந்து காஷ்மீர் மக்களிடமிருந்து தனிமைப்படுத்த முயற்சி செய்கிறது. இதனை காஷ்மீரிகள் அனை வரும் முற்றிலுமாக எதிர்க்கிறார்கள்.

பண்டிட்களின் பூர்விக வீடு இருக்கும் போது அவர்களுக்கு ஏன் தனி குடியிருப்பு பகுதி?. அவர்கள் எங்கள் சகோதரர்கள் எங்கள் அண்டை வீட்டுக் காரர்கள் அவர்களது சொந்த வீட்டி லேயே அவர்கள் வாழ வேண்டும். அரசங்கத்தின் இந்த நடவடிக்கை அவர்களோடு எங்களை தனிமைப்படுத்துகிறது. நாங்கள் இதனை ஏற்றுக் கொள்ள மாட்டோம் என காஷ்மீரிகள் எதிர்க் கிறார்கள்.

இஸ்ரேல் பாலஸ்தீனத்தை கைப்பற்ற பயன் படுத்திய திட்டம் தான் இந்த தனி குடியிருப்பு கள். அதே நடைமுறையை இந்திய அரசாங்கமும் பின்பற்றுகிறது. நிலத்திற்காக மக்களை கொல்லும் காலனியாதிக்க முறையை இந்தியா வரவேற்கிறதா?. நிலத்தின் மீதான அக்கறையை மக்களிடம் காட்டியிருந்தால் பாகிஸ்தானுக்கு எதிராக காஷ்மீரகம் என்றோ போர்க்கொடியை தூக்கியிருக்கும். ஆனால் நாம் செய்ய மறுத்து விட்டோம். மக்களை அடிமைப்படுத்தி ஆட்சி செய்த அரசாங்கம் எதுவும் நிலைத்ததில்லை என்பதே வரலாறாக உள்ளது.

நிலம் தான் வேண்டும் மக்கள் வேண்டாம் என நினைத்தால் கண்டிப்பாக காஷ்மீரகம் நம்மை விட்டு பிரிவதை தடுக்க முடியாது.

**-அபூசித்திக்**



# பாபரி மஸ்ஜித் என்றும் நம் நினைவில்

பாபரி மஸ்ஜித் இடிக்கப்பட்டு 24 ஆண்டுகள் ஆகிவிட்டன.

பாபரி மஸ்ஜித் விவகாரத்தில் அனை வரும் நீதிமன்ற தீர்ப்புகளையே எதிர்பார்க்கின் றார்கள். ஆனால் நரேந்திரமோடி தனது தேர்தல் அறிக்கையில் தான் ஆட்சிக்கு வந்தால் இராமர் கோயிலைக் கட்டுவேன் என்று கூறியுள்ளார்.

இப்படி ஒரு கட்சி இந்த மத சார்பற்ற நாட்டில் தேர்தல் அறிக்கை தரக்கூடாது. ஆனால் நமது தேர்தல் ஆணையம் இதுபோன்ற விவகாரத் தில் பாரதிய ஜனதா கட்சியின் அலுவலகம் போலவே செயல்பட்டது.

இப்போது கோயிலைக் கட்டிட சிலபல வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன. உத்திர பிரதேசமாநிலத்திற்கு தேர்தல் வருகின்றது. இதில் பா.ஜ.க. வென்றால் நீதிமன்ற ஆணைகளைப் புறந்தள்ளிவிட்டு கோயில்கட்டும் பணி நடை பெறலாம் என்ற பீதி உள்ளது. இந்த வகையில் பாபரி மஸ்ஜித் பற்றிய சில தகவல்களை இங்கே தொடர்ந்து தந்து கொண்டிருக்கின்றோம்.



# முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன?

அபுல்ஹசன் அலீ நத்வீ

உலகாதய வாழ்வுமுறை வரலாற்றில் நெடுங்காலமாகவே மேற்கத்திய கலாச் சாரத்தின் அடையாளமாகவும் மேற்கத்திய வாழ்வின் அடையாளச் சின்னமாகவும் ஆகி விட்டது. இதற்கு அறிவு ரீதியாகவும் வரலாற்று ரீதியாகவும் இயற்கையாகவும் சில காரணங்கள் உண்டு.

ஐரோப்பாவில் ஏற்பட்ட அரசியலும் அறிவியல் எழுச்சியும் புதிய கண்டுபிடிப்புகளின் வருகையும் உலகாதாயத்தைக் கூர் தீட்டின, வலிமைப்படுத்தின. மேற்கத்திய, கிழக்கிந்திய அறிஞர்களில் ஏராளமானோர் இதை நன்றாக அவதாணித்துள்ளர்.

இந்த நூற்றாண்டிலுள்ள தலைசிறந்த பேராசிரியரும் ஆய்வாளரும், வெவ்வேறு நாடுகளுக்கு சென்று வந்தவருமான கிழத்தேய அறிஞர் அப்துர் ரஹ்மான் அல்கவ்கபீ அவர்கள் (தபாயிவுல் இஸ்திப்தாத்) சர்வாதிகாரத்தின் இயல்புகள் எனும் நூலில் இப்படிக் கூறுகிறார்.

**ஒரு மேற்கத்தியன் என்றாலே அவன் எப்படி இருப்பான் தெரியுமா?**

வாழ்வதில் உலகாதாயவாதியாக, இறுகிய இதய முள்ளவனாக, கொடுக்கல் வாங்களில் ஈவு இரக்கமற்றவனாக, சுயநலக்காரனாக, பழி வாங்கும் புத்தியுள்ளவனாகத்தான் இருப்பான்.

கிறிஸ்தவம் அவனுக்கு உவந்தளித்த உன்னதப் பண்புகள் சிறப்பான குணங்கள் எதுவும் அவனிடத்தில் இருக்காது.

உதாரணமாக ஜெர்மனிக்காரனை எடுத்துக் கொள்ளுங்கள், முரட்டு சுபாவமுள்ளவனாகவே அவன் இருப்பான் மனித சமுதாயத்தின் ஓர் அங்கமாகத் திகழ்பவன், உலகில் வாழ்ந்திடும் வலிமையை பெற்றிருக்க வேண்டும். வாழ்ந்திட வலிமையில்லாதவன் ஏன் வாழ்ந்திட வேண்டும்? அவன் செத்து ஒழிய வேண்டியதுதானே! என்றுதான் ஜெர்மனிக்காரன் நினைப்பான்.

மேலும் அதிகாரத்தில் (....) தான் எல்லா சிறப்புக்களும் உள்ளன. செல்வத்தில்தான் எல்லா (...) வலிமையும் உள்ளன என்றும் கருதுவான்.

**ஜெர்மனிக்காரன் எப்படி என்றால் லத்தின்காரன் எப்படி இருப்பான் என்பதைப் பாருங்கள்..?**

# உலகாதயமே மேற்குலகின் மதம்

தற்பெருமையும் கட்டுப்பாடற்றவர்களும் இவனின் பிறவிக்குணம் மேலும் இவன் அறிவு என்றாலே அது சுதந்திரம்தான். வாழ்க்கை என்றா லே அது வெட்கத்தை துறப்பதுதான். கண்ணியம் என்றாலே அது ஆடை அணிகலனில்தான் கவுரவம் என்றாலே அது மற்றவர்களை இழிவாக எண்ணுவதில்தான் உள்ளது என்றும் கருதினான். (நூல்–தபாஇஷல் இஸ்திப்தாத்)

இது ஐரோப்பியர்களின் இயல்பைக் காட்டும் உண்மையான வீரம். மேற்கத்தியர்களின் மனப் போக்கைப் பற்றிய சரியான ஆய்வு.

கவ்கபீ அவர்களை ஜெர்மனிக்காரர்களையும் லத்தின் காரர்களையும் மட்டும்தானே குறிப் பிட்டு இருக்கிறார்கள். இதர ஐரோப்பியக் காரர் கள் பற்றி எதுவுமே கூறவில்லையே என்று நாம் கருதிவிடக்கூடாது. தேவையற்ற சர்ச்சையில் வீழ்ந்திடக்கூடாது என்பதற்காகவே அவர் அதைக் கூறாது விட்டிருக்கிறார்.

ஜெர்மனிக்காரர்களையும் லத்தீனர்களையும் மொத்த ஐரோப்பியர்களுக்கும் உதாரணமாகத் தான் காட்டியுள்ளார் அவர்.

**ஆன்மிக இயக்கங்களுக்கு உலகாதாய நோக்கங்கள் இருந்தன**

அரசியல், சமூகம், பண்பாடு என ஐரோப் பாவின் எல்லாப் பகுதிகளிலும் உலகாதயத்தின் ஜீவன் இருப்பதைப் பார்க்க முடிகிறது. இக்கால ஐரோப்பியர்களை அதைப் புதுப்பித்து அழுகுப்படுத்தி வைத்திருக்கிறார்கள். பிற்காலத் தின் ஏராளமான ஐரோப்பியர்களை ஈர்த்த ஆன்மிக இயக்கத்துக்கும் கூட உலகாதாயமே ஜீவனாக இருந்தது.

ஐரோப்பாவிலிருந்த இதர தொழில்களையும் கலைகளையும் போல ஆன்மிகமும் ஒரு தொழில் ஒரு கலை என்றாகி இருந்தது.

இந்த ஆன்மிக இயக்கத்தின் லட்சியம் இஸ்லாமிய ஆன்மிக இயக்கம் சூஃபி இயக்கம் கொண்டிருந்த லட்சியங்களைப் போன்றதாக இருக்கவில்லை.

மனக்கட்டுப்பாடு, வாழ்வின் துன்பங்களை முதிர்ச்சியுடன் எதிர்கொள்வது மரணத்துக்குத் தயாராக இருப்பது, நற்செயல்கள், இறைவனுக் குப் பணிவது, உளத்தூய்மை, ஆன்மப் பரிசுத்தம் போன்ற லட்சியங்களைக் கொண்டிருக்க வில்லை ஐரோப்பாவின் ஆன்மிகம்.

மன மகிழ்ச்சி, இறந்தவர்களின் உயிர் களுடன் (ஆவிகளுடன்) பேசுவது, ஆவிகளின் பிரதேசத்து ஆச்சரியங்கள் அதன் மர்மங்களைக் காட்டுவது என்பதைதான் அதன் லட்சியமாக இருந்தன. இப்படிப்பட்ட ஆன்மிக இயக்கங் களைப்போலவே மேற்குலகில் பொதுமக்களின் மனநிலையும் இருந்தன.

தம் உயிரையும் உடலையும் அர்ப்பணித்து மக்கள் ஆற்றும் பணிகளுக்கெல்லாம் உலகாதாய நோக்கங்களே அச்சாக இருந்தன.

தம் பணிகள் மூலமும் சாதனைகள் மூலமும் நற்பெயர் பெற வேண்டும். பிரபலம் அடைய வேண்டும். வரலாற்றில் ஓர் அழியாத இடத்தைப் பிடிக்க வேண்டும். கீர்த்தியும் கித்தாப்பும் கிடைக்க வேண்டும். தம் செயலால் தம் இனமும் குலமும் நாடும் பெருமை பெற வேண்டும். இதர இனங்கள் நம்மைப் பார்த்து ஏங்க வேண்டும் என்பன போன்ற நோக்கங்களே அவர்களின் சேவைகளுக்கான அச்சாக இருந்தன.

ஒரு முஸ்லிமின் செயல்கள் இப்படிப்பட்ட வையல்ல அவர் அல்லாஹ்வின் திருப்தியையே லட்சியமாகக் கொண்டிருப்பார். தம் நற் செயல்களில் முகஸ்துதியோ பாராட்டுப்பெறும் நோக்கமோ கலந்துவிட்டால் அவை அவற்றின் பலனை அழித்துவிடுமே என்று அஞ்சுவார். பின்வரும் இறைமறை வசனங்கள் தம் சிந்தையில் இருத்திச் செயல்படுவார்.

“தம் செயல்களில் மிகப்பெரும் இழப்புக் குரியோர் யார் என்பதை நான் உங்களுக்கு அறிவிக்கட்டுமா? என்று (நபியே) நீர் கேட்பீராக”

“யாருடைய முயற்சி இவ்வுலக வாழ்வில் பயனற்றுப் போயிருக்க தாங்கள் மெய்யாகவே அழகான காரியங்களையே செய்வதாக எண்ணிக் கொண்டிருக்கிறார்களே அவர்கள் தான்”

“அவர்கள் தம்முடைய இறைவனின் வசனங் களையும் மறுமையில் அவனைச் சந்திப்போம் என்பதையும் மறுக்கின்றனர். அவர்களின் செயல்கள் யாவும் வீணாகும் மறுமை நாளில் அவர்களுக்கு நாம் எந்த மதிப்பையும் ஏற்படுத்த மாட்டோம்” *(18 : 103–105)*

“இன்னும் அவர்கள் (உலக வாழ்வில்) செய்த செயல்களின் பக்கம் முன்னோக்கி அவற்றை

(பலன் ஏதுமற்ற) பரத்தப்பட்ட புழுதியாக ஆக்கிவிடுவோம்" (25 : 23)

இந்த வசனங்களையெல்லாம் அவரின் சிந்தையை விட்டு அகலாது. மேலம் பின்வரும் இஸ்லாமிய வழிகாட்டுடுகளையும் அவர் கவன த்தில் கொள்வார்.

அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் "தம் வீரத் தைக் காட்டவும் பாராட்டுப் பெறும் நோக்கத் துடனும் போராடும் மனிதர் இவ்விருவரில் யார் அல்லாஹ்வின் பாதையில் போரிடுபவர் என்று கேட்கப்பட்டது.

அதற்கு "யார் அல்லாஹ்வின் வார்த்தை ஓங்கச் செய்வதற்காகப் பேராடுகிறாரோ அவரே அல்லாஹ்வின் பாதையில் போராடுபவராவார்" என்று நபி (ஸல்) பதில் கூறினார்கள் (நூல் – முஸ்லிம்)

உமர் (ரழி) அவர்கள் இப்படிப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தார்கள். "இறைவா என் செயல்கள் அனைத்தையும் நல்லதாக ஆக்கி வைப் பாயாக! அவை அனைத்தையும் உனக்காக மட்டுமே செய்யப்பட்டதாக ஆக்குவாயாக! உன்னைத் தவிர வேறு யாருக்கும் அதில் சிறிதளவைக் கூட ஆக்கிவிடாதே".

இந்த சமுதாயத்தின் நல்லோர்கள் தமது வணக்க வழிபாடுகளையும் தர்மங்களையும் எவர்க்கும் தெரியாறு மறைத்திட அரும்பாடு பட்டிருக்கிறார்கள். இது குறித்த நிகழ்வுகள் நமது வரலாற்று ஏடுகளிலும் சரித்திர நூல்களிலும் ஏராளமாக உள்ளன.

## எங்கும் எதிலும் பொருளாதார மயம் உலகாதயம் மேற்குலகின் மதம்

ஐரோப்பாவில் நிலவிய உலகாதாயச் சிந்த னையும் உலகாதாயக் கண்ணோட்டமும் எந்த அளவுக்குப் போய்விட்டதென்றால் உலகா தாயத்தில் மூழ்கி அதிலேயே மாய்த்துப்போயி னர். எதைப் பார்த்தாலும் உலகாதாய மதிப்பீடு களைக்கொண்டேபார்த்தனர். பிறமதிப்பீடுகளை மறந்தனர்.

கம்யூனிஸக் கொள்கையை உருவாக்கிய கார்ல்மார்க்ஸ் (1818–1883) ஐ இதற்கோர் உதாரணமாக நாம் கூறலாம்.

ஒரு சமூகத்தின் ஜீவனே அதன் பொருளாதார கட்டமைப்புத்தான். மதம், நாகரீகம், வாழ்க்கைத் தத்துவம் அழுகுக் கலைகள் அனைத்தும் இந்தப் பொருளாதாரக் கட்டமைப்புக்கு எதிராகவே இருக்கிறது என்பது அவரின் கருத்து.

அவர் கூறுகிறார்.

வரலாற்றின் ஒவ்வொரு காலக் கட்டத்திலும் ஒவ்வொரு காலத்திலும் தொழில் உற்பத்திக் கென ஒரு பிரத்யேக பாதைகளும் உருவாயின.

எனினும் கொஞ்ச காலத்துக்குப் பின்னர் இந்த சமுதாயத் தொடர்புகள் மாறிவிட்டன. அவை உற்பத்தி வரிகளுடன் ஒத்திசைத்து அதற்கு ஏதுவாக இருந்த நிலை மாறிவிட்டன.

சிலர் இந்தத் தொடர்புகளுக்கு முற்றிலும் வேறொரு புதிய வடிவத்தைக் தந்திட முயன்றனர். இதுவே புரட்சி என்றும் எழுச்சி என்றும் வரலாற்றில் அறியப்படுகிறது.

வரலாற்றாசிரியர்கள் கூட இந்த எதார்த் தத்தை புரிந்திருக்கவில்லை. இதை நான் ஒரு குறையாகச் சொல்லவும் இல்லை.

ஏனென்றால் இந்தப் புரட்சியில் தம்மை ஓர் அங்கமாக ஆக்கிக்கொண்ட மக்களுக்கே கூட சில நேரங்களில் நாம் எதற்காகப் போரிடு கிறோம் என்று தெரிவதில்லை. எனவே வரலாற்ற ாசிரியர்கள் இதைப் புரிந்திடாமலிருப்பது தவறல்ல.

காரல் மார்க்ஸ் இப்படிக் கூறியிருக்கிறார் அவரின் வாதத்தில் இருக்கின்ற சிக்கலை நம்மால் அவிழ்க்க இயலும்.

ஒரு சமுதாயத்தின் அரசியலமைப்பில் சீர் திருத்தமும் முன்னேற்றமும் ஏற்படுவதோ அதன டிப்படையில் சில புரட்சிகரமான விளைவுகள் ஏற்படுவதோ எந்த சமுதாயத்துக்கும் புதிய நிகழ்வு அல்ல. எல்லா சமுதாயங்களிலும் இது நடக்கத்தான் செய்யும்.

அந்தந்தக் காலத்தில் புதிதாய் ஏற்படும் தொழில் உற்பத்திக்கும் ஏற்கனவே இருந்துவரும் சமூகத் தொடர்புக்கும் மத்தியில் முரண்பாடு ஏற்படும் போது அதைச் சமன்படுத்திட ஒரு முயற்சி, உழைப்பு ஏற்படுவது இயல்பானதே.

இதைத்தாண்டி முரண்பாடு முற்றும்போது அது ஒரு சண்டையாகவும் ஆகிவிடுவதுண்டு. இந்த முரண்பாடு வெளிப்படையாகத் தெரியாத

போது அப்படி ஒரு முரண்பாடு இருந்தது என்றோ இல்லை என்றோ நாம் கூற முடியாது.

தொழில் உற்பத்திக்கும் சமுதாய வாழ்வுக்கும் இடையே முரண்பாடு வரும்போது அது வர்க்கப்போரில் வெளிப்படுகிறது. ஏனென்றால் சமூகத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகள் அனைத்தும் பொருளியல்சார்ந்த கூறுகளாகவே இருக்கின்றன.

இதை வைத்துத்தான் கார்ல் மார்க்ஸ் என்பவர் மனித குலத்தின் வரலாறே அதன் தொடக்க காலத்தை தவிர வர்க்கப் போரின் வரலாறுதான் என்ற முடிவுக்கு வந்துவிட்டார்.

இந்த முடிவுக்கு வந்ததன் மூலம் அவர் மனித வாழ்வுடன் தொடர்புடைய மதம், ஒழுக்கம் ஆன்மா, இதயம், அறிவு ஆகிய அனைத்தையும் மறுத்தவராகிறார். இவற்றிற்கெல்லாம் எந்த மதிப்புமில்லை. வரலாற்றில் இவற்றுக்கு எந்த பங்குமில்லை என்கிறார்.

வரலாறு கண்ட போர்கள் அனைத்தும் வயிற்றுப் பசிக்காகவும் வறுமைக்காகவும் மட்டுமே நடைபெற்றன என்கிறார். மதங்களிடையே ஏற்பட்ட மோதலுக்குக்கூட பொருளாதாரக் காரணங்கள் உண்டு என்கிறார் அவர்.

பத்ரு, உஹது அஹ்லாப், காதிசிய்யா யர்மூக் முதலிய வரலாற்றில் நிலைத்து நிற்கும் போர்களை கூட அவரின் பார்வையில் இவ்வகைப்பட்டதே. இப்படி மேற்கத்திய உலகம் எங்கும் பொருள், எதிலும் பொருள், எல்லாம் பொருள் என்றே சிந்தித்தது வாழ்ந்தது.

இவர்கள் இப்படிக் இருந்தார்கள் என்றால் கீழைத்தேயவாதிகள் எங்கும் கடவுள் எதிலும் கடவுள் எல்லாம் கடவுள் என்ற சிந்தனையால் ஆட்படுத்தப்பட்டிருந்தனர்.

ஐரோப்பியர்களை உலகாதாயச் சிந்தனை ஆட்கொண்டிருந்தது. வயிறு, குடல் இவை தவிர வேறொன்றில்லை என்றனர்.

கிழைத்தேய மதவாதிகளோ மனிதன் கடவுளின் நிழல் என்றனர். மேற்கத்தியர்களோ மனிதன் ஓர் விலங்கு என்றனர். – தொடரும்.

**– தமிழ் வடிவம் : இல்யாஸ் ரியாஜி**
**அபுல்ஹசன் அலீ நத்வீ**
**மொழி பெயர்ப்பு : அஹ்மது றலாலுத்தீன் நத்வீ**


**இப்போது பரபரப்பான விற்பனையில்**




விலை ரூ. 30 மட்டுமே

**வேர்கள் பதிப்பகம்,**
52/1, மண்ணடி தெரு, மண்ணடி,
சென்னை - 600 001.
தொடர்ப்புக்கு : 8148129887





# சட்ட மருத்துவம்

# LEGAL MEDICINE

## Dr. S. Muhammed Afzal

சமீப காலங்களில் நாம் ஊடகங்கள்/ பத்திரிக்கைகள் வாயிலாக பல சர்ச் சைக்குரிய / மரணங்கள் பற்றி அறிகிறோம். அந்த மரணங்கள் கொலையா? தற் கொலையா? அல்லது விபத்தா? என்கின்ற விவாதம் நீண்ட நாட்களாக நடைபெறு கிறது. அவ்வாறு நிகழ்ந்த மரணங்கள் எவ்வாறு நிகழ்ந்தது? உடலில் உள்ள காயங்கள் மரணத்திற்கு முன் நிகழ்ந்ததா அல்லது இறந்த பின் ஏற்பட்டதா என்பது எவ்வாறு கண்டறியப்படுகிறது என்பது குறித்த ஒரு அறிமுக கட்டுரை.

### காயம் - (Wound)

காயம் என்பது உயிருடன் இருக்கும் உடலின் திசுக்களின் இயற்கையான தொடர்புடைமைக்கு இழப்பு ஏற்படுவ தாகும். உடல் மீது தாக்குவதாலோ/ உடல் வேறொரு பொருள் மீது தாக்குவதாலோ காயங்கள் ஏற்படுகின்றன.

### காயங்களின் வகைகள் (TÈES OF WOUNDS)

சிராய்ப்புக் காயங்கள் (Abrasions) / உராய்வுக் காயங்கள் (Scratch) வழுவுண்ட காயங்கள் (Graze) / அழுத்தத்தினால் உண் டான காயம் (Pressure Abrasion) / இடித் தலினால் ஏற்பட்ட காயம் (Impact Abrasion) / கன்றிய காயம் (Bruises)/ வீக்கக் காயம் (Contusion) / வெட்டுக் காயம் (INCISED WOUND) / கீறல் (Slash wound)/ பொத்தல் காயம் (Punctured wound)/ குத்துக் காயம் (Stab wound) / சிதைந்த காயம்/ கிழிந்த காயம்/ பிய்ந்த காயம் (Lacerated wound)/ தீக்காயம் (Burns)/ இரசாயனக் காயம் (Chemical Injury)/ மின்சார காயம் (Electric Injury) / மின்னல் காயம்/ கதிர்வீச்சுக் காயம்/ சுடுகருவி காயம் (Fire arms wound) என பல வகைப்படும்.

சட்ட மருத்துவ ரீதியாக சாதாரண காயம் (Simple Injury)/ ஆபத்தான காயம் (Grievious Injury) என வகைப்படும்.

### சிறாய்ப்புக் காயங்கள்- ABRASIONS

மேல் தோல் (Ãidermis) பாதிக்கப்படுவ தால் சிராய்ப்புக் காயம் ஏற்படுகிறது. கடினமாக தரையின் மீதோ/ பொருளின் மீதோ விழுவதாலோ அல்லது தாக்கப்படு வதாலோ/ வாகனங்களில் சிக்கி இழுத்துச் செல்லப்படுவதாலோ/ ஏற்படும். விரல் நகங்கள்/ பற்கள்/ முள் போன்வற்றாலும் சிராய்ப்புக்காயம்ஏற்படும்.பிறபொருள்கள் தோலின் மேல் பலமாகப்படுவதாலும் அல்லது தரையின் மேல் விழுந்து சறுக்கு வதாலும் இது போன்ற காயங்கள் ஏற்படலாம். சிராய்ப்புக் காயங்களில் சிறிது இரத்தக் கசிவு ஏற்படும்/ ஆனால் விரைவில் ஆறிவிடும் / ஆறியபின் அவ்விடத்தில் தழும்பு இருக்காது. சிராய்ப்பு நான்கு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

(i) மேல் தோல் கீறிய சிராய்ப்பு (Scratch) - கூர்மையான சாதனங்களான விரல் நகம்/ ஊசி/ முள் போன்றவற்றால் ஏற்படுகிறது.

(ii) வழித்துக் கொண்டு போகும் உராய்வுகள் (Graze)- இதற்கு கிரைண்டிங் (Grinding and sliding) உராய்வுகள் என்று பெயர். இவ்வகை காயம் சாலை விபத்தில் சிக்கியவர்களிடம் மட்டும் காணப்படும். மண்ணின் மேல் மண்புழு ஊர்ந்து செல்லும் போது ஏற்படும் சுவடு போல நீளமாக இணைகரமாக இந்த உராய்வு காணப்படும்.

(iii) அழுத்தத்தினால் உண்டாகும் காயம்

**(Pressure abrasion)-** தூக்கு கயிற்றினால் கழுத்தை நெரிப்பதாலும் / பற்களால் கடிப்பதாலும் இவ்வகை காயம் ஏற்படும்.

**(iv)** இடித்தலினால் ஏற்படும் காயம் **(Impact abrasion)-** இது போன்ற காயங்கள் மோட்டார் வாகனத்தால் இடிக்கப்படும் போது ஏற்படுகிறது.

வன்புணர்ச்சியில் தொடை / பிறப்புறுப்பு / மார்பகங்களில் சிராய்ப்பு காயங்கள் காணப்படும். சாதாரண மண் தரையில் விழும்போதும் சிராய்ப்பு ஏற்படும். சிராய்ப்பின் வரைமுறை / ஆழம்/ அமைப்பைக்கொண்டு நிகழ்ந்த திசை / நிகழ்ந்த நிலை / எவ்வகை பொருளால் காயம் ஏற்பட்டிருக்கிறது என்பதை கணிக்கலாம். சிராய்ப்பின் தன்மையைக் கொண்டு அந்த காயம் ஏற்பட்ட காலத்தை **(Age of abrasion)** கணிக்கலாம்.

உயர் நீங்கிய உடலில் எறும்புகள் போன்றவை அரித்த புண்கள் சிராய்ப்பு போன்ற தவறான தோற்றமளிக்கும். தற்கொலைசெய்துகொண்டஅல்லதுகொலையுண்ட உடல்கள் தரையில் இழுத்துச் செல்லப்பட்டிருந்தால் உடலில் சிராய்ப்பு காயம் இருக்கும்.

## வீக்கங்கள் - CONTUSIONS

சிறிய இரத்த குழாய்கள் **(Branches of blood vessels)** கிழிந்து அதன் வழியே செல்லும் இரத்தம் தோலின் அடியில் தங்குவதால் வீக்கம் உண்டாகிறது. மழுங்கிய ஆயுதங்கள்/ தடி/ சாட்டை / செருப்பு/ பந்து போன்றவைகளாலும் / கையை மூடிக் கொண்டு குத்தும் போதும் / தரையில் விழும் போதும் இது போன்ற காயங்கள் ஏற்படும். **Qp** மோபிலியா/ லுனூக்கிமியா போன்ற சில நோய்களிலும் இது போன்ற வீக்கங்கள் ஏற்படலாம்.

வயதானவர்கள் / குழந்தைகள் / பெண்களுக்கு திசுக்கள் மென்மையாக இருப்பதால் சிறிய அடி உடலில் பட்டாலும் வீக்கம் பெரிதாகத் தென்படும். சில சமயம் அடிபட்டு எலும்பு அல்லது அடிபட்ட இடம் ஒன்றாக இருக்க வீக்கம் வேறு இடத்தில் இருக்கும். நெற்றி பகுதியில் அடிபட்டிருக்க கண்ணைச் சுற்றி வீக்கம் இருக்கும்.

இறந்த 3 மணி நேரம் கழித்து பிணத்தின் மீது அடித்தால் வீக்கம் ஏற்படாது. 3 மணி நேரத்தில் வீக்கம் ஏற்பட அடி பலமாக இருக்க வேண்டும்.

## சிதைந்த காயம் - LACERATED WOUND

இவ்வகை காயங்களில் பாதிக்கப்பட்ட தோலின் ஓரங்கள் ஒழுங்கற்ற முறையிலும்/ சிறிது இரத்தக் கசிவுடன் காணப்படும். இந்த காயங்கள் மழுங்கிய ஆயுதங்களாலும்/ கூர்மையான கடினமான துருத்திய பொருள் மீது விழுவதாலும் / இரயில் விபத்து / இயந்திர விபத்து / வாகனங்களின் சக்கரங்களாலும் மிருகங்களின் நகங்களாலும் ஏற்படும்.

இந்த காயங்களைக் கொண்டு தாக்கிய ஆயுதத்தின் அளவு / வடிவம் சொல்ல இயலாது. காயங்களில் ரோமங்கள் / மண் / கிரீஸ் / இயந்திர எண்ணெய் / துணி இழைகள் போன்றவை காணப்படலாம். இவ்வகை காயம் விபத்து அல்லது கொலையிலே பெரிதும் காணப்படும்.

**(i)** வெட்டுபட்ட காயத்தை போன்ற சிதைந்த காயம் **(Incised like wound) -** சிதைந்த காயம் உடலின் சில பாகங்களில் ஏற்படும் போது பாதிக்கப்பட்ட தோலானது வெட்டுபட்ட காயம் போல பிளவுபட்டுத் தோன்றும். பெரும்பாலும் மண்டை ஓடு/ கன்னம் / நெற்றி / புருவத்தில் இது போன்ற காயம் ஏற்படும்.

**(ii) Over streching** காயம்- பெரும்பாலும் சாலைப் போக்குவரத்து விபத்துக்களில் இவ்வகை காயங்கள் ஏற்படும். உதைப்பதாலும் திடீர் எலும்பு முறிவிலும் இந்த வகை காயம் ஏற்படலாம்.

**(iii) Avulsion** காயங்கள் - தொழிற்சாலைகளில் பணிபுரிபவர்கள் காயம்படும் போது தோல் சிதைவுபட்டு வெளி வரும்.

**(iv)** கிழிசல் **(Tears)** தோல் மற்றும் திசுக்களில் மீது பகுதி கூர்மையான பொருள் பலமாக படும்போது ஏற்படும் காயம்.

**(v)** வெட்டு சிதைவு காயம் **(Cut laceration)** கோடாரி **(axe)** போன்ற பலமான பொருளால் தாக்கப்படும் போது ஏற்படும் காயம்.

## வெட்டுக் காயம்- INCISED WOUND

வெட்டுக் காயம் / ஒழுங்காக / நீளமாக / ஆழமில்லாமல் இருக்கும். கூர்மையான அறுக்கும் முனையுடைய கத்தி / சவரக்கத்தி / கத்திரிக் கோல் / அரிவாள் / உடைந்த கண்ணாடித்துண்டு / பிளேடு / கோடாரி போன்றவற்றால் உண்டாகும். இவ்வகை காயங்களில் இரத்தக் குழாய்கள் அறுத்து போவதால் இரத்தப் போக்கு அதிகமாக இருக்கும். இக்காயத்தின் நடுப்பகுதி தோல் அதிகம் பிளவுபட்டுக் காணப்படும்.

இவ்வகைக் காயங்களில் பயன்படுத்தப் பட்ட ஆயுதத்தின் வகை கண்டறிய முடியும். காயத்தின் அமைப்பினைக் கொண்டும் / ஆழ அகலத்தைக் கொண்டும் எந்த திசை யிலிருந்து தாக்கப்பட்டது என்பதையும் கணிக்கலாம்.

காயத்தின் தன்மையைக் கொண்டு தற்கொலையா / கொலையா அல்லது தற்காப்பு முயற்சியில் ஏற்பட்டதா என்பதை வேறுபடுத்தி அறியலாம்.தற்காப்பு வெட்டுக் காயங்கள் / உள்ளங்கைகளிலும் / முன் கை களிலும் காணப்படும். தானாக ஏற்படுத்திக் கொண்ட போலிக் காயங்கள் (Self inflicted injuries) எளிதில் கண்டறியலாம். அவை பொதுவாக உடலின் முன் பகுதியில் காணப்படும்.

தற்கொலை முயற்சியில் உறுதியற்ற நிலையால் தொடக்கத்தில் அதிக ஆழமில் லாத மெல்லிய கோடுகளாக பல வெட்டுக் காயங்கள் (hesitational cuts) காணப்படும். தற்கொலை வெட்டுக் காயங்கள் பெரும்பா லும் கழுத்து / நெஞ்சுப்பகுதி / கை மணிக் கட்டில் அதிகம் காணப்படும்.

## கொத்துக் காயம் - CHOP WOUND

கோடாரி போன்ற பலமாக ஆயுதத்தின் கூர்மையான வெட்டும் பகுதியில் பலமாக தாக்கப்படும் போது ஏற்படும் காயம். சில சமயம் உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் காயமாக இருக்கும்.

## குத்துக் காயம் - STAB INJURY

கூர்மையான முனையுடைய கத்தி / பட்டாகத்தி / பிச்சுவா / ஊசி / கத்திரிக் கோல் / ஈட்டி / அம்பு போன்றவை தோல் திசுக்களைத் துளைத்து உடலில் ஏற்படுத் தும் காயங்கள் குத்துக் காயங்களாகும். வெளிக்காயம் சிறியதாக வெளி நோக்கி யிருக்கும். உள்காயம் பெரிதாக உள் நோக்கி யிருக்கும். ஆழம் அதிகமாக இருக்கும் / ஒழுங்கான முனைகளைக் கொண்டிருக்கும்.

காயத்தைச்சுற்றிவீக்கமோ/சிராய்ப்போ இருக்காது. துளைவடிவில் இருக்கும். காயம் ஆபத்தை விளைவிக்கத்தக்கது. முக்கிய உறுப்புகள் சிதைய வாய்ப்புள்ளது.

இவ்வகை காயத்தில் வெளியே காணப் படும் இரத்தக் கசிவை விட உள்ளே அதிக இரத்தக்கசிவு இருக்கும். உள்ளே புகுந்த ஆயுதம் ஒரு புறம் புகுந்து மறுபுறம் வெளிப் பட்டால் Perforating காயமாகும். தற்கொலையில் சாதாரணமாக குத்துக் காயங்கள் ஏற்படுவதில்லை.

## எலும்பு முறிவு வகைகள் KINDS OF FRACTURE

(i) பலமுனை முறிவு (Comminuted fracture) எலும்பானது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சிதறல்களாக அல்லது துண்டுகளாக முறிந்து காணப்படும். அதிக பளுவானவற்றில் மோதுதல் அல்லது அடி காரணமாக இக்காயம் ஏற்படும்.

(ii) பள்ளமான முறிவுகள் (DÃressed fracture)- இவ்வகை முறிவுகள் மண்டை ஓட்டு எலும்பு முறிவுகளில் காணப்படும். முறிவு உட்புறம் குழியில் அழுத்திக் கொண் டிருக்கும். சிறிய தாக்கும் பகுதியுடைய கல்/ சுத்தியல் போன்ற பலமான பொருளால் தாக்கும் போது இவ்வகை முறிவு ஏற்படும்.

(iii) நீர்த்தாரை முறிவு (Guttered fracture) - எலும்பின் பகுதி கனம் மட்டும் அகற்றப் படும் போது இவ்வகை முறிவு ஏற்படுகிறது.

(iv) வெடிப்பு முறிவு (Bursting fracture)- வாகன விபத்துக்களில் வெடிப்பு முறிவுகள் ஏற்படும். அதிக எடையுள்ள வாகனங்களில் சக்கரங்கள் தலையில் ஏறுவதால் மண்டை ஓடு இரு பகுதிகளாக உடைகிறது.

(v) குட்டை வடிவ முறிவு (Pond of Indented fracture)- பொதுவாக குழந்தைகளி டம் காணப்படும். மழுங்கிய பொருளால் தாக்கப்படும் போது ஏற்படும் முறிவு.

காயத்தின் கடுமையான அழுத்தம் காரணமாக இவை ஏற்படும். உட்புறம் குழிவாக இருக்கும்.

(vi) சிலந்தி வலை முறிவு (Mosaic fracture) பலமுனை பள்ளமான முறிவுகள் பிரிந்து ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்ட முறிவு கோடுகளாக காட்சியளிக்கும்.

(vii) Perforating முறிவு- துப்பாக்கி குண்டு / கத்தி/ பட்டாக்கத்தி கோடாரி போன்ற கூர்மையான ஆயுதங்களால் ஏற்படும் முறிவு.

எலும்பு முறிவு / தலைக் காயம் சட்டம் சார்ந்த மருத்துவத்தில் ஆபத்தை விளைவிக்கும் காயமாகும். தலைக் காயத்தில் / மூளைக் காயம் சாதாரணமாக இருந்தாலொழிய மற்றபடி ஆபத்தானதாகும். மூளைப் பகுதியில் இரத்த கசிவு ஏற்படுவதால் முக்கிய செயல்கள் தற்காலிகமாக குறைவுபடும்.

## காயத்தின் வயது

புதிய காயங்கள் மிகவும் சிவந்து ஈரமாகக் காணப்படும். காயங்கள் 12 மணி நேரத்திலிருந்து 24 மணி நேரத்திற்குள் ஏற்பட்டிருந்தால் மிகவும் சிவப்பாகத் தோன்றும். 2 முதல் 3 நாளைக்குள் ஏற்பட்டிருந்தால்; கருஞ்சிவப்பு நிறத்தில் காய்ந்து காணப்படும். காயம் 4 முதல் 7 நாளைக்கு ஏற்பட்டிருந்தால் மேல் தோல் முழுவதும் மூடியிருக்கும். 7 நாள்களுக்குப் பிறகு காய்ந்து உதிர்ந்துவிடும்.

சிராய்ப்பு ஏற்பட்டு அதன் பின் அச்சிராய்ப்பில் பட்டை (scab) உண்டானால் / காயம் ஏற்பட்டு 12 முதல் 24 மணி நேரமானதை கணிக்கலாம்.

காயம் பட்ட இடம் சிவந்தும் / தடித்தும் / நிணநீர் சுரப்பும் காணப்பட்டால் காயம் ஏற்பட்டு ஏறத்தாழ 24 மணி நேரம் முதல் 48 மணி நேரமாகிவிட்டது என கணிக்கலாம்.

காயம்பட்ட இடம் சீழ் கொண்டிருந்தால் காயம்பட்டு ஏறத்தாழ 48 மணி நேரத்திற்கும் மேலாகி விட்டது என கணிக்கலாம்.

வெட்டுபட்ட காயத்தின் மேல்திசு(செல்) வளர்ச்சி 5 முதல் 7 நாட்களில் காணப்படும்.

அடிப்பட்ட வீக்கத்தின் நிற மாற்றத்தைக் கொண்டு எத்தனை நாட்களுக்கு முன் நிகழ்ந்தது என்பதை கணிக்கலாம்.

உடலின் வீக்கம் ஏற்பட்டு சில மணி நேரங்கள் வரை சிவப்பாக இருக்கும். பின்னர் சில மணி நேரம் கழித்து 3 நாட்கள் வரை நீல நிறத்தில் இருக்கும். நான்காவது நாள் கருநீல நிறத்திலிருந்து செம்மண் நிறமாகவும் (Bluish black to brown)/ ஐந்து முதல் ஆறாவது நாள் வரை பச்சை நிறமாக இருக்கும். ஏழாவது நாளிலிருந்து பன்னிரண்டாவது நாள் வரை மஞ்சள் நிறமாக இருக்கும். பின்பு சிறிது சிறிதாக மறைந்து 8 வாரத்தில் பழைய தோலின் நிறத்தை அடையும்.

எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தால் காணப்படும் சிறு இரத்தக் கட்டுகளைக் கொண்டு சம்பவம் நடந்து ஏறத்தாழ 48 மணி நேரத்திற்கு மேலாகி விட்டது என்பதைக் கணிக்கலாம். ஓடிவு பகுதியில் சுண்ணாம்புப் படிவானது 7 நாட்களில் தொடங்கி ஏறத்தாழ 12 நாட்களில் முற்று பெறும். இச்சுண்ணாம்பு கட்டு ஏறத்தாழ 45 நாட்களில் எலும்புடன் இணைந்து விடும்.

பல் விழுந்திருந்தால் பற்குழியிலிருந்து இரத்தக் கசிவு 24 மணி நேரத்திற்குள் நின்றுவிடும். பற்குழி 7 முதல் 10 நாட்களில் நிறைவு பெற்றுவிடும். பற்கூழ் 14 நாட்களுக்குப் பின்னர் மிருதவடைந்து விடும்.

## உயிருடன் இருக்கும் போது ஏற்பட்ட காயம் மற்றும் உயிர் பிரிந்த பின் உண்டான காயம் (ANTEMORTEM AND POST MORTEM WOUNDS)

1) உயிருள்ள ஒருவருக்கு காயம் ஏற்பட்டால் இரத்தக் கசிவு அதிகமாகவும்/ உயிர் பிரிந்த பின் காயம் ஏற்பட்டிருந்தால் இரத்தக் கசிவு குறைவாகவும் காணப்படும்.

2) உயிருடன் இருக்கும் போது ஏற்பட்ட காயத்தால் இரத்தக் குழாய்கள் சேதப்பட்டிருந்தால் அதிலிருந்து வெளிப்படும் இரத்தமானது இதய சலனத்தால் பீறிட்டுச் சிறிது தூரம் வரை பாய்ந்திருக்கும். இந்த இரத்த உறைவினைக் கழுவ முயன்றால் அது எளிதில் வெளிப்படுவதில்லை. ஆனால் இறந்த பின் உடலில் ஏற்படும் குருதத் தேக்கம் கழுவினால்

மறைந்து விடும்.

இரத்த கசிவு தோற்றம்/ திசுக்களின் மறு விளைவினால் தோன்றும் குறி குணங்கள் அல்லது நிற மாற்றங்கள் இருந்தால் இறப்பிற்கு முன் 24 மணி நேரத்திற்குள் காயம் ஏற்பட்டிருக்க வேண்டும்.

3) இறப்பு நேரிட்ட 2 அல்லது 3 மணி நேரத்திற்குப் பின் கொடுக்கப்பட்ட அடிகள் / உயிர் நீங்கிய பின் உடலில் வெப்பம் இருப்பதால் / தசைகள் தளர்ந்து இருப்பதால் தோலின் மீது சிறிய சிராய்ப்புக்கள் போலத் தோற்றமளித்து இறப்பிற்கு முன் ஏற்பட்ட காயம் போல தோன்றும். இறப்பிற்குப் பின் 10 நிமிடங்களுக்குள் ஏற்படுத்தப்பட்ட சிராய்ப்பு இரத்த உறைவுகளைக் காட்டும்.

4) உயிருடன் இருக்கும் போது தோல் / தோலுடன் இணைந்த திசுக்கள் வெட்டுப் பட்டால் தோலின் இயற்கையாக உள்ள ஆற்றலின் காரணமாக வெட்டுபட்ட பகுதி பிரிந்து காணப்படும். ஆனால் இந்த நிலை ஒரு பிணத்தில் ஏற்பட்டால் அவ்வாறு காணப்படாது.

5) உயிருடன் இருக்கும் போது ஏற்பட்ட அடியின் தடிப்பில் சிறிது நேரத்தில் இரத்தக் கட்டு ஏற்படும். பின் ஏறத்தாழ 7 நாட்களுக்குள் வீக்கத்தில் நிற மாற்றம் உண்டாகும். ஆனால் பிணத்தில் இந்நிலை ஏற்படாது.

6) உயிருடன் இருக்கும் போது ஏற்பட்ட காயத்தில் ஏறத்தாழ 5 முதல் 7 நாட்களுக்குள் புதுத் திசுக்களின் வளர்ச்சி காணப்பட்டு தன் இயற்கை நிலைக்குத் தோல் மீண்டும் தென்படும் சூழ்நிலைகள் உருவாகும்.

## துப்பாக்கிக் குண்டுகள் காயம் FIRE ARM WOUNDS

துப்பாக்கி (1) சுழல் ஆயுதம் (Rifled wepons) மற்றும் (2) shot gun - smooth bored wepon நாட்டுத் துப்பாக்கி என்று பொதுவாக இரு வகைப்படும். சுழல் ஆயுதமானது (1) சுழல் துப்பாக்கி (i) Gas and air operated rifles (ii) 0.22 சுழல் துப்பாக்கி (iii) இராணுவ மற்றும் விளையாட்டு சுழல் துப்பாக்கி (2) Single shot target practice பிஸ்டல் (3) ரிவால்வர் (4) தானியங்கி பிஸ்டல்கள் (5) இயந்திர துப்பாக்கிகள் (Machine guns) என வகைப்படும்.

Smooth-bored wepons (1) ஒற்றை குழல் துப்பாக்கி (2) இரட்டைக்குழல் துப்பாக்கி (Double barrel) (3) Slide action (4) Bolt action (5) Semi automatic என வகைப்படும்.

துப்பாக்கிக் காயங்கள் பொதுவாக இரு வகை துளைகளை உண்டாக்குகின்றன. உள் வழிக்காயம் மற்றும் வெளி வழிக்காயம். உபயோகிக்கும் துப்பாக்கி / சுடும் தூரம் ஆகியவற்றைப் பொறுத்து காயம் இருக்கும். காயமானது contact காயம்/ Close range (1 மீட்டர் தூரம் வரை) / Near range (4 மீட்டர் தூரம் வரை)/ Long range (4 மீட்டருக்கு அப்பால்) என வகைப்படும்.

குண்டு தோலில் நுழையும் போது நுழைவாயிலில் வட்ட வடிவில் இரத்தக் கட்டு காணப்படும். குண்டுகளில் பயன்படுத் தப்படும் வேதியல் கூட்டுப் பொருளைப் பொறுத்துதாக்கப்பட்ட இடத்தின் தோலில் நுண்துகள் பொடிகள் சிதறுண்டு/ பச்சைக் குத்திய அடையாளம் (Tattooing) போலக் காணப்படும். குண்டு தோலைத் துளைத்துச் சென்றதால் தோலின் மேல் கருமை நிறம் ஏற்படும். அதே வேளை குண்டு துணியினை துளைத்துத் தாக்குதல் நிகழ்ந்திருந்தால் தோலில் Tattooing காணப்படாது/ புகைப் படிவினைத் துணியின் மேல் காணலாம்.

குண்டு வெளியேறிய வெளிக்காயம் குண்டைவிட பெரிதாக இருக்கும். விளிம்புகள் கிழிந்திருக்கும். கருப்பு படிவம் மற்றும் Tattooing காணப்படாது.

நாட்டுத் துப்பாக்கி காயமானது அதில் உபயோகிக்கும்பொருளைபொறுத்துசிறிய வெட்டுகாயமாகவோ / வெட்டு போன்ற காயமாகவோ / (Punctured) பொத்தல் காயமாகவோ/ கிழிந்த காயமாகவோ இருக்கும்.

## தீக்காயம் மற்றும் வெந்த காயம் BURNS AND SCALOLS

தீக்காயம் நெருப்பினாலும் / இரசாயனப் பொருள்களாலும் / மின்சாரத்தாலும் உண்டாகிறது. இக்காயங்களின் வெளி அமைப்பு / அவை எந்த பொருளால் உண்டாயிற்றோ அது போன்ற பாதிப்பு

இருக்கும்.

கொதிக்கும் எண்ணெய் / ஈயம் / நன்கு சூடேற்றிய எந்த பொருளும் தற்காலிகமாக தோல் மீது பட்டால் சிவந்து பிறகு கொப்புளம் உண்டாகும். அந்த பொருளுடன் இணைப்பு இருந்தால் தோலின் பாகம் கருகி அழிந்து போகும். ஸ்டவ் வெடித்து உடலின் மீது பட்டால் உரோமங்களும் தோலும் கருகிப் போகும். உரோமங்கள் கருகியும் / சுருங்கியும் / தீய்த்தும் / வதங்கியும் / உதிர்ந்தும் அல்லது முழுவதுமாக அழிந்து போகும். மண்ணெண்ணெய் / பெட்ரோல் காயங்களில் அப்பொருளின் வாசனை இருக்கும்.

எக்ஸ்ரே/ ரேடியம் கதிர்களால் ஏற்படும் காயங்கள் சிகப்பாய் உரோமங்கள் உதிர்ந்து காணப்படும். வெகு நேரம் பாதிக்க பட்டால் கொப்புளங்களும்/ சீழ்ப் பிடித்த கொப்புளங்களும் / புண்ணாகி வடு உண்டாகும். அல்ட்ரா வயலட் கதிர்கள் உடலில் பட்டால் சிவந்த சிரங்கு உண்டாகும். கொப்புளங்கள் இருக்காது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஒரே அளவில் காயம் காணப்படும்.

தீக்காயம் முதல் படிநிலை (First degree



burns) / இரண்டாம் படிநிலை (Second degree) / மூன்றாம் படிநிலை (Third degree burns) என வகைப்படுத்தலாம். முதல் படிநிலையில் தோல் மட்டும் புண்ணாகியிருக்கும். மூன்றாம் நிலையில் உள் உறுப்புகளும் சேர்ந்து பாதிக்கப்பட்டிருக்கும். 60% மேல் உடலில் தீப்புண் இருந்தால் காப்பாற்றப்படுவது கடினமாகும். அதிக வெப்ப பாதிப்புக்கு உள்ளான உடல் பாகங்கள் கை, கால்கள் போல அல்லது பாதுகாப்பு நிலையில் காணப்படும். (Pugilistic Attitude-boxingï fencing or defence attitude)

கொதிக்கும் அல்லது வெப்ப நிலையிலுள்ளதிரவப்பொருள்கள்/வாயுப்பொருள்கள் உடலில் ஏற்படுத்தும் காயம் வெந்த புண்கள் (Scalds) ஆகும். 60ocக்கு மேல் கொதிக்கும் நீர் தோலின் கனம் இழப்பிற்குள்ளாகிறது. 70oc க்கு மேல் தோலின் முழுகனம் பாதிப்புக்குள்ளாகிறது.

### தற்கொலை தீக்காயம்

தற்கொலை புரிபவர் தலையிலிருந்து ஊற்றி உடலை நனைத்த பின் தீ வைக்கின்றனர். இதனால் நெருப்பானது விரைவாக/ பரவலாக ஒரே நேரத்தில் ஏற்படுகிறது. தலை / முகம் / முதுகு / மார்பு / தொடைப் பகுதிகளில் கருகிய தீக்காயங்கள் இருக்கும். ஆனால் கால்/ பாதம் மட்டும் பெரும்பாலும் தீக்காயத்திற்கு உட்படாது.

தீயிட்டு கொலை செய்ய முயலும் போது கொளுத்தப்படுபவர் தன்னை பாதுகாத்துக் கொள்ள முயற்சிப்பார். அதனால் உடலில் காயங்கள் காணப்படும்.

### தற்செயலான தீக்காயங்கள்

மண்ணெண்ணெய் அடுப்பு வெடிப்பால் தீயில் கருகி உயிரிழப்பு நிகழ்கிறது. இது போன்ற நிகழ்வுகளில் முகம்/ மார்பு / வயிறு / முன்கை பகுதிகளில் தீக்காயம் ஏற்படும். கண்கள் பிதுங்கி சுருங்கியிருக்கும். கட்டியிருக்கும் உடை கருகி உடலுடன் ஒட்டியிருக்கும். சமையல் எரிவாயு கசிவால் ஏற்படும் விபத்தில் / உடல் முழுவதும் தீக்காயம் இருக்கும். தொழிற்சாலையில் கொதிகலன்கள் விபத்தில் பெரும்பாலும் முகம் / மார்பு / வயிறு / கை / கால்களில் காயம் ஏற்படும்.

இறப்பிற்கு முன் ஏற்பட்ட தீக்காயம் மற்றும் இறந்த பின் ஏற்பட்ட தீக்காயம்

1. இறப்பிற்கு முன் ஏற்பட்ட தீக்காயத்தில் உண்டாகும் கொப்புளங்களைச் சுற்றி இரத்தக் குழாய்களின் இரத்தப் பெருக்கால் தோல் சிவந்திருக்கும். இறந்த பின் ஏற்பட்ட தீக்காயத்தில் அவ்வாறு இருக்காது.

2. இறப்பிற்கு முன் ஏற்பட்ட தீக்காயத்தில் உண்டான கொப்புளங்களிலுள்ள நீர்மப் பொருளில் புரதம்/ குளோரைடுகள்/ இரத்த அணுக்கள் காணப்படும். இறந்த பின் ஏற்பட்ட தீக்காயத்தில் உண்டான கொப்புளங்களில் அவ்வாறு இருக்காது/ காற்றும் குறைந்த அளவு நீர்த்துவரமும் இருக்கும்.

3. இறப்பிற்கு முன் ஏற்பட்ட தீக்காயத்தில் புண்களைச் சுற்றி நொதிகளின் செயல் மிகுந்திருக்கும். இறந்த பின் ஏற்பட்ட தீக்காயத்தில் அவ்வாறு இருக்காது.

4) இறப்பிற்கு முன் ஏற்பட்ட தீக்காயத்தில் பிணம் அழுகும் போது பிணத்தில் கொப்புளங்கள் ஏற்படும். அதில் காற்று மட்டும் தென்படும். இறந்தபின் ஏற்பட்ட தீக்காயத்தில் அவ்வாறு இருக்காது.

## தீக்காயம் ஏற்பட்ட காலம்

தீக்காயம் ஏற்பட்டவுடன் முதலில் சிவந்த நிறம் தோன்றும். ஒரு மணி நேரத்தில் கொப்புளம் உண்டாகும். பகுதி கனமான தீக்காயங்களிலிருந்து கசிவு நீர் 12 முதல் 24 மணி நேரத்தில் வெளியேறத் தொடங்கி விடும். 48 மணி நேரம் முதல் 72 மணி நேரத்தில் பழுப்பு நிறத்தில் பட்டையிடும். 2 முதல் 3 நாட்களில் சீழ்கட்டும்.

ஆனால் 36 மணி நேரத்திற்கு முன் சீழ் கட்டாது. 4 அல்லது 6 நாட்களில் மேலோட்டமாக பட்டை உதிர்ந்துவிடும். ஆழமான காயங்களில் 15 நாட்களில் விழும். இதன் பின் காயத்தில் பரப்பை மூடும்/ புது வளர்ச்சி திசுகள் (Granulation) தொடங்கிவிடும். காயத்தின் தன்மையை பொறுத்து வடு அல்லது தழும்பு ஏற்படும்.

## மின்னலால் ஏற்படும் காயம்

மின்னல் 11/000 மில்லியன் வோல்ட் அல்லது அதிகமான மின்சார சக்தி கொண்டது. மின்னல் மனிதனை நேரடியாகவோ/ side flash மூலமாகவோ அல்லது மற்ற பொருள் மூலம் கடத்தி காயப்படுத்தலோ/ கொல்லவோ செய்யும். மின்னல் காயம் (i) Linear (ii) Filigree தீக்காயம் (iii) Surface தீக்காயம் என வகைப்படும்.

மின்னல் நேரடியாக உடலைத் தாக்கும் போது நரம்பு மண்டல பாதிப்பு/ இதய/ சுவாச மண்டல செயலிழப்பு காரணமாக உயிரிழப்பு ஏற்படும். உடலில் அணிந்திருக்கும் அணிகலன்கள் காந்த சக்தி பெற்று தோலில் தங்கள் அச்சினை பதிக்கின்றன.

மின்னல் உடலைத் தாக்கும் போது அவ்விடம் கருக்கலைந்து / ஒழுங்கற்ற முறையில் காணப்படும். உடலின் பிண விறைப்புத் தன்மை (Rigor Mortis) குறிப்பிட்ட நேரத்திற்கு முன் நீங்கிவிடும். காயங்கள் பெரும்பாலும் தோலின் புறப்பகுதியில் ஏற்படும். எலும்புகள் முறிவு பட்டுக் காணப்படும். மின்னலின் தன்மையைப் பொறுத்து உள் உறுப்புகள் பாதிக்கப்படும். உடைகள் எரிந்து காணப்படும். தலைமுடி கருகியும்/ உடலில் பல தடிப்புகளுடன் தோல் கருகித் தடித்து இரத்தக் கசிவுடன் காணப்படும்.

## மின்சாரத்தால் ஏற்படும் பாதிப்பு



மின்சார தாக்குதலில் ஏற்படும் காயம் / எந்த வகை மின்சாரம் (AC அல்லது DCï AC 4 முதல் 5 மடங்கு ஆபத்தானது)/ மின்சார அளவு / மின்சாரம் பாய்ந்த நேரம் / செல்லும் பாதை ஆகியவற்றைப் பொறுத்து அமையும். பெரும்பாலும் மின்சாரத்தால் நிகழும் மரணம் விபத்து காரணமாக நிகழ்கிறது.

100 வோல்டில் மின்சார தாக்குதல் பாதிப்பு (Electrocution) அரிது/ மரணங்கள் 200 வோல்ட்டுக்கு அதிகமான மின்சாரம் தாக்கினால் நிகழும். 10MA மின்சாரம் வலி மற்றும் தசை பிடித்தலும் (Muscle contracture), 60MAக்கு மேல் ஆபத்தானது / 100MA என்றால் உயிரிழப்பு நேரிடும். அதிக வோல்ட் மின்சாரத்தை தொடுபவரை தூக்கி வீசும். வீட்டில் பயன்படுத்தப்படும்

240 வோல்ட் மின் அழுத்தம் உடலில் பாய்ந்தால் தசையிறுக்கம் (Muscle contracture)உண்டாகும். உயர் மின் அழுத்தக் கம்பிகளைத் தொட்டவுடன் அவ்விடத்தில் உள்ள தசைகளுக்கு பாதிப்பு ஏற்படும். நீண்ட நேரம் மின்கம்பியுடன் தொடர்பு இருந்தால் மரணம் ஏற்படுவது உறுதி.

மின்சார தாக்குதல் காயம் (1) மின்சார mark (Joule mark) - மின்சாரம் உடலில் நுழைந்த இடத்தில் ஏற்படும் காயம் / (2) Flash or Ëark burn- அதிக வெப்பத்தினால் ஏற்படுவது (3) மின்சார burns or Ëlits என்று மூன்று வகைப்படும்.

மின்சாரம் தாக்கப்பட்டவர் நேரடியாக தரையில் விழுந்தால் தலைக் காயம் / எலும்புகளில் காயம் ஏற்படும். தோலில் விரைப்பு உண்டாகும். மின்சாரம் தாக்கிய பகுதியை நுழைவு வாயில் என்றும் வெளி யேறிய பகுதி வெளி வாயில் என்றும் கூறப் படும். நுழைவு வாயில் பகுதியில் நெருப்பு புண்களைப் போல காயம் இருக்கும்/ தோல் பிளவுபடும். சில சூழ்நிலைகளில் அவ்விடத்தில் தசை துணுக்குகள் காணப் படாது. பாதிக்கப்பட்டவர் முகம் வெளுத் தும்/கண்சிவந்தும்/பாவைவிரிந்தும்/தோல் குளிர்ந்தும்/ உயிர்ப்பு நடை தளர்ந்தும்/ உணர்வற்றும் இருப்பர். பிணவிறைப்பு முன்பாக தோன்றும்.

மின் தாக்குதலுக்குப் பின் சிலருக்கு தலைவலி / நடுக்கம் / மயக்கம் / மறதி / பேச முடியாமை / காது கேளாமை / சோர்வு / தசைவலி / மன நோய் ஏற்படும். நரம்பு மண்டலம் பாதித்தால் பக்கவாதம் உண்டா கும். சிலருக்கு கண்புரை (Cataract) ஏற்படும்.

### மரணத்திற்கான காரணம்

ஏதாவது கை அல்லது காலிலிருந்து தலைக்கு மின்சாரம் பாய்ந்தால் மூளை Stemi மேல் Cervical cord பாதிக்கப்படும். கை முதல் கை மின்சாரம் பாய்ந்தால் மேல் Cervical cord பாதிக்கப்படும். இதனால் சுவாச மண்டலம் பாதிக்கப்படுவதால் மரணம் ஏற்படும். கை முதல் கை அல்லது இடது கை முதல் ஏதாவது ஒரு காலுக்கு மின்சாரம் பாய்ந்தால்/ இதயம் வழியாக மின்சாரம் பாய்வதால் மரணம் நிகழ்கிறது. சில சமயம் மரணம் சற்று தாமதித்து நிகழலாம்.

### தூக்கில் தொங்குதல் - HANGING

பெரும்பாலும் தற்கொலையில் நிகழ் வது. மரணம் மூச்சு தடை (AËhyxia), (Venous congestion), இரத்த தேக்கம்/ சுநகடரஒ vagal inhibition, கழுத்து எலும்பு முறிவு (Cervical vertebra fracture) போன்ற காரணங்களால் நிகழும். கழுத்து எலும்பு முறிவு / இதயம் பாதிப்பு ஏற்பட்டால் மரணம் உடனடியாக நிகழும். அல்லது 3 முதல் 5 நிமிடங்களில் நிகழும்

தற்கொலையில் தலையானது முடிச்சு (knot) இருக்கும் பக்கத்திற்கு எதிராக சாய்ந் திருக்கும். கயிறு போன்றவற்றின் பதிவு சாய்வாகவும் முற்று பெறாமலும் இருக்கும். கயிறு போன்றவற்றின் பதிவின் கீழ் உள்ள தோலின் அடியிலுள்ள திசுக்கள் (Subcuta neous tissue) வெண்மையாக / கடினமாக பிர காசத்துடன் காணப்படும். கயிறு பதிவு விளிம்பைச் சுற்றி சிராய்ப்புகள் இரத்த கட்டுகள் அரிதாகக் காணப்படும். பிணம் நீண்ட நேரம் தொங்கிய நிலையில் காணப் பட்டால் கழுத்துத் தமனி பின் உட்புறச் சுவரானது கிழிபட்டிருக்கும்/ இரத்தம் கீழ் பகுதியிலுள்ள கால்களில் தேக்கமடைந்து தோலில் சிறு சிறு இரத்தக் கசிவுகள் ஏற்படும். பார்வை கீழ் நோக்கி இருக்கும். மலம்/ இந்திரியம் வெளியே வந்திருக்கும்.

ஒருவரைத் தூக்கிலிட்டு கொன்றிருந் தால் / தொங்குபவருடைய கால் / கைகள் கட்டப்பட்ட அடையாளங்கள் இருக்கும். உடலில் காயங்கள் காணப்படலாம். தற்காப்பு முயற்சியில் அடையாளங்கள் / காயங்கள் காணப்படும். உடைகள் கிழித்து காணப்படும்.

நீதிய முறையில் தூக்கிலிடுவதில் (Judicial execution) கழுத்து எலும்பு (Cervical vertebra) 3/ 4 எலும்புகளின் முறிவு அல்லது இடம் பெயற்ச்சி காணப்படும்.

கொன்றபின் பின் பிணத்தை தூக்கில் தொங்க விட்டால் / குறி குணங்கள் அனைத்தும் மாறுபட்டிருக்கும் / தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டதன் குறி குணங்களுக்கும் இதற்கும் எந்த தொடர்பும் இருக்காது. மேல் தூக்கிட்ட கயிறு கீழிருந்து

மேல் இழுத்ததன் அடையாளங்கள் காணப் படலாம். தற்கொலையில் கயிறு மேலிருந்து கீழே இழுபட்டிருக்கும்.

## கழுத்தை நெரித்துக் கொல்லுதல் STRANGULATION

கழுத்தை நெரித்துக் கொல்லுதல் மூச்சு தடை மரண வகையாகும். இச்செயலில் கழுத்தைநெரிப்பதற்குக்கயிறு / கம்புபோன் றவற்றைப் பயன்படுத்துவர். கழுத்தை நெரிக் கும் செயலால் கழுத்தைச் சுற்றி பதிவுகள் காணப்படும். முகம் சிவந்தும் / சிறிய இரத் தப் புள்ளிகளுடனும் காணப்படும். கயிறு போன்றவற்றின் பதிவு குறுக்கு வாட்டிலும் கழுத்தைச் சுற்றி தெளிவாக காணப்படும்.

பதிவு விளிம்பைச் சுற்றிச் சிராய்ப்பும் சிறு இரத்தக் கட்டிகளும் காணப்படும். வாய் / மூக்கு / காதுகளிலிருந்து இரத்தக் கசிவு காணப்படும். கழுத்து எலும்பு முறிவு / விலகல் அரிது. சிராய்ப்பு / விரல் நகப் பதிவுகள் / இரத்தக் கட்டு போன்றவை கழுத்திலும் உடலின் பிற பகுதிகளிலும் காணப்படும்.



## சாலை விபத்துக் காயங்கள்

சாலை விபத்தில் வாகனங்கள் வாகனம் பாதசாரிகள் மீது மோதுவதாலோ/ வாகனங்கள் ஒன்றோடு ஒன்று மோதுவ தாலோ / அல்லது பிற பொருள் மீது மோது வதாலோ/ கவிழ்வதாலோ ஏற்படுகிறது. வாகனத்தின் வேகம் / வாகன வகை / விபத் தின் தன்மையைப் பொறுத்து காயங்கள் இருக்கும்.

## வாகனம் பாதசாரிகளின் மீது மோதும் போது

(i) வாகனம் மோதுவதால் உடலில் ஏற்படும் முதன்மைக் காயம் - Primary impact காயம் (the first part struck)

(ii) வாகனத்தால் ஏற்படும் இரண்டாம் நிலை impact

(iii) இரண்டாம் நிலை காயங்கள் (மற்ற பாதிக்கப்பட்டவர் மீது ஏற்படும் காயம்)

## இரயில் விபத்துக் காயங்கள்

இரயில் விபத்துக் காயங்கள் / விபத்துக் காரணமாகவோ / தற்செயலாகவோ / தற்கொலைக்காகவோ இருக்கும்.

இரயில் பாதையில் செல்பவர்கள் மீது இரயில் மோதுவதால் காணப்படும் முதன்மை காயம் உடலின் முன் அல்லது பின் பகுதியில் காணப்படும். இரண்டாம் நிலைக் காயங்கள் தூக்கி வீசப்படுவதாலோ அல்லது சக்கரம் உடலில் ஏறுவதாலோ காணப்படும். இரயில் பாதையை கடக்கும் போது ஏற்படும் விபத்துக்களில் முதன்மைக் காயம் தலையின் பகுதியிலும் தோளிலும் காணப்படும். இரயிலில் இருந்து கீழே விழும் போது பல முனைக் காயங்கள் (multiple Injury) காணப்படும்.

இரயில் உடலில் ஏறுவதால் உடல் பலமாக சிதைவு படும் / உறுப்புகள் துண்டா கும். உள் உறுப்புகள் வெளியே வந்தும் காணப்படும். இரயில் சக்கர பதிவுகள் / அழுக்கு / கிரீஸ் உடலில் காணப்படும். இரயில் மோதலில் (collusion) / தடம் புரளு தலில் எலும்பு முறிவு / தலைக்காயம் / வீக்கம் / வெட்டுக்காயம்/ தீக்காயம் ஏற்படும்.

தற்கொலை நிகழ்வில் காயங்கள் அதிக மாக இருக்கும். தண்டவாளத்தில் கிடப்ப தால் உள் உறுப்புகள் வெளியே வந்தும் / உறுப்புகள் / உடல் / தலை துண்டாகியும் காணப்படும். சக்கரப் பதிவு / அழுக்கு / கிரீஸ் உடலில் காணப்படும்.

கொலை செய்துவிட்டு விபத்து அல்லது தற்கொலைத் தோற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் தண்டவாளத்தில் வைக்கப்படும் உடல்களில் வன்முறை நிகழ்ந்ததற்கான அடையாளங்கள் காணப்படும்.

## கொன்று தண்ணீரில் வீசினால்

கொலை செய்து பின் தண்ணீரில் வீசப்



பட்ட உடலில் மூடிய கண்கள் திறக்காது. தண்ணீரில் பிணம் கவிழ்ந்து கிடக்கும் / நீரால் வயிறு பொருமாது / கை கால்களில் சுருக்கமிருக்காது / நிறம் மாறி முகம் விகாரமாகத் தோன்றும்.

### நீரில் விழுந்து மரணமடைந்தால்

நீரில் விழுந்து இறந்தவரின் வயிறு மேல் நோக்கி உயர்ந்திருக்கும். விரல்கள் / கை / கால்களில் சுருக்கம் இருக்கும் / கண் அடைத் திருக்கும். வாய் பிளந்திருக்கும். நீரில் மூழ்கிய உடல் கோடைக் காலத்தில் 24 மணி நேரத்திற்குள்/ குளிர் காலத்தில் 2 அல்லது 3 நாட்களுக்குள்ளும்/ அரிதாக 1 வாரத்தில் நீரின் மேல் பரப்பிற்கு வந்து விடுகிறது.

ஆண்களை விட பெண்களின் உடல் சீக்கிரம் மிதந்து விடும். பருத்த உடல் சீக்கிரம் மிதந்து விடும். அழுகும் உடலின் மிதக்கும் சக்தி அபரிமிதமாகும். உடலில் கனமான கல் கட்டப்பட்டிருந்தாலும் கூட மேல் பரப்பிற்கு வந்து விடும். கடல் நீரில் உள்ள உடல் விரைந்து மிதக்கத் தொடங்கி விடும்.

### மரணத்திற்கு பின் உடலில் நிகழும் மாற்றங்கள் - POST MORTEM CHANGES

மரணம் என்பது உடம்பழிவு (somatic) முறைப்படியான மற்றும் அணுத்திரண் மஞ் சார்ந்த (molecular) என வகைப்படுத்தலாம். உடம்பழிவு மரணம் (somatic death) என்பது இயங்காத அளவுக்கு உணர்வு முழுவதும் இழந்து போவதால் மூளை / இதயம் / நுரையீரல்கள் முழுமையாக செயல் படாது போய்விடும். அணுத்திரண் மஞ் சார்ந்த மரணம் (Cellular death) என்பது திசுக்கள் (tissues) மற்றும் அணுக்கள் (cells) தனியே இறந்து போவதால் ஏற்படுவ தாகும். இது முக்கியமான செயல்பாடுகள் நின்றுபோன பிறகு / மூன்று மணி நேரத்தி லிருந்து நான்கு மணி நேரத்திற்குப் பின்னரே நிகழ்கிறது.

உடலிலிருந்து உயிர் நீங்கிய பின் உடல் படிப்படியாக தனது வெப்பத்தை இழக் கிறது. வெப்பம் குறைவது உயிரிழப்பு காரணத்தைப் பொறுத்து மாறுபட்டு அமையும். வெப்பத் தாக்குதல் / சிறு மூளைக் குருதி கசிவு / நிமோனியா / மூளை உறை சுழற்சி போன்ற சில நிலைகளில் பிணத்தின் வெப்பநிலை 2 மணி நேரத்திற்கு அதிகரித்துக் காணப்படும்.

இந்தியா போன்ற வெப்ப நாடுகளில் பிணத்தின் வெப்ப நிலை முதல் மூன்று மணி நேரத்திற்கு 31/2oc வீதம் வெப் பத்தை இழக்கிறது. அதன் பின்னர் 15 முதல் 20 மணி நேரத்திற்கு புறச்சூழ்நிலை வெப்ப அளவிற்கு மணிக்கு 11/2 oc வீதம் குறை கிறது.

இரத்த சுழற்சி தடைபடுவதால் இறப்பிற்குப் பின்னர் தோல் விளறிப்போய் விடும். கருமை நிறமுள்ளவர்கள் வெளுத்துக் காணப்படுவர். தோல் தனது நெகிழ்திறன் (Elasticity) இழந்து விடும்.

இறப்பிற்கு பின் 3 முதல் 6 மணி நேரங் களில் பிணவிறைப்பு (Rigor mortis) ஏற்படு கிறது. செயலிழந்த முடங்கிய கை கால் களிலும் ஏற்படுகிறது. முதலில் இயங்கும் தசைகளில் (voluntary muscles) தோன்று கிறது. இயங்காத தசைகளில் பிணவிறைப்பு குறிப்பிட்ட முறையினை பின்பற்றித் தோன் றுகிறது. பிணவிறைப்பு 2 அல்லது 3 நாட்களுக்கு நீடிக்கிறது. அதே வரிசையில் மறைந்துவிடும்.

பிண விறைப்பு முடிந்த பின்னர் உடல் அழுகத்தொடங்கும். திசுக்களில் நிறமாற்றம் (Colour changes in tissues) கோடை காலத் தில் 12-18 மணி நேரத்திலும் / குளிர் காலங் களில் ஓரிரு நாட்களில் தொடங்கும். உள் உறுப்புகளிலும் இந்த நிறமாற்றம் நிகழ்

கிறது. உள் உறுப்புகள் மெலிசாகி/ மெது வாகி உடையும் தன்மையையுடைய பொரு ளாகும். திசுக்களில் துர்நாற்ற வாயு உற்பத்தி யாதல் (**Development of foul smelling gases in tissues**) 18 முதல் 36 மணி நேரத்தில் நிகழத் தொடங்கும். திசுக்கள் நீர் நிலையை அடைதல் (**Liquifaction of tissues**) இறந்த 5 முதல் 10 நாட்களில் தொடங்கும். இவை அனைத்தும் அழுகலில் முக்கிய நிகழ்வாகும்.

சில சூழ்நிலைகளில் இறந்த உடலில் அழுகல் நின்று விடுகிறது. இந்நிகழ்வுக்கு மாறாக மெழுகுத் தன்மை மாற்றம் (**Saponification**) தொடங்குகிறது. உடலில் நன்கு வெள்ளை அல்லது மங்கிய மஞ்சள் நிறத்துடன் கூடிய மெழுகுத் தன்மையிலான பொருள் போன்று உருவாகத் தொடங்கு கிறது. உடலின் இயற்கைத் தோற்றம் / அமைப்பு மாறாது. பாதுகாக்கப்படுவதால் பல ஆண்டுகளுக்குப் பின்னரும் அடையா ளம் காண முடியும்.

உள் உறுப்புகள் குரல்வளை / trachea / இரப்பை / குடல்கள் / மண்ணீரல் / கல்லீரல் / நுரையீரல்கள்/ மூளை/ இதயம்/ சிறுநீரகங் கள்/ சிறுநீர்பை / கர்ப்பபை / தோல் / தசைகள் / எலும்புகள் என்ற வரிசையில் அழுகல் நிகழ்கிறது.

இந்தியாவில் மண்ணில் நேரடியாக புதைக்கப்படும் உடல் ஒரு வருடத்தினுள் எலும்பு கூடாக மாறும். வெப்ப கால நிலையின் எலும்புகள் 5 முதல் 10 வருடங்களில் அழியும்.

### சடலக் கூறாய்வு- AUTOPSY

காயம் எவ்வாறு ஏற்பட்டது? அறியப் படாத நபரின் அடையாளத்தை நிலை நாட்டவும் / மரணம் ஏற்பட்ட நேரத்தை உறுதிபடுத்தவும் / மரணம் இயற்கையாக நிகழ்ந்ததா / தற்கொலையா / விபத்து காரண மாகவோ அல்லது கொலையா என்பதைக் கண்டறியவும்/ மரணத்தின் காரணம் குறித்த ஆதாரங்களை திரட்டவும் சடலக்கூராய்வு (**Post mortem Examination-Autopsy**) செய்யப் படுகிறது. இதில் சடல மேலாய்வு (**External Examination**) / சடல உள் உறுப்புகள் ஆய்வு (**Internal Examination**) செய்யப்படும்.

பரிசோதனை கூடத்தில் இரத்தம் / சிறுநீர் / மலம் / உறுப்புகள் பரிசோதனை செய்யப்படும். மேலும் விஷம் காரணம் என கண்டறியப்பட்ட உடல்களின் உறுப்புகள் இரத்தம் / சிறுநீர் உறுப்புகள் பரிசோதனை மூலம் உறுதி செய்யப்படும்.


**இப்போது பரபரப்பான விற்பனையில்**




விலை ரூ. 200 மட்டுமே




விலை ரூ. 225 மட்டுமே

**வேர்கள் பதிப்பகம்,**

52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001. தொடர்புக்கு : 8148129887



Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001.
Editor **M. GULAM MOHAMED,** Printed by M. Gulam Mohamed at **CHENNAI OFFSET PRINTERS,**
19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.